
கல்கி

KALKI


''தேர்தல் கூட்டங்களிலே யார்
யார் மண்டையை யெல்லாம்
உருட்டி, என்ன வெல்லாம்
பொய் சொன்னீங்களோ?..
அதுக்குப் பிராயச்சித்தமா உங்
களுக்கு முடியிறக்கி, நாக்கு
அலகு குத்தறதா திருச்செந்தூர்
முருகனுக்கு வேண்டிக்கிட்டு
இருக்கேன்!''





ஜப்பானில் பாரதி



அன்புள்ள ஆசிரியருக்கு,

'கல்கி' 30–1–83 தேதி இதழில் நீங்கள் கேட்டவை பகுதியில் ஜப்பான் எழுத்துக்களைப் பற்றிக் கேள்வி கேட்ட ஒரு வாசகருக்கு 'தராசு' அவர்கள் ''ஜப்பானிய மொழியில் அச்சான திருக்குறள் புத்தகத்தை வள்ளியப்பா காட்டினார். தலைகால் புரியவில்லை என்றாலும் தலை கொள்ளாத அளவில் பெருமையாகத்தான் இருந்தது'' என்று பதிலளித்துள்ளார்.

திருக்குறளை ஜப்பான் மொழியில் மொழிபெயர்த்துத் தனது சொந்தச் செலவில் அச்சிட்டு ஜப்பானில் யுனிவர்சிடிக்கும் அமைச்சர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் இலவசமாக வழங்கியவர் எனது பேனா நண்பர் திரு ஷூஸோ மாட்ஸுனகா.

மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மகாநாட்டுக்கு ஜப்பான் நாட்டுப் பிரதிநிதியாக வந்திருந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் தஞ்சாவூர் தட்டு பரிசு பெற்றிருக்கிறார். அது சமயம் குழந்தைக் கவிஞர் திரு அழ. வள்ளியப்பா அவர்கள் இல்லத்துக்கும் சென்று அவரிடம் பேசியுள்ளார்.

அவரது திருக்குறள் மொழிபெயர்ப்புப் புத்தகம் ஜப்பானில் உள்ள இரண்டு மகளிர் பல்கலைக் கழகங்களில் பாடப் புத்தகங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் அவர் மகா கவி சுப்பிரமணிய பாரதியாரை ஜப்பானில் அறிமுகப்படுத்தும் பணியில் இறங்கியுள்ளார். பாரதியாரின் Agni and other poems ஆங்கிலப் புத்தகத்தை ஜப்பான் மொழியில் ''The world of Hinduism'' என்ற பெயரில் மொழி பெயர்த்திருக்கிறார். விரைவில் புத்தகமாக வெளியிட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். அடுத்தபடியாக, பாரதியாரின் குயில் பாட்டையும் ஜப்பான் மொழியில் மொழி பெயர்ப்பதாக எனக்குத் தபால் எழுதியுள்ளார்.

ஜப்பானில் குறளையும் பாரதியையும் பரப்பித் தமிழ்த் தொண்டு செய்து வரும் ஜப்பானியர் 350 திருக்குறள் புத்தகங்களை ஜப்பானிய மொழியில் வெளியிடத் தமக்கு 756,000 யென் செலவானதாகவும் இதைக்கொண்டு தாம் ஐரோப்பிய சுற்றுப்பயணம் செய்திருக்கலாம் எனவும் ஆனால் அதற்குப் பதில் திருக்குறள் நூலை வெளியிட்டு விநியோகிக்கவே விரும்பியதாகவும் எனக்குக் கடிதத்தில் எழுதியுள்ளார். தமது அறுபதாண்டு நிறைவை இப்படிக் கொண்டாடினார் அம்மனிதர். புத்தகங்களை விற்றுக் காசாக்க அவர் விரும்பவில்லை!

''இந்நூலைப் படித்த ஜப்பானியர் 2000 ஆண்டுகளுக்கு முன்பே இப்படி ஒரு ஞானி தமிழ் நாட்டில் இருந்தாரா என்று அதிசயிக்கிறார்கள், இக்காலத்துக்கும் ஏற்ற விதமாக திருக்குறள் அமைந்திருப்பது கண்டு வியக்கிறார்கள்'' என்கிறார் ஷூஸோ.

குமாரபாளையம் எஸ்.எம். முத்து

மனைவி: வீடு தேடி வந்த அந்த ஆளை ஏங்க திட்டி, விரட்டி அனுப்பிட்டீங்க?

எழுத்தாளர்: பின்னே என்னவாம்? அவன் பழைய பேப்பர் கடை ஒன்று ஆரம்பிக்கப் போகிறானாம்! என்னுடைய முழு ஒத்துழைப்பும், ஆதரவும் அவனுக்கு வேண்டுமாம்...!

–ஆர். அரிகோபி





○ எஸ். கே. சந்திரசேகர்
இ. காங்கிரஸ் வேட்பாளர்



○ இரா. அமீர்தராஜ்
அ.தி.மு.க. வேட்பாளர்



○ நெல்லை நெடுமாறன்
தி.மு.க. வேட்பாளர்

திருச்செந்தூரில்

திருச்செந்தூர் கோவிலின் பின்புறமுள்ள செந்திலாண்டவன் விடுதி. அறை எண் 17. காலைச் சிற்றுண்டியை அவசர அவசரமாக முடித்துக் கொண்டிருந்த ஜனதா வேட்பாளர் நெல்லை ஜெயமணியைச் சந்தித்தோம்:

''நீங்க என்னைப் பத்தி எவ்வளவு பக்கம் எழுதுவீங்க... அரைப் பக்கம்... கால் பக்கம்?''

சிரிப்பைப் பதிலாகத் தந்ததும், ஆரம்பிக்கிறார்.

''நான் இந்தத் தேர்தலில் ஜெயிப்பேன் என்ற எண்ணத்தில் நிற்கவில்லை. சட்டமன்றத்தில் ஒரு தியாகி கூட இல்லை. நாட்டு நிலைமைகளை எடுத்துச் சொல்கிறேன் கேட்டுக் கொண்டு எனக்கு வோட்டுப் போட்டால் போடட்டும்; இல்லை யென்றால் வருத்தப்பட மாட்டேன். கிராமங்களில் பெண்கள் கழுத்தில் ஒரு மணி தங்கம் கிடையாது. வறுமை கோர தாண்டவம் ஆடுகிறது. இதற்கெல்லாம் காரணம் மது அரக்கன்தான்.'' ஆவேசமாகப் பேசுகிறார் ஜெயமணி. அவரிடம் இருப்பது ஒரே ஒரு கார்தான். காலை ஏழு மணிக்கு ஆரம்பித்தால் இரவு ஒன்பது மணி வரை பிரசாரம் செய்கிறார். பிறகு பொதுக் கூட்டம். ஒரு கூட்டத்தில் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் பேசுகிறார். கூட்டம் குறைவென்றாலும் அவ்வளவு பேரும் நின்று கேட்டுவிட்டுப் போகிறார்கள்.

ஜெயமணி சொல்வது மாதிரி அ. தி. மு. க.வின் அதிகார பலமும், பண பலமும் தொகுதியெங்கும் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. எல்லா ரேஷன் கடைகளிலும் தேர்தல் முடியும்வரை ஒழுங்காக மண்ணெண்ணெய், அரிசி கிடைக்க வேண்டும் என்பதற்காக மாவட்ட நிர்வாக அதிகாரிகள் முகாமிட்டு இருக்கிறார்கள். திருச்செந்தூரில் 24 மணி நேரமும் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. பெரியகுளம் வெற்றியில் முக்கிய பங்குவகித்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இங்கும் தனது வேலையைத் திறமையாகச் செய்து கொண்டிருக்கிறது. ஒரு குழாய்க் கிணறு போட கிட்டத்தட்ட ரூ. 8000 வரை செலவாகிறது. உடன்குடி என்னும் சிறிய நகரத்தில் மட்டும் 63 குழாய்க் கிணறுகள் போடப்பட்டுள்ளன. சங்கிலித் தொடர் பத்திரிகை அதிபர் ஒருவர் பணத்தைக் கொட்டிவிட்டுச் செல்கிறார். எம். ஜி. ஆர். கைப்பணத்தைச் செலவழித்துச் சத்துணவு போடுவது மாதிரி மக்களிடையே எண்ணத்தை ஏற்படுத்துகிற போஸ்டர்கள் (அதுவும் பள்ளிக்கூடங்களின் அருகில்). ஜெயலலிதா—வருகிறாராமே... என்று ஆர்வத்துடன் கேள்வி. தொகுதி யெங்கும் எம். ஜி. ஆர். படங்கள் (தியேட்டர் அதிபர்கள் மறுக்க முடியுமா?)

தேரடித் தெருவில் அ. தி. மு. க. வேட்பாளர் அமீர்தராஜைச் சந்திக்கிறோம். 'சுப்பிரமணியம் பிள்ளை மரணம் எங்கள் வெற்றியைப் பாதிக்காது' என்கிறார். காரணத்தைக் கேட்டால் சொல்ல மாட்டேன் என்கிறார். எம். ஜி. ஆர். இருமுறை தமது விஜயத்தைத் தள்ளிப் போட்டும், அமீர்தராஜுக்கு எந்தக் கோபமும், வெறுப்பும் இல்லை. ''எங்கள் தலைவர் வராமலே நாங்க ஜெயிப்போம் ஸார்!' எங்க தலைவர் வந்தா மத்தவங்களுக்கு டெபாசிட்டே போயிடும்'' என்று கூறி, அவசர அவசரமாகக் காரில் கிளம்புகிறார்.

கோஷ்டி பூசலின்றி இந்திரா காங்கிரஸ் திருச்செந்தூர் தொகுதியில் ஒற்றுமையாக வேலை செய்கிறதென்றால் அதற்குக் காரணம் தலைவர் மரகதம் சந்திரசேகர்தான். இந்தத் தொகுதியில் செல்வாக்குப் பெற்றுள்ள கே.டி. கோசல்ராம், எம். எஸ். செல்வராஜ், செல்லபாண்டியன் போன்றவர்களை ஒற்றுமைப் படுத்திப் பிரசாரத்தைத் தீவிரப்படுத்த திருமதி சந்திரசேகர் ஒருவரால்தான் முடியும் என்று காங்கிரஸ் தொண்டர்கள் கூறுகிறார்கள்.

சாகுபுரம் விடுதியில் தங்கியிருந்த கே.டி. கோசல்ராமைச் சந்தித்தபோது, ''சுப்பிரமணிய பிள்ளையின் மரணத்திற்கு வீரப்பன் தான் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டும். இவர்கள் செய்யும் அதிகார துஷ்பிரயோகங்களைப் படமெடுத்துக் கொண்டிருக்கிறேன். (காமிராவைக் காண்பிக்கிறார்)'' என்றார்.

காங்கிரஸ் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களில் குறிப்பிடும்படி சொல்லப்படுபவர் சுப்பிரமணிய ஆதித்தன். 1977ல் ஜனதா வேட்பாளராகப் போட்டியிட்டு, 17000 வோட்டுக்கள் பெற்றவர். இவரது தற்போதைய பணி, கிராமங்களில் இருக்கும் கா. கா. தே. கா. தொண்டர்களை காங்கிரஸுக்குப் பணியாற்ற வேண்டுவதுதான். தி. மு. க., அ. தி. மு. க. கா., கா. தே. கா. போன்றவற்றுக்கு ஏன் வேலை செய்யக்கூடாது என்பதற்கு இவர் மணிக் கணக்காகப் பேசி,







○ எம். முத்து
கா.கா.தே.கா. வேட்பாளர்


○ குமரி அனந்தன்

○ மரகதம் சந்திரசேகர்

நமது நிருபர்



○ நெல்லை ஜெயமணி



தொண்டர்களைத்திருப்திசெய்வதைப்பார்த்த போது, மனிதர் 'படா கில்லாடிதான்' என்று தோன்றியது. காங்கிரஸ் வெற்றி பெற முடியாவிட்டாலும், இரண்டாவது இடத்திற்காவது வரவேண்டும் என்பதற்குத் தீவிரமாகப் பணியாற்றுகிறார் சுப்பிரமணிய ஆதித்தன். நியாயமாகப் பார்த்தால் இவரைத்தான் வேட்பாளராக்கியிருக்கவேண்டும். ஆனால் அது பற்றி எந்த வித வருத்தமும் இல்லாமல் பணியாற்றுகிறார்.

காங்கிரஸ் வேட்பாளர் எஸ். கே. சந்திரசேகர், இளம் வக்கீல். தமக்காக கே.டி.கே., செல்லபாண்டியன் போன்றவர்கள் உழைப்பது பெரிய பலம் என்கிறார்.

தி. மு. க. வைப் பொறுத்தவரை பணிகள் இன்னும் (18–2–83) முழுமையாக ஆரம்பமாகவில்லை. தினகரன் பத்திரிகை அதிபர் கே. பி. கந்தசாமி பிரசாரத்தைப் பொறுப்பேற்று நடத்துகிறார். ''சுப்பிரமணிய பிள்ளை கொலை செய்யப்பட்டது சம்பந்தமாகத் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்காத எம். ஜி. ஆர். அரசை மக்கள் நன்கு புரிந்து வைத்திருக்கிறார்கள். அரிசிப் பிரச்னை. மின்சாரப் பிரச்னை ஆகியவற்றால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அ. தி. மு. க வின் எதிர்ப்பு வோட்டுக்கள் சிதறாமல் எங்களுக்குத்தான் விழும்'' என்கிறார்கள்தி.மு.க.வினர். முஸ்லீம் லீக் ஆதரவிருப்பதால் கணிசமான முஸ்லிம் வோட்டுக்கள் விழலாம்.

வேட்பாளர் நெல்லை நெடுமாறன் ஆழ்வார் திருநகரில் பஞ்சாயத்துயூனியன் தலைவராகப் பணி புரிந்து பல நல்ல காரியங்கள் செய்திருக்கிறார். ஆனால் தனிப்பட்ட மனித பலவீனங்கள் இவருக்கு எதிராகத் திருப்பப்பட்டுப் பிரசாரம் செய்யப்படுகிறது. உடல் நிலை சரியாக இல்லாவிட்டாலும் கடைசிக் கட்

○ சுப்பிரமணிய ஆதித்தன்



○ கே. டி. கோசல்ராம்



○ சத்துணவு வோட்டு வாங்கித் தருமா



டத்தில் கருணாநிதி பிரசாரம் செய்வார் என்று சொல்கிறார்கள்.

இந்தத் தேர்தலில் கா. கா. தே. கா. போட்டியிடுவது அ. தி. மு. க. எதிர்ப்பு வோட்டுக்களைப் பிரிக்கத்தான் என்று மற்றக் கட்சியினர் கூறினாலும் குமரி அனந்தன் அதை மறுத்துப் பேசுகிறார். ''சுப்பிரமணிய பிள்ளையின் மரணம் முக்கியமான பிரச்னை. இந்த மரணத்தைக் கொலை என்று சட்ட மன்றத்தில் சொன்னவனே நான்தான். மேலும் அந்தக் கொலையை கண்ணால் பார்த்த தோட்டி ஆறுமுகமும் மர்மமான முறையில் இறந்திருக்கிறார். இதற்கும் விசாரணை வைக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருவது எங்கள் கட்சிதான். மேலும் இந்தத் தொகுதியில் தனிப்பட்டமுறையில் எங்கள் கட்சிக்கு நல்ல செல்வாக்கிருக்கிறது. நான் பாராளு மன்றத்துக்குப் போட்டியிட்டபோது 16000 வாக்குகள் இந்தத் தொகுதியில் பெற்றேன்''

கா. கா. தே. கா. வேட்பாளர் முத்து பி.ஏ. வரை படித்துள்ள 25 வயதான இளைஞர். இரண்டு மாதங்களுக்கு முன்தான் திருமணம் நடைபெற்றது.

திருச்செந்தூர், உடன்குடி, மற்றும் ஆழ்வார்திருநகரியைச் சேர்ந்த சில பகுதிகளை உள்ளடக்கிய இந்தத் தொகுதியில் கயேச்சைகள் 18 பேர் களத்தில் நிற்கிறார்கள். பெரிய கட்சிகளின் சார்பில் நிற்கும் ஐந்து வேட்பாளர்களும் நாடார் சமூகத்தினர் தான். கிட்டத்தட்ட 1,37,000 வாக்காளர்கள் கொண்ட இந்தத் தொகுதியில் 60000 பேர்கள் நாடார்கள். அதற்கடுத்த படி முஸ்லிம் சமுதாயம். கிறிஸ்தவ மீனவர்களும் கணிசமான அளவில் இருக்கிறார்கள்.

1977ல் இவ்வளவு வோட்டுக்கள் வாங்கினோம், 1980ல் இவ்வளவு வோட்டுக்கள் வாங்கினோம். எங்கள் கட்சி இப்போது மேலும் நன்கு வளர்ந்திருப்பதால் அதிக வோட்டுக்களைப் பெறுவோம் என்று ஒவ்வொரு கட்சியும் கூட்டிக் கழித்துச் சொல்லிக்கொண்டிருந்தாலும், அந்த அடிப்படையில்தான் வோட்டுக்கள் விழும் என்று கூற முடியாத நிலை இருக்கிறது. காரணம்: ஆந்திர, கர்நாடக தேர்தல் முடிவுகள்தான். உள்ளூர மக்கள் மனத்தில் புகைந்து கொண்டிருக்கும் எண்ணங்கள் வாக்குகள் எண்ணி முடிக்கப்படும் வரை தெளிவாவதில்லை. திருச்செந்தூர் தொகுதி வாக்காளர்கள் எந்தெந்தக் கட்சிகளை சம்ஹாரம் செய்யப்போகிறார்கள் என்பது சுப்பிரமணிய சுவாமிக்கே வெளிச்சம்.

புகைப்படங்கள்: **எஸ். சந்திரமௌலி**

வாக்காளர் பேசுகிறார்கள்



''இந்தத் தேர்தல்லே என் வாக்கு ஜனதாவுக்குத்தான். நெல்லை ஜெயமணி சிறந்த காந்தியவாதி. ஜனதாதான் நல்ல கட்சி.

○ பச்சை நாடார் (விவசாயி)

1977ல் ஜனதா ஆட்சிக் காலத்தில் அவர்கள் நடத்திய ஆட்சி எனக்குப் பிடித்திருந்தது. ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகாதவர்கள் ஜனதா கட்சியினர்தான்,



○ பி. தர்மலிங்கம் (விவசாயி)



அ. தி. மு. க. வேட்பாளர் அமிர்தராஜ் எங்கள் ஊர்க்காரர். ஏதாவது பிரச்னை என்றால் சுலபமாக அணுக முடியும். கே. பி. கந்தசாமி தி. மு. க. சார்பில் நின்றிருந்தால் அவருக்குத்தான் போட்டிருப்பேன். இப்போது என் வோட்டு அ. தி. மு. க.வுக்குத்தான்.

○ பரமசிவம் (தொழிலாளி)



''இன்னு சாமி அரிசி இன்னு விலை விக்குது. நாங்க எம். ஜி. ஆரை நம்பினோம். இனி நம்புவது பிரயோஜனமில்லை ராஜா.''

○ அருவத்தம்மாள்



குழந்தைகளுக்கு சத்துணவு போட்ட ஒரு விஷயத்துக்காகவே அ. தி. மு. க.வுக்கு வோட்டுப் போடணும் ஸார்.

○ சண்முகசுந்தரம் கண்டிராக்டர்

எங்க வீட்டுக்காரருக்கு வாரம் 40 ரூபாய்தான் கூலி வருகிறது. அரிசி கிலோ நாலரை ரூபாய் விற்கிறது. நாங்க வாரத்திலே ரெண்டு நாள் உண்ணா விரதம் இருக்கோம். இவர் (எம். ஜி.ஆர்.) 10 மணியில் இருந்து 5 மணி வரை உண்ணா விரதம் இருக்கிறாராம். வயிறு எரிகிறது. அந்த மனிதர் இந்தப் பக்கம் வரட்டும்.... (போட்டோ வேண்டாம் ஸார் என்று கண்டிப்பாகச் சொல்கிறார்.)

○ ஆமீஷா (குடும்பப் பெண்மணி)



நாங்க பரம்பரை பரம்பரையாக காங்கிரஸுக்குத்தான் ஓட்டுப் போட்டு வருகிறோம். காங்கிரஸ்காரர்கள்தான் நாட்டை ஒற்றுமையாக வைத்துக் கொள்ள முடியும்.

○ ஞானமணி பெட்டிக்கடை.



இந்த ஆட்சியிலே உருப்படியா என்ன பண்ணியிருக்காங்க. இரண்டு கழகங்களும் சரியில்லே. என் வோட்டு காங்கிரஸுக்குத்தான்

○ கோபாலகிருஷ்ணன்
பத்திரிகை ஏஜண்ட்



எங்கள் மீனவப் பெண்களைப் பற்றி அ. தி. மு. க.வினர் கேலியாகப் பேசுகிறார்கள். அவர்கள் எம். ஜி. ஆருக்கு ஏங்குபவர்கள் போல் சித்திரிக்கப்படுகிறார்கள். இந்தத் தேர்தல்லே மீனவர் வோட்டுக்கள் தி. மு. க.வுக்குத்தான் விழும்.

○ பந்தலின் (மீனவர்)



தேசிய எண்ணம் கொண்ட முஸ்லிம் பெருமக்கள் உள்ள இடம் காயல்பட்டிணம். அவர்கள் நிச்சயம் காங்கிரஸுக்குத்தான் வோட்டுப் போடுவார்கள்.

○ ஹாஜி வி.எம்.எஸ். லப்பை
தொழிலதிபர்




குமரி அனந்தன் மாதிரி அப்பழுக்கற்ற தலைவர் தமிழ்நாட்டில் இல்லை. மேலும் இந்த சுப்பிரமணிய பிள்ளையின் மரணம் விஷயத்தில் கா. கா. தே. கா. போராடிய அளவு எந்தக் கட்சியும் போராடவில்லை. என் வோட்டு கா. கா. தே. கா.வுக்குத்தான்.

டேவிட் ○
பெட்டிக்கடை



திருச்செந்தூர்லே கொலை(?) நடந்ததுன்னு எம். ஜி.ஆர். என்ன ஸார் பண்ணுவார்? அரிசிப் பிரச்னை வரதுக்குக் காரணம் வரட்சிதான். எம். ஜி. ஆர். கிடையாது. சிறிய வயசிலிருந்தே எம். ஜி. ஆர்.ன்னு எனக்குப் பிடிக்கும். ஆகவே ஓட்டு அ. தி. மு. க.வுக்குத்தான்.

○ ஜெஜெயவாஸந்தி எம்.ஏ.
(ஆசிரியை)



இந்திரான்னு எனக்கு ரொம்பப் பிடிக்கும். அந்த மாதிரி தலைவி கிடைக்கிறது ரொம்ப கஷ்டம். இந்திரா காங்கிரஸுக்குத்தான் வோட்டுப் போடணும்.

○ ஜோஸபைன் மேரி
(குடும்பத் தலைவி)



''இந்த இரண்டு விரலில் எதையாவது ஒன்றைத் தொடு.''

''எதுக்கு விரல் ஜோஸ்யம்?''

''திருச்செந்தூர் தேர்தலுக்கு முன் கட்சி மாறலாமா? பின்னே கட்சி மாறலாமா என்று பார்க்க!''

இன்றைய ஸ்டில் - அன்றைய நினைவு!

சில சமீப கால திரைப்பட ஸ்டில்களைப் பழம் பெரும் டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமியிடம் காட்டினோம். அவற்றைப் பார்த்ததும் அவருக்கு ஏற்பட்ட பழைய நினைவுகள்:



○ டைரக்டர் ஏ.எஸ்.ஏ. சாமி

பொதுவாக இந்தக் காலம் அந்தக் காலம் என்று பிரித்துப் பேசுவது எனக்குப் பிடிக்காது. காரணம்? கலைஞர்கள் எல்லோருமே எந்தக் காலத்திலும் ஒரே விதம்தான்.

எனினும் உங்கள் விருப்பத்திற்கிணங்கப் பழைய நினைவுகளைச் சொல்கிறேன்.

தந்திரக் காட்சி

நான் இயக்கிய முதல்படம் ராஜகுமாரி. அது சமயம் 'இன்விஸிபிள் மேன்' என்ற ஆங்கிலப் படம் பார்த்து ரொம்பவும் இன்ஸ்பயர் ஆகியிருந்தேன். அப்படத்தில் ஒரு டாக்டர் தலை முழுவதும் பாண்டேஜுடன் இருப்பார். அவர் நோயாளிகளைக் கவனித்துவிட்டுத் தமது பாண்டேஜை அவிழ்ப்பார். அவிழ்க்க அவிழ்க்க அவருக்குத் தலையே இருக்காது. வெறும் முண்டமான உடல்! மயிர்க்கூச்செறியும் காட்சி.

'ராஜகுமாரி'யில் மந்திரக்கோல், பறக்கும் கம்பளம், மாய மோதிரம் போன்ற டிரிக் ஷாட்டுகளை வைத்தோம்.

ஒரு தந்திரக் காட்சி:

மந்திரவாதியாக நடிக்கும் எம். ஆர். சாமிநாதனை ஹீரோவின் நண்பராக நடிக்கும் எம். என். நம்பியார் பின்தொடர்வார். நம்பியார் தனது மாய மோதிரத்தைத் திருகியதும் மாயமாக மறைந்து சாமிநாதனைப் பின்தொடருவது போலக் காட்ட வேண்டும்.

சாமிநாதன் நடக்கும்போது அவருக்குப் பின்னால் வெறும் காலடிகள் மட்டும் தொடர்வதாகக் காட்டினோம். பலத்த அப்ளாஸ்.

அராபியன் நைட்ஸ் கதையொன்றில் பறக்கும் குதிரை என்னை வெகுவாகக் கவர்ந்தது. நான் கதை வசனமெழுதிய 'மோகினி' படத்தில் வில்லனாக நடிக்கும் ஆர். பால சுப்பிரமணியம் ஒரு விந்தையான குதிரை செய்வார். அவர் அதைத் தயாரிக்கும்போதே விஞ்ஞான ரீதியில் குதிரையின் உறுப்புகள் இயற்கையான முறையில் இயங்குகின்றனவா என்று சோதித்துப் பார்ப்பார்.

ஒரு ஸ்விட்சை பால சுப்பிரமணியம் தட்டியதும் குதிரை பறப்பது போலத் திரையில் காட்டியபோது மக்கள் பிரமித்தார்கள். அந்தக் காலத்திலேயே இக் குதிரையைச் செய்ய நாற்பதாயிரம் ரூபாய் செலவாயிற்று!

விமானத்தில் பறந்து வானைப் படமாக்கி 'ஆப்டிகல் பிரிண்டிங்' முறையில் இந்தக் காட்சியை எடுத்தோம்.

✕ தந்திரக் காட்சி [நினைவிருக்கா]



மிருகங்கள் நடிக்கும் காட்சி

மிருகங்களை வைத்துப் படமாக்கும்போது டைரக்டருக்குக் கொஞ்சம் கற்பனா சக்தி தேவை.

மர்மயோகியில் எம். ஜி. ஆரும் எஸ். வி. சகஸ்ரநாமமும் எதிர் எதிராகக் குதிரையில் வந்து கட்டியுடன் சண்டை போடுவதாக ஒரு காட்சி. கோவையில் படமெடுத்துக் கொண்டிருந்தபோது வெய்யில் குறைந்தது. அப்போது ஒரு ஓரமாகக் கட்டப்பட்டிருந்த ஒரு கறுப்புக் குதிரை (படத்தில் எம். ஜி. ஆருடையது.) இரண்டு கால்களையும் தூக்கிக் கனைத்தது. சட்டென்று இந்த அரிய காட்சியையும் படமாக்கி வைத்துக் கொண்டோம். சான்ஸ் மெட்டீரியல்.

வில்லியாக நடிக்கும் அஞ்சலி தேவி அரியாசனம் ஏறுகிறார். ஒரு சாதாரண குதிரைக்குக் கூட அஞ்சலி தேவி அரியாசனம் ஏறியது பிடிக்கவில்லை என்பதை உணர்த்துவது போல் குதிரை கனைத்துக் கால்களைத் தூக்கும் காட்சியைக் காட்டினோம்.



✖ ஸ்டண்ட் சீன் [உல்லாச ஜோடி]

ஸ்டண்ட் சீன்கள்

'ராஜகுமாரி' படத்தில் எம். ஜி. ஆரும் சாண்டோ சின்னப்பா தேவரும் கைகளில் முள் கத்திகளை மாட்டிக் கொண்டு கடுமையாகப் போரிடுவார்கள். இதில் சடுகளவு பிழை நேர்ந்திருந்தால் கூட பேராபத்தில் முடிந்திருக்கும். இதே போலத்தான் கத்திச் சண்டை போடுவதும்.

'அபிமன்யு' படத்தில் மதுக்கரை பகுதி மலையிலிருந்து ஒரு ஸ்டண்ட் வீரரைத் தரையில் குதிக்க வைத்து அசலாகவே ஒரு காட்சி எடுத்தோம். இது போன்ற காட்சிகளைத் தந்திரக் காட்சிகளாகவும் எடுகக முடியும். ஆனால் நேரிடையாக எடுக்கும்போது கிடைக்கும் திரில் தந்திரக் காட்சிகளில் கிடைப்பதில்லை.

காதல் காட்சி

'ஹரிதாஸ்' படத்தில் ஒரு காட்சி.

எம். கே. தியாகராஜ பாகவதரை மயக்க டி. ஆர். ராஜகுமாரி மயங்கி விழுவது போல நடிப்பார். எம். கே. டி. பயந்துபோய் ராஜகுமாரியின் நெஞ்சில் காதை வைத்து இதயத் துடிப்பைப் பார்ப்பார். இதை ஆபாசம் என்று அக்காலத்தில் ரசிகர்கள் கூச்சல், கலாட்டா செய்தார்கள். இன்று....?

கவர்ச்சிக் காட்சிகள்

'ராஜகுமாரி' படத்தில் நடிக்க இலங்கையிலிருந்து தவமணி தேவி என்ற கவர்ச்சி நடிகை வந்திருந்தார். ஒரு காட்சியில் அவர் டி.எஸ். பாலையாவை வளைத்துப் போடக் கவர்ச்சிகரமாக நடனமாட வேண்டும்.

நாங்கள் இக்காட்சிக்காக ஸ்பெஷலாக உடை தைத்திருந்தோம். ஆனால் தவமணி தேவி தாமே ஒரு கவர்ச்சி உடையுடன் மேக்கப் போட்டுக் கொண்டு செட்டுக்கு வந்து விட்டார்.

அது எதையும் மறைக்காத ஒரு ஆபாச உடை.

''அம்மா, தமிழ் நாட்டு ரசிகர்களுக்கு ஆபாசம் பிடிக்காது. இந்த உடை வேண்டாம்'' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம்.

''முடியாது. இந்த உடையோடுதான் நடிப்பேன்'' என்றார் தவமணி தேவி பிடிவாதமாக.

தயாரிப்பாளர் ஜுபிடர் சோமுவுக்கு கார் அனுப்பி அவசரம் அவசரமாக வரவழைத்தோம். அவரிடமும் தவமணி தேவி விடாப்பிடியாக டிரஸ்ஸை மாற்ற மாட்டேன் என்றார்.

''எனக்கு இயற்கையாக நல்ல உடலமைப்பு இருக்கிறது. அதைத்தான் காட்டுகிறேன்.



✖ மிருகங்கள் நடிக்கும் காட்சி (முரட்டுக்காளை)

செயற்கை எதுவுமில்லையே?'' என்று வாதாடினார் தவமணி தேவி.

வேறு வழியில்லாமல் அவரது உடையின் மார்பகப் பகுதியில் ஒரு ரோஜா மலர்ச் செண்டைப் பொருத்தி உடலுறுப்புக்கள் தெரியாமல் படமெடுத்து முடித்தோம்.

இப்போதும் ஏதாவது ஒரு படத்தில் நடிகையொருவர் ஆடைக் குறைப்பு செய்து நடித்தால் எனக்கு அன்று தவமணி தேவி செட்டில் செய்த கலாட்டா நினைவுக்கு வரும்!

- பேட்டி: மன்னை சௌரிராஜன்

✖ காதல்-கவர்ச்சி [நம்பினால் நம்புங்கள்].



கல்கி



1983 பிப்ரவரி 27
துந்துபி மாசி 15
மலர் : 41 இதழ் : 31

தவிர்க்கக் கூடிய துயரங்கள்

தவிர்க்கக் கூடிய துன்பங்களுக்கும் பல சந்தர்ப்பங்களில் அரசு தனது முன்யோசனையற்ற செயல்களால் வரவேற்பிதழ் வாசித்தளிக்கிறது.


அஸ்ஸாம் : அரசியல் சாசனப்படி குறிப்பிட்ட கால இடைவெளியில் தேர்தல் நடத்தியே ஆகவேண்டும் என்பதைக் காரணமாக்கி பிரதமர் தம்மை ஜனநாயகவாதியாகக் காண்பித்துக்கொள்ளலாம். ஆனால் அஸ்ஸாம் இயக்கத்தின் அடிப்படையே பிரஜா உரிமை, வாக்காளர் பட்டியல் பற்றியதாக இருக்கும்போது இத்தேர்தல் எப்படி அர்த்தமுள்ளதாகும்? தேர்தலை நடத்துவதில் காட்டிய ஆர்வத்தை அஸ்ஸாம் பிரச்னையைத் தீர்ப்பதில் காண்பித்திருக்கலாமே? அதுதான் இல்லையெனில், குறைந்தபட்சம் ஓராண்டுக்குத் தேர்தலை ஒத்திப்போட சாசனத் திருத்தத்துக்கு எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோரிப் பெற்றிருக்கலாம். அஸ்ஸாம் இயக்கத் தலைவர்களுக்கோ இந்தத் தேர்தலையே அடிப்படையாக்கி ஒரு தார்மீக வெற்றி பெற அரிய வாய்ப்பிருந்தது. 'கிளர்ச்சி ஏதும் வேண்டாம்; தேர்தலைப் பகிஷ்கரிப்பதுடன் நிற்போம்' என்று அறிவித்திருந்தால் அமைதிச் சூழலிலும் காலியாகத் திரும்பும் வோட்டுப் பெட்டிகளே மக்களின் மனநிலையைத் தெளிவாக்கியிருக்கும். ஆனால் இரு தரப்பினரின் பிடிவாதமும் ஓங்க ஆயிரக்கணக்கில் சகோதரர்களை இழந்து நெஞ்சு கனக்க நிற்கிறோம்.

நாகர்கோயில் : போலீஸ் சுட நேர்ந்ததும் இளைஞர் குமாரின் மரணமும், பஸ்கள், குடிசைகளுக்குத் தீவைப்பும் கல்லெறிதலும் இதர கலவரங்களும் தவிர்த்திருக்கக் கூடிய விசனங்களே. ஹிந்து மறுமலர்ச்சி மாநாட்டுக்கும் ஊர்வலத்துக்கும் முதலில் அனுமதி வழங்கிவிட்டுத் திடுமென ரத்துச் செய்து மாநாட்டை ஒத்திப்போடுமாறு அதிகாரிகள் கோரியது எவ்விதத்திலும் நியாயமேயல்ல. இதையொட்டி ஏராளமான தலைவர்களும் தொண்டர்களும் தடுப்புக் காவலில் வைக்கப்படவே உணர்ச்சிகள் பொங்கி, தடை உத்தரவை மீறி ஊர்வலம் நடந்தது. தொடர்ந்து பல அசம்பாவிதங்களுக்கும் வழிவகுத்துவிட்டது. வழக்கம்போல் ஆட்சியாளர் ஆர். எஸ். எஸ். பூச்சாண்டி காட்டினாலும் மக்கள் ஏமாறப் போவதில்லை. இந்த நாகர்கோயில் மகாநாட்டினால் மார்ச் முதல் தேதி மண்டைக்காட்டில் நடக்கவிருக்கும் விழாவில் வன்முறை தாண்டவமாடும் என்பது நாகர்கோயில் மாநாடு நடப்பதற்கு இரு தினங்கள் முன்புதான் அதிகாரிகள் மூளையில் திடீரென்று உதயமாயிற்று எனில் அவர்களுடைய முன்யோசனையற்ற செயல்களுக்கு அதுவே போதிய சான்றாகிறது. அல்லது சிலர் சந்தேகிப்பது போல் திருச்செந்தூர் தேர்தலில் ஆளும் கட்சிக்கு ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் வாக்குகளைப் பெற்றுத் தருவதுதான் இந்தத் தடை உத்தரவின் உள்நோக்கமெனில் அதைவிடக் கேவலம் வேறென்ன இருக்க முடியும்?

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்


ஜனநாயகம்


தண்ணீர்ப் பஞ்சம்
தமிழக மக்கள்
மின் வெட்டு
பயப்படாதே!— இப்படியே பழகிப் போயிடும்!


இரட்டை இலைக்கு ஓட்டு போடுங்கள்

அத்தியாயம் 7

நடேச முதலி மெல்ல ராவுத்தர் வீட்டை நெருங்கினார். தண்ணித் தொட்டித் தெருவின் திருப்பத்திலேயே ராவுத்தர் வீடு இருக்கிறது.

தெரு நடையிலிருந்து குறுகலாய்ச் செங்குத்தான மாடிப் படிகள் போயின. முதல் மாடி ராவுத்தரிடம் வேலை செய்த முஸ்லீம் இளைஞர்களுக்கான தங்குமிடம். கீழே லாரிக் கம்பெனி. வேறு ஏதோ கம்பெனி. நடேச முதலி படியேறினார். கதவு அடைத்திருந்தது. அழைப்பு மணியை அழுத்தினார். ''சிலாங் சிலாங்'' உள்ளே மணி சிலிர்த்துக்கொண்டது. கம்பிக் கதவு தாண்டி உள்ளே மரக் கதவு சற்று இடைவெளியுடன் திறந்தது. சட்டென்று மூடிக்கொண்டது. யாரோ ராவுத்தர் வீட்டுப் பெண் பிள்ளை போலிருக்கிறது. திறந்த வேகத்தில் மாமிசம் வேகவைக்கும் வாசனை தக்கென்று மூக்கைத் தாக்கிற்று.

மூன்று நிமிடத்துக்குப் பிறகு ராவுத்தர் கதவைத் திறந்தார்.

''என்னங்க முதலியார்!''

''மொதலாளி கொஞ்சம் கருக்க வரணும் கரீம் பாய் வண்டி வந்திருச்சு.''

''என்னா?''

''நாஷ்டா முடிச்சுட்டீங்களா?''

''இல்லே.''

''முடிச்சுட்டு வாங்க.''

நடேச முதலி கீழே இறங்கினார்.

''முதலியார், பதினெட்டு நாப்பத்தாறு பெரியபாளையத்தாண்ட கெணறு தட்டிருச்சாம்.''

''வரதனு?''

''ஆங். அவன்கிட்டேருந்து சேதி இல்லே. யாரோ வழியோட போற புண்ணியவான் போன் போட்டுச் சொன்னான்.''

''அடி பலமா?''

''நிக்குதுன்னாங்க.''

''ஆளு சேதமுண்டா?''

''தெரியலே. நான் அங்கனப் பயணப்படலாம்னு பார்த்தேன். இஞ்ச தகராறு உண்டா?''

''உண்டு மொதலாளி.''

''யா அல்லா!''

நடேச முதலி வேதனையுடன் முதலாளியைப் பார்த்தார். ஒரே நாளில் இரண்டு வண்டிகளின் விபத்து. ராவுத்தர் கூக்குரலிட்டு அழுகிறவர் இல்லை. அந்த வயது தாண்டியவர். ஆயினும் அடியின் வேதனை உடனே அவர் முகம் காட்டியது. — அந்தக் கடவுள் விளிப்பில் துக்கம் மண்டிற்று.

ராவுத்தர் கதவைப் பிடித்தபடி குனிந்து நின்றார். பின்பக்கம் காலடி ஓசை கேட்டது. கொலுசுகள் சிணுங்கின. உருதுவில் மடமடவென்று யாரோ ஏதோ கேட்டார்கள். ராவுத்தர் பதிலாய்த் தலையாட்டினார்.

''வண்டிக்கு ஏதுமா?''

''ஆமாம் மொதலாளி.''

''என்ன ஆச்சுது?''

''ஆளு அடிச்சுட்டு நிக்காத வந்துட்டாங்க. முன் பக்கம் வண்டில பட்டு சொல்ப சேதம். கண்ணப்பன் பம்பர் நிமித்திடலாம்னு உடைச்சுப்புட்டான்.''



ராவுத்தர் கண்ணில் க்ஷண நேரம் கோபம் மின்னிற்று.

''யாரு தொடச் சொன்னது?''

''கரீம்பாய்.''

''தெரியலே. கைச் சுண்டுவிரல் ஒண்ணு வண்டியோட ஒட்டிக்கிட்டு வந்திருக்குது. இப்பத்தான் பார்த்தாங்க.''

''யா அல்லா.''

மௌனம். கலக்கம். இருட்டில் தள்ளப்பட்டவன் எழுந்து நிற்கத் தடுமாறுவது போல சிந்தனை. என்ன என்ன ஏன் இது என்கிற தவிப்பு. சகலமும் ராவுத்தரிடம் நட்ட முதலி காண முடிந்தது. ராவுத்தர் எண்ணி மூன்று வண்டிக்குச் சொந்தக்காரர். அப்துல் ரஹ்மான் டிரான்ஸ்போர்ட் கம்பெனி சென்னை என்பது இந்த மூன்று வண்டிகள்தான். ஆனால் தனிப்பட்ட பலருடைய வண்டிகளும் அவர் கம்பெனிக்கு வேலை செய்தன. நாள் தவறாது அரிசியும் கோதுமையும் பருப்பு வகையறாக்களும் சென்னை நகரமெங்கும் வியாபாரிகளுக்குக் கொண்டு வந்து தருவதாய் ஒப்புக் கொண்டிருந்தார். இந்த ஒப்புதலுக்கு எழுத்து மூலம் எதுவும் இல்லை. வாய் வார்த்தைதான். சொல் சொன்னக் கட்டுப்பாடுதான். மூட்டை இறங்கினால் காசு. ஏறி நகர்ந்தால் காசு. காசுக்கு ராவுத்தர் போய் நிற்க வேண்டியதில்லை. லாரி தேடி ராவுத்தரை எந்தவியாபாரியும் வந்ததில்லை. பொட்டலம் கட்டிக் காசு வரும். பசு மாதிரி லாரி போய் நிற்கும்.

இந்த மரியாதைதான் மூலதனம். எவர் சொத்தையோ தன் வண்டியில் ஏற்றிக் கொண்டு தன் குழந்தையாய்ப் பாவித்து, உரிய இடத்தில் சேர்ப்பிக்கும் நாணயம்தான் மரியாதை. ராவுத்தர் வண்டி சரக்குக்குப் போனால் சேதம் அதிகம் இருக்காது. நூற்றி நாற்பது மூட்டை அரிசி ஏற்றி நூற்றி நாற்பதிலும் இரண்டு படி அரிசி எடுத்துப் பிரித்துத் தைக்கிற பெரும் கொள்ளை நடக்காது. அரிசி மீது சிமெண்ட் மூட்டை ஏற்றி நாறடிக்காது. செக் போஸ்டில் சரியான தாக்கீது இல்லாமல் வெட்டிக்கு மடங்காது. ராவுத்தர் லாரி ரசீதுக்கு செக் போஸ்டில் மரியாதை உண்டு. எல்லாவற்றுக்கும் மேல் பேச்சுத் தன்மை.

''லாரி டயர் வெடிச்சிருச்சாம். நானே வெறுப்புல இருக்கேன். உன் வாழத்தாருக்கு குரங்காக் குதிக்கிறியே. வரும், கூவாதே. ஒரு வாரமானாலும் நிச்சயம் வரும்.'' குரங்குக் கூட சீண்ட முடியாத அழுகலாய் சில லாரிக் கம்பெனியில் காய் வரும்.

ராவுத்தர் அப்படி அல்ல. ''ஆண்டவனே வண்டி மடங்கிடிச்சு. நான் ஆள அனுப்பிட்டேன். இன்னும்



நாலு அவர்லே சரக்கு வந்துடும் ஐயா. சரக்கு சேதமாயிடுச்சா.. ராவுத்தர் பொறுப்பு. மன்னிச்சுக்க ஆண்டவனே.''

டெலிபோனை ரொம்ப மிருதுவாய் வைப்பார். ஆண்டவனே என்று சகலரையும் வாய் நிறைய அழைக்கும் ராவுத்தருக்கு இன்று சேதம். சோதனைக் காலம். இரண்டு வண்டி சிதிலம். ஒன்று குப்புறக் கிடக்கிறது. ஒன்று குதறிவிட்டு வந்திருக்கிறது.

ஒரு நாளைக்கு ஆயிரம் சம்பாதிக்கிற இரண்டு வண்டியும் அடி.

லாரிக்காரன் தாங்க முடியாத விஷயம்: ஓடுகிற வண்டி மடங்குவது. விபத்தில் சிக்குவது. மரத்தில் முட்டி நசுங்கினாலும் கூடத் தேவலாம். ஆள் கொன்ற வண்டி அசிங்கம். பழிக்குச் சவுக்கடி பட்டால் தப்பிப்பது அபூர்வம். அதுவும் நிற்காமல் வந்தது கொலை பாதகம். மாட்டிக் கொண்டால் ஓட்டினவன், உரிமையாளன் சகலரையும் நிற்கவைத்து ஆணி அறைந்து விடுவார்கள்.

ஆனால், ஆள்மீது மோதிக் கொன்றுவிட்டு நின்றவனை ஜனம் குதறிப் போட்டுவிடும். லாரியைக் குப்புறக் கவிழ்த்துத் தீவைக்கும். இவையெல்லாம் சுலபமாய் நடக்கும். நடந்திருக்கிறது. நிறையப்பேருக்கு நடந்திருக்கிறது. மாட்டிக் கொண்டு நின்றவர்க்குத் தெரியும் அந்த வேதனை. சைக்கிளில் கிழவியை முட்டினவனே தர்ம அடி வாங்குகிற காலம் இது. லாரி, அதுவும் ஆறு சக்கரங்கள் உருளும் இன்ஜின் அறுபதடி நீளம் இருபதடி உயரம் உள்ள லாரி இடித்தால் ரொம்பக் கோபம் வருகிறது ஜனங்களுக்கு. குறுக்கே வந்து விழுந்தாலும், குடித்துவிட்டு நடை தப்பி முட்டிக் கொண்டாலும் தப்பு லாரிக்காரன் மீதுதான். உயரமாய் உட்கார்ந்து ஓட்டுவது உடனே முக்கியமாய்ப் பெரிய அவமதிப்பாய் பட்டுவிடுகிறது சகலருக்கும். லாரியின் சௌகரியம் மறந்தே போய்விடுகிறது.

''கண்ணு மண்ணு தெரியாத ஓட்டற முண்டம். கீழே இறங்குடா.'' இறக்கிவிட்டு மிதித்துவிடுவார்கள். பேச முடியாமல் வாய் மேலேயே போடுவார்கள்.

நடேச முதலி பிரம்மாண்டமாய் யோசித்துக்கொண்டே நின்றார்.



''முதலியார் நான் தொழுகைக்குப் போயிட்டு வரேன். நீங்க சாவி எடுத்துப் போய்க் கதவ தொறங்க. மூட்டை இறங்கட்டும். நம்ம இடத்திலேயே இறங்கட்டும். மாட்டு வண்டியிலே போட்டுட்டுப் போய்க் கடைல குடுத்துருவம். கிடங்கு தொறந்து பலகை போடுங்க வரேன்.'' உள்ளே நகர்ந்து சாவியை எடுத்துக் கொடுத்தார்.

நடேச முதலி சாவியுடன் கம்பெனிக்கு வந்தார். நெல்லூர் வண்டியின் கயிறை அழுத்தி முடிச்சு நீக்கி செல்லத்தம்பியும் கூலி ஆட்களும் கட்டவிழ்த்தார்கள். படிப்படியாய்க் கித்தானைச் சுருட்டினார்கள். பின்புறக் கொக்கியைச் செல்லத்தம்பி அசைத்து நீக்கிக் கதவைத் தடாலென்று இறக்கினான். ராவுத்தர் கோடவுன் கதவு சரசரவென்று மேலே சுருண்டு கொண்டது. உள் பக்கம் சுவரோரம் வைத்திருந்த பெரிய பலகையை எடுத்துக் கோடவுன் வாசலுக்கும் லாரியின் பின் பக்கத்துக்கும் பாலமாய்ப் போட்டார்கள். காத்திருந்தார்கள்.

ராவுத்தர் மெல்ல நடந்து வந்தார். வெள்ளை மல் ஜிப்பாவும் நீல லுங்கியும் மேல் துண்டும் தொப்பியுமாய்ச் சுத்தமாய் இருந்தார். உள்ளே நுழைந்து கிடங்கின் மூலைகளை நோக்கிக் கைவழியே காற்று ஊதினார். ஊதுபத்தி கொளுத்திக் கல்லா அருகே நின்று உள்ளங்கைகளைப் பார்த்துப் பிரார்த்தனை சொன்னார். கைகளை விரித்து மேல் கூரையை அண்ணாந்து பார்த்தார்.

ராவுத்தர் மைத்துனன் கலீமான் க்ளிப் பலகையில் பேப்பர் பொருத்தி ஒன்று இரண்டு நூற்று நாற்பது வரை எழுதினான்.

''அத்தா ஆரம்பிக்கட்டுமா? எடைச் சீட்டு சரி பார்த்தாச்சு. நூத்தி நாற்பது மூட்டை.''

ராவுத்தர் தலையசைக்க, கலீமான் முதலியை நோக்கிக் கையசைத்தான்.

ராவுத்தர் வந்ததும் லாரியைச் சோதிப்பார் என்று நினைத்துக் கொண்டிருந்தவர்களுக்கு ஏமாற்றமாய் இருந்தது. ஆனால் முதலி இதை எதிர்பார்த்தார். பிரச்னை என்று தெரிந்ததும் அதை உடனே ராவுத்தர் அணுக மாட்டார். உள்ளே பிரச்னை பற்றிய கோபமும் படபடப்பும் அடங்க வேண்டும். ஒரு நிதானம் வந்த பிறகே என்ன என்று கேட்பார். லோடு இறங்கும்வரை ராவுத்தர் யாரையும் எதைப் பற்றியும் விசாரிக்கப் போவதில்லை.

முதலி இடுப்பிலிருந்த கொக்கியை எடுத்தார். நான்கு அங்குல நீள மர உருளையில் கனமாய் ஒரு கொக்கி பொருத்தப்பட்டிருந்தது. முதலி வலக் கையில் மர உருளையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டார். ஆள்காட்டி விரலுக்கும் நடு விரலுக்கும் நடுவே கொக்கி எட்டிப் பார்த்தது. லாரியின் பின் பலகை தூக்கப்பட்டுச் சங்கிலியால் பிணைத்திருந்த காலி இடத்தில் முதல் மூட்டை தள்ளப்பட்டிருக்கிறது. அந்த முதல் மூட்டையைப் பலம் கொண்ட மட்டும் முதலி குத்தினார். நடைபாதையில் உட்கார்ந்

புதியது. பிலிப்ஸ் அளிக்கிறது.



இது ஒன்றே 30% அதிக ஒளிதரும் பால் வெண்மையான பல்பு.

தேவைய்யான இடத்திலே ஒளி

புதிய ஆர்ஜெண்டா ஸூப்பர்லக்ஸ் வீட்டின் கூரை மேலே சிதறி வீணாகும் ஒளியையெல்லாம் திரட்டிக் கீழ்நோக்கி, உங்களுக்குத் தேவையான இடத்தில் பாயச்செய்யும் வகையில் உருவாக்கப்பட்டது. எனவே 30% அதிக ஒளி கிடைக்கிறது. (வீட்டின் உட்கூரை மேலே ஒளி வீணாவதில்லை) பல்பின் கீழ் பாகம், ஒளி நன்கு ஊடுருவும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளதால், செறிவான ஒளியையெல்லாம் குவித்துச் சீராகக் கீழ்நோக்கிப் பாயச்செய்கிறது. எனவே, நேர்த்தியான, நுண்மையான வேலைகளுக்கு—படித்தல், எழுதுதல் ஆகிய வேலைகளைச் செய்ய மிகவும் ஆதாரமானது ஆர்ஜெண்டா ஸூப்பர்லக்ஸ். நிழலும் ஏற்படுத்துவதில்லை. ஆர்ஜெண்டா ஸூப்பர்லக்ஸ். புதிய தொழில்திறம். பொங்கும் ஒளி வெள்ளம்.

PHILIPS

பிலிப்ஸ்—ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக
இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்

பிலிப்ஸ்

HTB-PEI-6893



பருகுக நரசுஸ் காபி
பெறுக நற்பரிசுகளை!

- 12 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டபரா செட்.
- 6 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டம்ளர்.
- 2 கிலோ நரசுஸ் காபிக்கு பல வண்ணத் துணிப் பை.
- 500 கிராம் நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி ஸ்பூன்.

மொத்தமாகவோ, சில்லரையாகவோ வாங்கும் நரசுஸ் காபியுடன் கிடைக்கும் வெகுமதிக் கூப்பன்களைப் பெற்று வெகுமதிகளைப் பெறுங்கள்.

12.2.83 முதல் 19.3.83 வரை உள்ள விற்பனைக்கே வெகுமதிகள் உரியவை.

ஜீவனுள்ள ஒரே காபி!

நரசுஸ்

"தெர்மலோ" காபி!



நரசுஸ் காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.

ADWAVE NCC 2261

இருந்தவர்கள் பரபரத்து எழுந்தார்கள். பெண்களும் குழந்தைகளுமாய் வரிசையைச் சூழ்ந்து கொண்டார்கள்.

முதலி குத்தின இடத்தில் ஒரு திருகுத் திருகி ஓட்டையைப் பெரிதாக்கினார். வலி வுடன் இழுத்தார். மூட்டை நாலங்குலம் சரட்டென்று கிழிந்தது. பச்சரிசி உயர் ரகம் தடாலென்று தரையில் சரிந்தது. ஆறு ஏழு பெண்கள் முந்தானையை விரித்துப் பிடித்துக்கொண்டார்கள். முந்தானைகளை மீறித் தரையிலும் அரிசி சிதறிற்று. சின்னப் பையன்கள் தகர டப்பாவையும் மேல் துண்டையும் ஏந்தினார்கள். பத்து கிலோ அரிசி கலயமாய்ச் சரிந்திருக்கும். முதலி சட்டென்று மூட்டையை நிமிர்த்திவிட்டார். அரிசிச் சரிவு நின்றது. பெண்கள் இன்னும் அரிசி சிதறுமோ என்று ஆவலுடன் காத்திருந்தார்கள்.

''முதலி ஒரு குத்துத்தான். அடுத்த மூட்டை சேதமாகக் கூடாது'' கஙேமான் கூவினான்.

முதலி பெண்களை விலக்கினார். கிழிந்த மூட்டையை முதுகில் சாய்த்துக் கிழிசலை மேல் பக்கம் காட்டி தம்பிடித்துத் தூக்கினார். கோடவுனை நோக்கி நடைப் பலகை மீது நடக்கத் துவங்கினார். கஙேமான் கிளிப் பலகையில் ஒன்று என்று எழுதப்பட்ட இலக்கத்தைப் பென்சிலால் குறுக்கே அடித்தான்.

தொலைவில் டீக்கடையில் நின்றிருந்த கௌசல்யாவின் கண்களில் முதலி பலகையில் நடக்க ஆரம்பித்தது தென்பட்டது. ''அடேடே, அரிசி வுட்டுட்டேனே''. தடாலென்று பாதி டீயோடு டம்ளரைப் பெஞ்சியில் வைத்துவிட்டு ஓடி வந்தாள்.

'அரிசி தரை தொட்டிருச்சா' என்றபடி முந்தானையை விரித்தாள். அதற்குள் பெண்கள் அரிசியைச் சிறு மூட்டைகளாக்கிப் புடவைக்குள் முடிச்சுப் போட்டிருந்தார்கள்.

பலகையில் ஏறின முதலியை நெருங்கின கௌசல்யா ''கொஞ்சம் அரிசி வுடு. கொஞ்சம் அரிசி வுடு'' என்று கெஞ்சினாள்.

முதலியாருக்கு முதுகுச் சுமை தள்ளாட்டம் கண்டது. கீழ் கல் சரியாய்ப் பொருந்தாமல் பலகை ஆடியது.

''போம்மா அன்னுண்டை. குத்தச்சொல்ல எங்க போயிருந்த?''

''அரிசி வுட்டுட்டுப் போ மொதலி. மாட்டேன்னு சொல்லாதே. பச்சரிசி ரெண்டு வாரமாத் துன்னல. இன்னிக்குத்தான் சோறு பாக்கறம்.''

''நீ அன்னுண்ட போன்னு. இல்லைமோ உக்காந்து அடுப்பு மூட்டி ஆக்கிச் சாப்புடறவ ளாட்டம். ஏழை பாழைக்குத்தான் அரிசி உனக்கென்ன கேடு. வழி மறிக்காத போ அப்பாலே.''

''வுட்டுட்டுப் போன்னு சொன்னு அலுபுக் கிறியே. பச்சரிசி துன்னு நாளாச்சு மொதலி அரிசி வுடு.'' முதலியின் முழங்கையைப் பிடித்து இழுத்தாள்.

''நீதோ பார் கௌசல்யா மொத வோடு போ சொல்ல வழி மறிக்காதே. வோடு முழுஞ்சதும் வண்டி அரிசியைப் பெருக்கி எடுத்துக்க.''

ஜேபியில் கை!

பிலுமோடி மரணத்துக்காக இரங்கல் கூட்டம். அவர் படத்தைத் திறந்து வைக்கிறார் சோ. படத்தில் மோடி தமது ஜிப்பா ஜேபியில் கையை நுழைத்துக் கொண்டிருக்கிறார்.

சோ பேசுகிறார்: நாம் அறிந்த அரசியல்வாதிகள் பிறர் ஜேபியில் கை விடுபவர்கள்தான்! இவர் ஒருவர் தான் தமது ஜேபியிலேயே கையைப் போட்டுக் கொண்டிருக்கிறார்!

–நாதன்



''பெருக்கின அரிசி வேணும். மூட்டே சேர்த்து கொஞ்சம் வுடு'' கிழிசலில் விரல் விட்டுப் பெரிதாக்கினாள். சிறிது அரிசி சிந்திற்று.

காலை நிகழ்ச்சிகள் முதலியாரைப் பெரிதும் கலக்கியிருந்தன. மனக் கலக்கம் உடம்பை வலுவற்றதாக்கியிருந்தது. முதுகுச் சுமை அதிகம் அழுந்தி எரிய வைத்தது. நடை பலகையின் கீழ்க்கல் நகர்வதை உணர முடிந்தது.

''போன்னு போ. நேலவரம் புரியாத வம்பு பண்ணுத. நவுரு அப்பால.'' வலது முழங்கையால் அவளை இடித்து நகர்த்தினார். முன்னேறி அவளைக் கடந்து மூட்டையால் அவள் தோளை இடித்தார். அரிசி கிழிசலில் கவனமாய் இருந்த கௌசல்யா கால் தப்பி அந்தச் சின்ன இடுக்கு பொத்தென்று மேலாடை பறக்க நடைபாதையில் விழுந்தாள்.

முதலியை வெறித்து நோக்கினாள். கூலி ஆட்கள் சிரித்தார்கள். அவள் காலருகே நடை பலகை கிடந்தது. கோபத்தில் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் கௌசல்யா நடை பலகையை எட்டி உதைத்தாள். பலகை ஆட்டம்காணக் கீழ் கல் நகர முதலி தடுமாறி மூட்டையோடு இடப் பக்கம் விழுந்தார். வலது கைக் கொக்கி இசகு பிசகாய்ச் சிக்கி பளு தாங்காமல் கையை முறுக்கி இழுத்தது. கொக்கியைத் தரை விட மூட்டையின் கிழிசல் பக்கம் தரையில் மோதித் தரையெங்கும் அரிசி சிதறியது. கஙேமான் அதிர்ந்தான். கௌசல்யா எழுந்து நின்று அசிங்கமாக இரைந்தாள். (தொடரும்)

டாக்டரான எனக்கே தாங்கவில்லை

● மதிப்புக்குரிய மீ. ப. சோமு அவர்களின் கடிதத்தைப் பார்த்தேன். (கல்கி 6-2-83) அஜிதா ராமச்சந்திரனின் குறிப்பெடுத்துக் கொள்ளாத பேட்டி அச்சில் சற்று வேஷம் மாறிவிட்டது. என் நாடகம் தனி மனிதத் திறமைக்கும் ஒரு இயந்திரத்துக்கும் ஏற்படும் போராட்டத்தைப் பற்றியது. இந்தக் கதைக் கரு பல விதங்களில் பல பேரால் சொல்லப் பட்டிருக்கிறது. குறிப்பாக சார்லி சாப்ளினின் ''மாடர்ன்டைம்ஸ்''. சோமு அவர்களின் கடிதத்தைப் படித்த பின் எனக்கு ஆர்தர் கோஸ்லர் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது: There are no new themes in literature as there are no new human instincts; but every age provides new variations and new settings and a different set of rules for fighting the old battles all over again.

பெங்களூர் — சுஜாதா

● கோவில்களில் யானை அவசியமா? நிச்சயம் அவசியம் இல்லை என்பேன் நான். மோகனுக்கு (பார்த்தசாரதி கோவில் யானை) மதம் பிடித்ததாகக் கூறப்பட்ட அன்று நடந்த ரகளை முழுக்க முழுக்க பார்த்தசாரதி நாயுடு சந்தில்தான். ஓடிவந்து புகுந்த யானை திரும்பிச் செல்ல முடியாத அளவுக்கு அது ஒரு முட்டுச் சந்து. சந்து முட்டும் இடத்தில் இருந்தது என் ''அபார்ட்மெண்ட்''. முதல் மாடியில் இருந்த நான் சத்தம் கேட்டு பால்கனியில் எட்டிப் பார்த்தபோது யானை கீழே இருந்த இரும்புக் கேட்டைத் திறந்து வீட்டினுள் நுழைய முயற்சி செய்து கொண்டிருந்தது. கீழே இருப்பது வீட்டுச் சொந்தக்காரரின் போர்ஷன். யானை புக முடியாத அளவுக்கு கேட் இறுக்கமாக இருக்க, மக்கள் ஆர்ப்பரிக்க, போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து கூட்டத்தைக் கலைத்த பின்பே யானையின் பயம் சற்றுத் தணிந்தது. இருப்பினும் கார் ''ரிவர்ஸில்'' வருவது போலவே அது சந்தை விட்டு வெளியே வர வேண்டும். அப்படியேதான் அந்த நூறு கஜ சந்தை அது கடந்தது. அதற்குள் அது பட்ட பாடு....! என் போர்ஷனில் மேலே ஏறிய பாகன் ஆறு அங்குல நீளம் கொண்ட ஆணியால் (நீண்ட கழியின் முனையில் செருகப்பட்ட ஆணி) அதன் முதுகிலும் நெற்றியிலும் முப்பது, நாற்பது குத்துகள் குத்த, ரத்தம் அதன் நெற்றியில் வழிய, பின்புறம் நின்றவர்கள் கல்லாலும் சங்கிலியாலும் அடிக்க, நிதானமாகவே அது சீவர்ஸில் சென்ற காட்சி டாக்டரான என்னாலேயே சகிக்கமுடியவில்லை. கண்டு கண்ணீர் விட்ட பெண்கள் பலர். யானை படும் வேதனை ஒருபுறம் இருக்க, எங்கள் முட்டுச் சந்தில் மாடி வீடுகளுக்கு பதிலாகக் குடிசைகள் இருப்பதாக வைத்துக்கொண்டால் மக்களின் கதி?

சென்னை-5 — வெ. சீதாராமன்



● திரு கங்கப்பா அவர்கள் தஞ்சை மாவட்டக் கலெக்டராக இருந்தபோது, நான் தஞ்சைக்குச் சுற்றுலா சென்றிருந்தேன். அப்போது அவரை மாற்றுவதற்கு ஆளும் கட்சியினர் பெரும் முயற்சி செய்து கொண்டிருந்தனராம். ஊரெங்கும் அவரை மாற்றக் கூடாது என்று சொல்கிற போஸ்டர்கள் பெருமளவில் காணப்பட்டன — பொதுமக்கள் சார்பில். எவரை விளவியபோதும் அவரைப் பற்றிப் புகழாரமே கிடைத்தது. அத்தகைய கனவானுக்கு இந்தக் கதியா?

செங்கவல்லி — வானதி

● கங்கப்பா அவர்களை அவர் 'சிட்கோ' மானேஜிங் டைரக்டராகப் பணியாற்றிய போது நேரில் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. என்னுடைய சிறு தொழிலுக்காகத் தமிழக அரசின் 15 சதம் சப்ஸிடி தொகையைப் (ரூ 48,000) பெறுவதற்காக அலைந்து கொண்டிருந்த சமயம். அந்தத் தொகையைப் பெற நான் பட்ட பாடு...? சலித்துப் போய் கங்கப்பா அவர்களை 'சிட்கோ' ஆபீஸில் நேரில் சந்தித்து என் குறையைக் கூறினேன்.

சம்பந்தப்பட்ட அதிகாரியைக் கூப்பிட்டார். எனக்கு எதிரிலேயே ஃபைல் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசு கேட்ட எல்லா நிபந்தனைகளையும் நான் நிறைவேற்றியும் தாமதப்படுத்திய அதிகாரிகளின் அசிரத்தையை எனக்கு எதிரிலேயே கண்டித்தார். எனக்கு ஆறுதல் கூறி அனுப்பினார். மறுநாள் சென்னையிலிருந்து மதுரைக்கு வந்தேன். எனக்கு முன்னால் சப்ஸிடி காசோலை வந்திருந்தது!

மதுரை — பி. எஸ். ரகுநாதன்

● முடிவு எப்படி இருக்குமோ என்று நெஞ்சம் துடிக்கும் வண்ணம், மிக அற்புதமாக முடித்திருக்கிறார் 'சுமங்கலி'யை அரவிந்தன்.

வில்லியனூர் — ப. விஜயகுமார்

● பிலிம் பெஸ்டிவல் படங்கள் பிரமாதம் என்றால் அதைவிட பிரமாதம் உங்களது 'ஜோக் பெஸ்டிவல்' ஜமாய்க்கிறீரய்யா!


மே. மாம்பலம் — என். மோகன்

டயனோரா மிக்ஸி:

500 வாட்–முழுவதும் சக்தி

சமையலறையின் கடினமான வேலைகளை எல்லாம் மிக எளிமையாகச் செய்கிறது — 25% கூடுதலான எளிமை

எந்த ஒரு மிக்ஸியும் அளிக்க இயலாத 12 அருமையான ஆதாயங்கள்:



மூடியிலுள்ள பூட்டும் அமைப்பினால் உள்ளிருப்பவை வெளியே சிதறாது. கிளிப்புகள் கிடையாது. சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ரிம். இறுக்கமான பிடிப்பு. ரப்பர் வளையம் மூடியையும் கிண்ணத்தையும் சீல் செய்கிறது.

தரமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடி. பொடியாக்க, அரைக்க, சிறு துண்டுகளாக நறுக்க மற்றும் திரவமாக்க, உறுதியான 4 பிளேடுகள்.

மிகப் பெரியது —கிங் சைஸ். 1.25 லிட்டர் கிண்ணம்.

பிரத்யேக பூட்டும் அமைப்பு. அதிர்வுகள் ஏற்படாது.

பேக்லைட் இன்சுலேட்டட் எலெக்ட்ரோ பிளேட்டட் கைப்பிடி. உறுதியான பிடிப்பு. சூடு ஏறாது.

பேக்லைட் கைலோபிக்ஸ் கனெக்டர் மற்றும் நியூப்ரோன் ரப்பர் கிளச்— ரப்பர் புஷிங் தேய்ந்து போகாது.

பாலன்ஸ் செய்யப்பட்ட மோட்டார் மற்றும் கட்டர் அசெம்பிளி—சப்தமும் அதிர்வும் குறைவு.

இன்ச்சர், மற்றும் 3-ஸ்பீடு இயக்கம்.

சக்தி மிக்க மோட்டார். 60 நிமிடம் தொடர்ச்சியான ஓட்டம்.

ஏர் சக்ஷன் கிரில். மோட்டாருக்குக் குளிர்ச்சி.

டயனோராவின் 'விற்பனைக்குப்பின் சேவை' புகழ் பெற்றது. எப்போதும் கடமையே கண்ணுகக் கருதும் திறமை மிக்க சேவை.

AEA-2547

டயனோரா (ரெ. பெயரு) மிக்ஸி

சமையல். அறையிலே சக்திமிக்க துணை

விற்பனையும், சேவையும்: அசோசியேட்டட் எலெக்ட்ரிகல் ஏஜென்ஸீஸ்

காம்ப்ளெக்ஸ்

ஜெயபாரதன்

“நான் ஒன்னைக் கேட்டேனு? யாரு இதையெல்லாம் கொண்டுவரச் சொன்னு?... எனக்கு எடுத்துக்கத் தெரியாதோ?... பத்து நாள் ஒடம்பு சரியில்லாட்டா, ஒரேயடியாக் கையாலாகாதவன்னு நெனைச்சுட்டாப்பலே இருக்கு....''

தன் முன் வைக்கப்பட்ட எண்ணெய், கண்ணாடி, சீப்பு ஆகியவைகளைப் பார்த்து வெடித்தான் சுந்தரேசன்.

சுருங்கிப்போய் நின்றாள் சுமதி.

''இல்லே.... உங்களாலே நடக்க முடியாதே. டாக்டர்தான் ரொம்ப நடக்கப்படாதுன்னு சொன்னாரேன்னுதான்...தலையைவாரிக்க எழுந்து நடப்பானேன். சிரமப்படுவானேன்னுதான்...''

எரித்துவிடுவதைப் போல் பார்த்தான்.

''ரொம்ப நடக்கப் படாதுன்னுதான் சொன்னார். ஒரேயடியாய்க் கட்டிலிலேயே ஒக்காந்து கெடன்னு சொல்லலே.... வரவர ரொம்ப ஜாஸ்தியாப் போச்சு,....''

கையால் தட்டிய வேகத்தில் முகம் பார்க்கும் கண்ணாடி கீழே விழுந்து சிதறியது. ஆத்திரத்துடன் படுக்கையில் சுமதிக்கு முதுகைக் காட்டிக் கொண்டு படுத்துக் கொண்டான்.

உடைந்த கண்ணாடித் துண்டுகளை அள்ளிக் கொண்டு உள்ளே போனாள் சுமதி. கண்ணீர் பொங்கிற்று.

வீட்டில் இருக்கும்போது வேறு எந்த வேலையும் பார்க்காமல் உட்கார்ந்திருந்த கணவன் திடுமென மாறிப் போனது புரியவில்லை சுமதிக்கு. கையெட்டுகிற தூரத்தில் இருக்கிற பேப்பரைக் கூட அவள் எடுத்துத் தர வேண்டும்.

புத்தக ஷெல்புக்கு அருகிலேயே உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருப்பான். டிக்ஷனரி மேல் வரிசையிலேயே இருக்கும்.

''டேய் சுரேஷ்! டிக்ஷனரியை எடு.''

சிரத்தையாய்க் கணக்குப்போட்டுக்கொண்டிருக்கும் பிள்ளை சுரேஷ், ஹாலிலிருந்து வந்து, கையருகே இருக்கிற டிக்ஷனரியை எடுத்துக் கையில் கொடுப்பான்.

''சுமதி.... குடிக்க ஜலம் கொண்டா...''

''என் ஷூவுக்குப் பாலிஷ் போட்டு வை. ஷேவிங் செட் எங்கே?... பால் பாயிண்ட் பேனாவிலே ரீபில் காலியாப் போச்சுன்னு வேற போட வேண்டாமா?... என்னதான் பண்றே, வீட்லே?''

இப்படி விதவிதமாய் எத்தனை ஏவல்கள்! விரலைக் கூட அசைக்காமல் உட்கார்ந்திருந்த கணவன் திடுமென்று சுபாவமே மாறிப் போனதுதான் புரியவில்லை சுமதிக்கு.

ஒரு நாள் அலுவலகத்திலிருந்து திரும்பி வரும்போதே காலில் வலி என்று வந்தான் சுந்தரேசன்.

இடது தொடை இணைப்பில் சுளீர் சுளீர் என்று முள்ளுக் கரண்டியால் அடிப்பதுபோல் வலி, விட்டு விட்டு வலிப்பதாகச் சொல்லிக் கணவன் சுருண்டு படுத்ததும் பயந்து நடுங்கிப்போனாள் சுமதி. திருமணமாகிப் பதினைந்து ஆண்டுகளில் ஒரு நாள் தலைவலி என்று படுத்ததில்லை அவன்.

மறுநாள் டாக்டரிடம் காண்பித்தார்கள். ஏதோ மருந்துகளைக் கொடுத்துப் பார்த்தார். வலி குறைகிற வழியாய்க் காணோம். ஓர் இடத்தில் மட்டும் இருந்த வலி, தொடை முழுவதுமாய்ப் பரவி, தூக்கமில்லாமல், காலை அசைக்கக் கூட முடியாமல் போய்ப் படுக்கையிலேயே கணவன் துள்ளித் தவிப்பதைப் பார்த்த சுமதி பதறிப் போனாள்.

விதவிதமாய்ப் பரிசோதனைகள் செய்த எலும்பு நிபுணர் கூறினார்:

''மிஸ்டர் சுந்தரேசன்... இட் இஸ் எ கேஸ் ஆஃப் ட்யூபர்க்யூலர் இன்ஃபெக்ஷன் இன் தி ஹிப் ஜாயிண்ட்.... இது மாதிரி வர்றதுண்டு. ஆறு மாசம் படுக்கையிலே இருக்கணும். ரொம்ப நடக்கக் கூடாது. கால்லே வெயிட்டே கொடுக்கக் கூடாது. ஹெவி டின் இன்ஜெக்ஷன் ஆன் ஆல்டர்நேட் டேட்ஸ்.... இந்த பில்லையும் சாப்பிடுங்க. ப்ட் மீ ஆல்ட்டர் ஏ மன்த்... ரெஸ்ட் ரொம்ப அவசியம்....''

''சரியாப் போயிடுமில்லியா டாக்டர்?''

சுமதியின் கவலையைப் பரிந்து கொண்ட டாக்டரின் முகத்தில் புன்னகை அரும்பிற்று.

''ஷ்யூர்.... இட்ஸ் கம்ப்ளீட்லி க்யூரபிள், நாட் கன்டேஜியஸ். கொஞ்சம் கூடப் பயமில்லே. முன்னைவிட நல்ல ஆரோக்கியமா ஆயிடுவார். ஆறு அல்லது ஏழு மாத ரெஸ்ட் தேவை. நல்லாப் பார்த்துக்கங்க... அவர் ஹெல்த்துக்கு நான் காரண்டி...''

வீட்டுக்கு வந்தது முதல் சுந்தரேசனின் சுபாவமே மாறிப் போயிற்று.

ஆயாசத்துடன் கட்டிலில் படுத்துக் கொண்டான்.

காலை அசைக்க முடியவில்லை. எழுந்து நடக்க வேண்டுமானால் பிறர் துணை வேண்டியிருந்தது. சுவரைப் பிடித்துக் கொண்டு தத்தித் தத்தித்தான் நடக்க முடிந்தது.

''காலை அசைக்கமுடியவில்லையே சுமதி... என்னாலே பழையபடி நடக்க முடியுமோ... இன்னொருத்தர் உதவி இல்லாமல் எழுந்திருக்க முடியுமோ? ஒருவேளை இப்படியே கட்டிலிலேயே கிடந்து விடுவேனோ? வியாதிக்காரனாய், உனக்கும் குழந்தைகளுக்கும் பாரமாய், உபயோகமில்லாதவனாய்...''

''சீச்சீ!... என்ன இது குழந்தை மாதிரி. கம்ப்ளீட்டாச் சரியாப் போயிடும்... அடுத்த ஒலிம்பிக்ஸ்லே நம்ம ஹாக்கி டீமுக்கு நீங்கதான் காப்டன்!....''

உடம்புக்கு வந்து பத்து நாட்களாகியிருக்கும்.

''டேய் சுரேஷ்... அப்பாவுக்கு மாத்திரை எடுத்துக் குடுடா.... சாப்பிடட்டும்... அப்பாவாலே நடக்க முடியாது....''

சமையலறையிலிருந்து பிள்ளைக்குக் குரல் கொடுத்தாள் சுமதி.

படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தான் சுந்தரேசன்.

பாடம் படித்துக் கொண்டிருந்த சுரேஷ் எழுந்துபோய், பீரோவைத் திறந்து மாத்திரைகளையும் ஒரு டம்ளர் தண்ணீரையும் நீட்டினான்.

''என்னடாது?....''

குரலின் கடுமையில் மிரண்ட சுரேஷ், ''அம்மாதான்... உங்களாலே நடக்க முடியாதுன்னு... மருந்து சாப்பிடணும்னு....'' என்று குழறினான்.

வெடுக்கென்று அவன் கையிலிருந்த மாத்திரைகளைப் பிடுங்கி வீசி எறிந்தான்.

''என்னை நொண்டிப் பயன்னு நெனைச்சாளா உங்க அம்மா!... என்னாலே நடக்க முடியும்... பார் நடக்கிறேன்.... ஜாம் ஜாம் என்று நடக்கறேன்....''

விருட்டென்று கட்டிலை விட்டு எழ முயன்று வலி தாங்காமல் 'அம்மா' என்று கூவிக்கொண்டே படுக்கையில் விழுந்தான்.

குழந்தை சுரேஷ் நடுநடுங்கிப் போனான்.

ஓட்டமாய் ஓடிவந்து விசாரிக்க முயன்ற சுமதியிடம் 'சுள்'ளென்று எரிந்து விழுந்தான்.

''ஆ, ஊன்னு ஒடனே ஓடிவந்துடுறு... எனக்கு ஒண்ணுமில்லே... மனுஷனை பெரிய மனோண்டா வியாதியஸ்தனு ஆக்கிடுவே போலிருக்கே... சே...''

மலைத்துப் போய் ஒன்றும் புரியாமல் நின்றாள் சுமதி.

இப்படிப் பல சம்பவங்கள்.

முன்பு ஒவ்வொரு காரியத்துக்கும் சுமதியையும், சுரேஷையும் ஏவிக் கொண்டிருந்தவன், இப்போது ஏதாவது உதவி என்று செய்ய வந்தாலே 'சள்'ளென்று எரிந்து விழ ஆரம்பித்தான். வேண்டுமென்றே சுவரைப் பிடித்துக் கொண்டு இடுப்பைச் சாய்த்துச் சாய்த்து நடப்பான்.

''ஏன் இப்படி?... டாக்டர்தான் நடக்க வேண்டாம்னு சொல்லியிருக்காரே...'' என்று சுமதி ஆரம்பித்தாளானால் அவ்வளவுதான். ஆத்திரத்துடன் கத்த ஆரம்பித்து விடுவான்.

''ஆமா... எப்பவும் நான் கட்டிலிலேயே கெடக்கணும். ஒவ்வொண்ணுக்கும் ஒன் கையை எதிர்பார்த்து நிக்கணும். நீ ஜாலியா இஷ்டப்படி போவே வருவே. இல்லியா?... என்னாலேயும் நடக்க முடியும்... பாரு... இதோ பாரு....''

பத்தடி நொண்டி நொண்டி நடந்துவிட்டு, வலி தாளாமல் கீழுதட்டைப் பல்லால் கடித்துக்கொண்டு வீம்புடன் நிற்பான்.

சொல்லவும் முடியாமல் சொல்லாமலிருக்கவும் முடியாமல் திணறித் தவித்துப்போவாள் சுமதி.

• • •

''வெரி குட்... யூ ஆர் ஓ.கே. சுந்தரேசன்... சரியாயிடுச்சு உங்களுக்கு. ஆனாலும் இன்னும் நாலு மாசம் இந்த மருந்துகளை




இயற்கைக் கூந்தலின் இளமை ரகசியம்
V.Y.D
தேங்காய்
எண்ணெய்
EP-VVD-1511

கன்டின்யூ பண்ணனும் நீங்க... பழையபடி நடக்கலாம். முடிஞ்சா ஓடலாம். என்ன வேணும்னாலும் செய்யலாம். உங்களுக்குக் கால் சரியில்லாம இருந்துச்சு அப்படிங்கற கதையே நீங்க மறந்துடலாம். நெக்ஸ்ட் மந்த் வந்து பாருங்க. ஜஸ்ட் ஃபார் ஆப்ஸர் வேஷன் ஒன்லி. போயிட்டு வாங்கம்மா.''

சுந்தரேசனின் தோள்களைத் தட்டி வழி யனுப்பினார் டாக்டர். இந்த ஆறு மாதப் பழக்கத்தில் டாக்டர் நல்ல நண்பராகிப் போனார்.

உற்சாகத்துடன் வெளியே வந்தார்கள். வீசிய காற்றும் சீறிச்சென்ற வாகனங்களும் பார்க்க உல்லாசமாய்த்தான் இருந்தன.

''என்னாலே பழையபடி நடக்க முடியறது சுமதி... இதோ பார்த்தியா?''

சாலையென்று கூடப் பாராமல் 'விசுக், விசுக்'கென்று நடந்து காண்பித்தான் சுந்த ரேசன்.

சுமதிக்கு நிம்மதியா யிருந்தது.

● ● ●

''யேய் சுரேஷ்!... டிக்ஷனரியை எடு.''

புத்தக ஷெல்ஃப் அருகே அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த சுந்தரேசன் கேட் கிறான்.

''ஏய் சுமதி... ஃபேனைப் போடு.''

ஸ்விட்சுக்குக் கீழே நாற்காலியில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டே மனைவிக்கு ஆணை யிடுகிறான்.

சமையல் அறையில் மும்முரமாய் வேலை யில் இருந்த சுமதி அவன் தலைக்கு மேல் கை எட்டுகிற தூரத்திலிருக்கும் ஸ்விட்சைப் போடுகிறாள்.

''ஷூவுக்குப் பாலீஷ் போடு...''

''இந்தா... பேனாவுக்கு இங்க் போடு.''

பேனாவையும் மை புட்டியையும் நீட்டு கிறான்.

சுரேஷ் குடிக்கத் தண்ணீர் கொண்டு தரு கிறான்.

சுமதி சட்டையை ஹாங்கரில் மாட்டு கிறாள்.

'அப்பாடி... உடம்பு பூரணமாக் குண மாயிடுத்து....' என்று எண்ணிக் கொள் கிறாள் சுமதி.

நிம்மதியொன்று அலையாய் அவள் முகத் தில் பரவுகிறது.

5

நடுக் கூடத்தில் தலையிலிருந்து கால் வரை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்திருக்கும் உருவங்களைப் பார்த்துக் கார்த்திக்கிற்குப் பொறாமை ஏற்பட்டது. நீயும் படுத்துக்கொள் என்று உடம்பு கெஞ்சிற்று. கடையை மூடப் போகிறோம் என்று இமைகள் பயமுறுத்தின. ஒரு விநாடி பலவீனத்துக்கு இணங்க நினைத்து அவன் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டான். மேஜை மேல் ஒரு கிண்ணத்தில் வைத்திருந்த ஈரப் பஞ்சைக் கண்ணில் ஒற்றித் தூக்கத்தைக் கலைத்தான். பிளாஸ்கின் காப்பியை ஒரு மடக்குக் குடித்து மறுபடி நழுவிப்போன வரியைத் தேடிப் பிடித்தான்.

உள்ளறையிலிருந்து வளையல் சத்தம் கேட்டது. அதை அவன் காதில் போட்டுக் கொள்ளாமல் படிப்பைத் தொடர்ந்தான். அந்த அறையிலிருந்து அவனது மேஜை இடம் பெயர்ந்து நடுக் கூடத்துக்கு வந்து இரண்டு மாதங்கள் ஆகின்றன.

கணேசனுக்குக் கல்யாணம் ஆனவுடன் எந்த வித விவாதமோ கலந்துரையாடலோ இல்லாமல் வெகு இயல்பாக நடந்த இடப் பெயர்ச்சி. கணேசனும் ஒரு தனி நபர் என்கிற பகிரங்க அங்கீகாரம் இது என்று நினைக்கும்போது சற்று வேடிக்கையாக இருந்தது. ஆனால் கல்யாணத்தை அவன் பரீட்சை முடிந்த பிறகு வைத்துக் கொண்டிருக்கலாம். அத்தனை எல்லாம் யோசனையும், கரிசனமும் அவனது படிப்பின் முக்கியத்துவத்தின் பிரக்ஞையும் இந்த வீட்டுப் பெரியவர்களுக்கு இருந்தால்....! ஓ, இந்த வீடு மாறாது... கணேசனும் அப்பாவின் வழியைத்தான் தொடரப் போகிறான். அந்தண்டை இந்தண்டை கவனம் போகாமல்... அம்மா எப்படி அப்பாவின் சிந்தனைகளில் எந்த விதபாதிப்பையும் ஏற்படுத்தாத ஒரு ஜடத்தனத்துடன் வாழ்கிறாளோ அதே மாதிரிதான் இந்த மன்னியும் இருக்கப் போகிறாள்.

இந்த இரண்டு மாதங்களாகத் தனது பிரசன்னத்தை அவன் வித்தியாசமாக உணர்த்தவில்லை. இரவுதான், இந்த மாதிரி நடுக் கூடத்தில் போர்வையைப் போர்த்திய உடல்களுக்கு மத்தியில் விளக்கை எரிய விட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிற சமயத்தில்தான் 'ஓ, கணேசனுக்குக் கல்யாணம் ஆகி விட்டது' என்கிற ஞாபகம் வருகிறது. உண்மையில் பரீட்சைக்குப் படிக்க வேண்டிய மும்முரத்தில் கல்யாணத்துக்காகத் திருவடமருதூருக்குச் செய்த பயணத்தினால் குறைந்துபோன நேரத்தை எட்டிப்பிடிக்கும் வேகத்தில் அவன் பலவந்தமாக வெளி நடப்புக்களிலிருந்து தன்னைக் கழற்றிக் கொண்டிருந்தான்.

எத்தனை சுலபமாகக் கணேசனின் திருமணம் நடந்து விட்டது! நினைக்க நினைக்க அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. கணேசன் பெண்ணைக்கூட முதலில் பார்க்கவில்லை. ஜாதகம் பொருந்தி, பெண்ணின் புகைப்படம் பார்த்து, 'மோசமில்லை' என்று அப்பா அபிப்பிராயப்பட்டவுடன், கல்யாணம் நிச்சயமே ஆகிவிட்டது. இந்தக்கல்யாணத்துக்குக் கணேசனே ஒரு மூன்றாம் மனிதனைக் கிளம்பியமாதிரி கார்த்திக்கிற்குத் தோன்றிற்று. ஒரு விசனமோ அதிருப்தியோ காட்டாமல் அவனால் எப்படி இருக்க முடிகிறது? ஜேனடஸ் நரிமேக் லஸ்? தயன்வி மாதிரியா? மாறாத புன்னகையுடனா?

வளையல் சத்தம் மறுபடி கேட்டது. அவன் சரேலென்று எண்ணை ஓட்டத்தைப்பிடித்து நிறுத்தினான்.

இதோ அதோ என்று போக்குக்

ஒரு சங்கமத்தைத் தேடி

வாஸந்தி



காட்டிய பரீட்சை தெரு முனையில் வந்து நிற்கிறது. இதுதான் நம் தலையெழுத்தையே மாற்றப் போகிறது....

அவன் வெகு பிரயாசையுடன் சற்று நேரம் படித்துவிட்டுப் படுத்துக்கொண்டான்.

காலையில் அவன் கண் விழித்தபோது அப்பா தீபாராதனை ஏற்றிக் கொண்டிருந்தார். வெய்யில் பளீரென்று வீட்டிற்குள் பாய்ந்திருந்தது. வெட்ட வெளியில் படுத்திருந்தாற்போல் பிரமை ஏற்பட்டது. வெய்யில் நன்றாக ஆரம்பித்து விட்ட தெம்பில், அப்பாவின் 'சர்வ மங்கள மாங்கல்யே' அதிக கணீரென்று கேட்டது. சாஷ்டாங்கமாக வெற்று மார்புடன் நிலத்தில் விழுந்து விழுந்து நமஸ்கரிக்கையில் முழங்கால்களின் சொடுக்கல் துல்லியமாக ஒலித்தது.

அவன் அவசரமாகப் படுக்கையைச் சுருட்டி வைத்துவிட்டுப் பல் துலக்கச் சென்றான். அம்மா உள்ளே காப்பி கலக்க ஆரம்பித்திருந்தாள். அவன் தலையைக் கண்டு ''பல் தேச்சாச்சா?'' என்றாள்.

கணேசனின் மனைவி கோமதி கீழே உட்கார்ந்தபடி அரிவாள்மணையில் வாழைக்காய் தோல் சீவிக்கொண்டிருந்தாள். முன்னும் பின்னுமாக அசைந்த மாநிறக் கைகளில் பச்சையும் சிவப்புமாகத் தங்க ரேக்குடன் கண்ணாடி வளையல்கள் சப்தித்தன. குனிந்து மடியுடுத்திக் கொண்டிருந்தது பளிச்சென்று முடமுடத்த கசிருடியில் தெரிந்தது.

பின் ரேழியில் கணேசன் மணையைப் போட்டு உட்கார்ந்திருந்தான். கார்த்திக்கைப் பார்த்துப் பொதுவான புன்னகை புரிந்தான். அவன் உட்கார்ந்த இடத்திலிருந்து கோமதி அமர்ந்திருந்த சமையல் அறை மூலை நன்றாகத் தெரியும் என்பதைக் கவனித்தபடி கார்த்திக் குளியலறைக்குச் சென்றான்.

செம்பில் ஜலமும் பஞ்ச பாத்திர உத்தரிணியும் அவன் முன் கோமதி கொண்டு வைக்கையில் கணேசன் அவள் கைகளைப் பிடிப்பதும், அவள் முகத்தில் வெட்கப் புன்னகை படர்வதும் தெரிந்தது. கரணை கரணையான அவளது வெற்று புஜங்கள் மீது அவன் பார்வை ஓடித் தாழ்ந்தது. அவள் மெல்லத் தன் கைகளை விடுவித்துக் கொண்டு நகர்ந்த



போது கணேசனின் அதரங்களில் வழக்கமான ஞானப் புன்னகை வந்தமர்ந்திருந்தது.

கார்த்திக் வேகான ஆச்சரியத்துடன முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தான். இடுப்பில் இப்போது பஞ்ச கச்சம் கட்டிக்கொண்டிருந்ததில கணேசனின் முகத்தில் அதிக தேஜஸ் ஏறியிருந்தாற் போல் தோன்றிற்று. இது தேஜஸ்லோ செக்ஸ் அப்பீலோ ஏதோ ஒன்று — அந்த அநுவாளியா தன் நாடிகரு இருப்பதாகச் சொன்ன மாதிரி...

அம்மா கொடுத்த காப்பியை வாங்கிக் கொண்டு அன்றைய பேப்பரை நோட்டம் விட்டபடி கணேசனை ஆராயும்போது ஆச்சரியம் திரும்பத் திரும்ப ஏற்பட்டது. எல்லாரும் எதிர்பார்க்கிற மாதிரி நடிக்கும் நடிகன் இவன்! அல்லது கிடைத்ததைக் கொண்டு உண்மையிலேயே திருப்தி அடைகிற யோகி இவன்!

''கணேசா, கிளம்பு, நாழியாயிடுத்து!'' என்று அப்பா ஒரு குரல் கொடுத்துவிட்டுக் காத்திராமல் கிளம்பிப் போனார். கணேசன் ஏதோ செய்கை காட்ட கோமதி அவனுடன் உள்ளறைக்குச் சென்றாள். ஐந்து நிமிஷம் கழித்துக் கணேசன் கோவிலுக்குக் கிளம்பினான்.

டென்வர் நகரில் ஜனத் தொகை அதிகரித்து வருவதால் இன்னும் 20 ஆண்டுகளில் குடிநீர்த் தட்டுப்பாடு நேரும் என்று இப்போதே திட்டம் போட ஆரம்பித்து விட்டார்கள். வெளியே பல மைல் தொலைவிலிருந்து நீர் கொண்டு வர ஆகும் செலவு மிக அதிகம் என்பதால் சாக்கடை நீரைக் குடிநீராக மாற்றும் திட்டத்தை அமல் படுத்தப் போகிறார்கள்!

கழிவு நீரைக் குடிநீராக மாற்றும் காரியம் ஏற்கனவே விண் கலங்களில் நடக்கிறது. குடிநீர் கொண்டு போவதில் எடை அதிகமாகும் என்பதால் விண்வெளி வீரரின் சிறுநீரே குடிநீராக்கப்படுகிறது.

என்ன தான் இருந்தாலும் டென்வர் மக்கள் இதனை ஏற்பார்களோ என்னவோ என்பதால் முதலில் பரீட்சார்த்தமாகச் சிறிய அளவில் தொடங்கிப் பெரிய அளவில் பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆதாரம்: ஃபெமினா

தகவல்: ஸி. ஆர். ஆர். மணி



''நீ உள்ளே உக்கார்ந்துண்டு வாசிக்கலாம் கார்த்திக்'' என்றான் மன்னிப்புக் கேட்கும் தொனியில்.

கார்த்திக் செய்தித் தாளிலிருந்து தலையை நிமிர்த்தாமலே சொன்னான்:

''தாங்க்ஸ். ஆறு இன்னிக்கு லைப்ரரிக்குப் போறேன். சாயந்திரமாத்தான் வருவேன்.''

கணேசன் கிளம்பிப் போய் விட்டான் அதற்குள்.

உள்ளே அம்மா கோமதியிடம் ''விழுப் பொண்ணும் பட்டுக்கல்லியே?'' என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவனுக்குப் பெரிதாகச் சிரிக்க வேண்டும் போல் இருந்தது. அம்மா பிறக்கும்போதே ஐம்பத்தாறு வயசாகிப் பிறந்திருக்க வேண்டும் என்று தோன்றிற்று.

கணேசனின் கல்யாணத்துக்குத் தேற்றிக்குச் சென்றபோது விசாலம் அங்கேயே தங்கிவிட்டாள். தன் மஞ்சக்காணி நிலத்தின் அறுவடையையும் வரவையும் கவனிக்க வேண்டும் என்கிற காரணத்தில். அத்தை இல்லாமல் அவனுக்கும்வீட்டிற்கும் இடையே அதிக இடைவெளி ஏற்பட்டுப் போனதுபோல் இருந்தது. அவனுக்கும் மற்றவர்களுக்கும் இடையே அத்தைதான் பாலமாக இருக்கிறாள் என்று தோன்றிற்று. அவள் வர இன்னும் பத்து நாட்கள் ஆகும். ''உன் பரீட்சை சமயத்துக்கு வந்துடுவேன்'' என்று சொல்லியிருந்தாள். ''நன்னாப் படி. ஆறு உடம்பைக் கெடுத்துக்காதே!''

அம்மாவுக்குக் காட்டத் தெரியாத கரிசனமும் பிரியமும் எப்படி அத்தை காண்பிக்கிறாள் என்று ஆச்சரியமேற் பட்டது.

'அவள் சீக்கிரம் வந்து விட்டால் தேவலை' என்று தனக்குள் முணு முணுத்தபடி அவன் குளித்துச் சாப்பிட்டு விட்டுக் கிளம்பினான். கோவில் எல்லையைத் தாண்டித் தெருவைக் கடந்து பஸ் நிலையத்துக்கு வந்த உடனேயே வேறு உலகத்துக்கு வந்து விட்ட வழக்கமான உணர்வு ஏற்பட்டது.

இன்னும் பதினைந்தே நாட்கள் — பரீட்சைக்கு — நினைக்கும்போதெல்லாம் அடிவயிற்றில் பட்டாம் பூச்சிகள் பறந்தன. அவனைப் பொறுத்த வரையில் அவனது வாழ்வின் மிக முக்கியமான கட்டம். பன்னிரண்டாம் க்ளாஸ் பாஸ் பண்ணிய பிறகு கத்தி முனையில் நின்ற கட்டம் மாதிரி.

'இன்ஜினியராப் போகணும்னு அவன் தலையிலே எழுதியிருந்தா முருகனே அதுக்கு வழி பண்ணட்டும்' என்று அப்பா அன்றைக்கு நிர்த்தாட்சண்யமாக அவன்மனசைச் சுக்கலாக உடைத்து விட்ட பிரக்ஞையே இல்லாத அலட்சியத்துடன் பேசிய பிறகு, அவர் மேலும் தன் பேரிலும் ஏற்பட்ட வெறுப்புடன் இரண்டு நாட்கள் சாப்பாடு சாப்பிடாமல் அழுதான். துக்கத்தில் கரைந்து நின்ற அந்த வேளையில் அத்தைதான் அவன் முதுகை வருடியவாறு சொன்னாள்:

''ஏண்டாப்பா குழந்தை! இப்படி அழுது என்ன லாபம் சொல்லு? நன்னாப் படிக்கிற குழந்தைக்கு உபகாரச் சம்பளம் கிடைக்குமாமே. முயற்சி பண்ணிப் பாரேன்!''

''எனக்கெல்லாம் கிடைக்காது அத்தே!''

''முயற்சி பண்ணிப் பார்க்கலாம்டா! உங்க ஸ்கூலுக்கே நீதான் அதிக மார்க் வாங்கி யிருக்கியாமே. உங்க ஹெட் மாஸ்டர் தமிழர்தானே, பேசிப் பார்க்கலாம்டா!''

''அவராலே எல்லாம் ஒண்ணும் செய்ய முடியாது!''

''என்னை அவர் கிட்ட அழைச்சிண்டு போ. நான் பேசி விசாரிக்கிறேன்.''

''ஐய்ய, நீங்களா?''

அத்தை சிரித்தாள்.

''இங்கிலீஷ்லேதான் எனக்குப் பேசவராது தமிழ்லே பேசவேனே?''

அவன் அவநம்பிக்கையுடனே அவளை அழைத்துக் கொண்டு போனான். ஹெட் மாஸ்டருக்கு அறிமுகம் செய்துவிட்டு வெளி யில் வந்து விட்டான். அத்தை அவரிடம் என்ன உருக்கமான டயலாக் அடித்தாளோ, அவனுக்குத் தெரியாது. ஏதோ, ஒரு 'ட்ரஸ்டின் ஸ்காலர்ஷிப்புக்கு' அவன்பெயரைச் சிபாரிசு செய்வதாக அவர் தெரிவித்தார் என்று அத்தை வந்து சொன்னபோது அவன் மனத்தில் எந்த வித வான வில்லும் தோன்றவில்லை. ஆனால் அடுத்த பதினைந்தாவது நாள் அவரே அவன் வீட்டுக்கு வந்து இன்ஜினீயரிங் காலேஜில் அவனுக்குச் சீட்டும், உபகாரச் சம்பளமும் கிடைத்திருக்கும் விஷயத்தைச் சொன்ன போது அவனுக்கு ஏற்பட்ட மிதமிஞ்சிய சந்தோஷத்தில் அத்தையைக்கட்டிக்கொண்டு விசித்து விசித்து அழுதான்.

அத்தை அன்று வழிகாட்டி யிருக்காவிட்டால் இன்று இத்தனை கனவுகளை ஏந்திக் கொண்டு நிற்க முடியாது. அதுவும் எப்படிப் பட்ட கனவுகள்! அந்தக் கனவுகள் பலிக்க வேண்டும் என்றால் இந்தப் பரீட்சை நன்றாக நடக்க வேண்டும்....

லைப்ரரியில் பத்துப் பன்னிரண்டு பையன்கள் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். அவன் தனக்கு வேண்டிய புத்தகத்தை எடுத்துக் கொண்டு படித்துக் கொண்டே குறிப்பெடுத்துக் கொண்டான். லைப்ரரி மூட இன்னும் அரை மணி நேரம் இருந்தசமயத்தில் அவன் அன்றைக்குச்செய்து முடித்த பகுதியைப் பற்றிய சமாதானத் துடன் தலையை நிமிர்கையில் சட்டென்று பார்வை நிலைத்து நின்றது. ஹாலின் மறு கோடியில் இருந்த லிட்டரேச்சர் பகுதியில் தாரா நின்றிருந்தாள், ஏதோ ஒரு புத்தகத்தைத் தேடியபடி. அவனுக்குக் காரணம் புரியாமல் மார்பு படபடத்தது. மனசில் பிரவாகமாய் ஓர் உற்சாகம் கிளம்பிற்று.- பிடிப்பான ஜீன்ஸும், மெல்லிய மஞ்சள் ஷர்ட்டும் அணிந்திருந்தாள். இரண்டு மூன்று புத்தகங்களைப் பொறுக்கிக் கொண்டு அவள் லைப்ரேரியனை நோக்கிச் செல்வதைக் கண்டு அவனும் புத்தகங்களை எடுத்துக் கொண்டு விரைந்தான்.

அவள் லைப்ரேரியனிடம் ஏதோ கெஞ்சுகிற மாதிரி சொல்லிக் கொண்டிருந்தாள்.

''ப்ளீஸ்... இதை இன்னும் முடிக்கவில்லை. நாலே நாளில் திருப்பிக் கொண்டு வருகிறேன்.''



''எனக்கு மருதாணி ரொம்பப் பிடிக்கும்''

கமலா காமேஷின் நட்சத்திர வாழ்க்கை

மங்கையர் மலர் மார்ச் 83

''ஏகப்பட்ட ஞாபகப்படுத்தலுக்குப்பிறகு கொண்டு வந்து, மறுபடியும் டைம் கேட்கிறாய்! ஊர் சுற்றுவதைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டு படியேன்!''

அவள் மோகனமாகச் சிரித்தாள்.

''கண்டிப்பாக நாலு நாள்தான் எக்ஸ்ட்ரா ப்ளீஸ்!''

''சரி, 28ம் தேதி இருப்பதனும். வேறு ஒருத்தர் ஒரு மாதமாக இந்தப் புத்தகத்துக்குக் காத்திருக்கிறார்!''

''ஓ.கே. 28ம் தேதி!'' என்றாள் அவள் உல்லாசச் சிரிப்போடு — ''தாங்க்யூ!''

அவள் சுழன்று திரும்பிக் கார்த்திக்கைப் பார்த்து, ''ஹாய்!'' என்று இயல்பாகச் சிரித்தாள். முத்துப் பல் வரிசை மின்ன. ''இதற்கு முன் நாம் சந்தித்திருக்கிறோம் இல்லை?''

கார்த்திக் ஏழாவது சொர்க்கத்தில் இருந்தான்.

''ஆமாம்'' என்று புன்னகை புரிந்தான். ''ஆனால் ஏதும் பேசுவதற்கு முன் நீ மூர்ச்சையாகி விழுந்தாய்!''

அவள் முழுமும் நினைவு வந்தவளாய் வாய் விட்டுச் சிரித்தாள்.

லைப்ரேரியனிடம் 'ஸாரி' என்று புன்னகைத்து, அவனிடம் ''மறுபடியும் சந்திப்போம். பை!'' என்று சிரித்து வெளியில் விரைந்தாள்.

28ம் தேதி லைப்ரரி திறக்கு முன் அவன் அங்கு ஆஜரானான். (தொடரும்)



விமல்
டிஸ்கோ
ஷர்ட்
நகரில் துடிப்பூட்டும் இரவுக்
கோலாகலத்தில் பங்கு கொள்ளவே டிசைன்
செய்யப்பட்டது. இந்தியாவின்
ஷர்ட்டிங்குகள், பிரிண்ட்ஸ், ப்ளெய்ன்ஸ்,
கட்டங்கள், கோடுகள், பேனல்ஸ் ஆகிய
வற்றின் எண்ணற்ற ரகங்களிலிருந்து.
அவற்றில் 1600க்கு மேல்.
படத்தில் காட்டப்படுவது
'டிஸ்கோ பொஞன்ஸா'
VIMAL
A RELIANCE PRODUCT
ஷர்ட்டிங்குகள்


Mudra/RTI/ 942 TAM



காலையில் கதிரவன் உதயமாகி உலகத்தின் இருள் திரையை நீக்கி ஒளியை ஒரு பரிசாகத் தருவது போல் வானம் கனிந்து மேகங்களை நீராக்கி வர்ஷித்து வறண்ட பூமியின் தாகத்தைத் தணிப்பது போல், உழைத்த உடல் களைத்துப் படுக்கும்போது ஒரு மருந்தாக,ஓர் இதமாக, நித்திரை இமைகளுக்குள் புகுந்து அருள்வது போலத்தான்—

அக்காவின் கடிதங்களும் கருணையின் வடிவங்கள், நம்பிக்கைக்குப் பாத்திரமான இயற்கை நெறிகள்....

உஷாவைப் பொறுத்தவரை அந்தக் கடிதங்களின் வாசகம் முக்கியமில்லை... தவறாமல் அவை வந்துகொண்டு இருப்பதுதான் முக்கியம்.

அக்கா ஷியாமளா உஷாவின் ஒரே சகோதரி. வயதில் ஏழு வயது பெரியவள்.

பள்ளிப் பருவத்தில் பாடங்கள் கற்றுக் கொடுத்தவள்... தலை வாரி அழகாகப் பின்னி விட்டவள்.

அப்பா ஆபீஸ் உண்டு, தான் உண்டு என்று இருக்கும் அப்பாவி... அம்மா எப்போதுமே சீக்காளி.

அக்கா திருமணமாகிப் போனபோதுதான் முதன் முதலில் அவளுக்குக் கடிதம் எழுத ஆரம்பித்தாள் உஷா. உடனேயே பதில் வரும். அக்காவின் புகுந்த வீடு உள்ளூரிலேயே இருந்ததால் அடிக்கடி அவளைப் பார்க்கவும் வருவாள்.

உஷா வளர்ந்தாள்... கல்லூரியில் சேர்ந்தாள். அம்மாவோ அதிகமாக எழுந்து நடமாடுவதைக்கூடத் தவிர்த்துத் தன் படுக்கையும் தன் புலம்பல்களுமாக இருந்துவிட்டாள். சமையல்காரி ஒருத்தி வந்து போய்க் கொண்டிருந்தாள்.

அக்கா வாரம் தவறாமல் வந்து, அப்பா தரும் பணத்தில் மளிகை சாமான் வாங்கிப் போட்டு, அம்மாவையும் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தாள்.

உஷா கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டாள்.

ஒரு சுபதினத்தில் மூர்த்தியை மணந்து கொண்டாள்.

மூர்த்திக்குப் பம்பாயில் ஒரு கம்பெனியில் நல்ல வேலை. கை நிறையச் சம்பளம்.

வாட்ட சாட்டமான இளைஞன்.

உஷா அதிர்ஷ்டசாலிதான்!

பம்பாயில் இல்லறத்தைத் தொடங்கினாள் உஷா. பம்பாய் வந்து சேர்ந்தவுடன் முதற் காரியமாக அக்காவுக்குக் கடிதமெழுதினாள். அதற்கு அக்காவிடமிருந்து வந்த பதில் ஒரு கவிதையைப் போல் அழகு மயமாக, கருத்துக் களஞ்சியமாக இருந்தது. வரிக்கு வரி அக்காவின் அன்பை ஸ்பரிசிப்பது போல் போல் இருந்தது.

காலம் சுழன்றது... பிறந்த வீட்டுக்குப் போக வேண்டி வந்தது — அம்மாவின் சாவிற்கு...

அதன் பின் அவள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை பிறந்த வீடு செல்வாள். துறவி போல் அப்பா மட்டும்... ஆனால் அவள் வந்துவிட்டாள் உடனேயே அக்காவும் வந்துவிடுவாள் பிறந்த வீட்டுக்கு. அக்காவின் முக தரிசனம், இன்சொல், அந்த முறுவல், அந்த இதம்... 'உனக்கு நான் இருக்கிறேன்.. என் மனத்தில் உனக்காக அன்பை நிறைத்துக் கொண்டு இதோ, நான் இருக்கிறேன், பார்!' என்று அக்கா சொல்வதாக உஷாவுக்குத் தோன்றும்.


பத்தாண்டு கால இல்லறத்துக்குப் பிறகு உஷாவின் மிகப் பெரிய மனக் குறையை ஆண்டவன் தீர்த்து வைத்தான். ஒரு குழந்தைக்காக அவள் ஏங்கிய ஏக்கம் தீர ராஜா பிறந்தான்.

அக்காவின் மகிழ்ச்சிக்கோ எல்லையே இல்லை. உஷா பேறுக்காகப் பிறந்தகம் வந்தபோது தானும் வந்து, அவளைக் கவனித்து, அவள் உடல் நலம் தேறி மூன்று மாதக் குழந்தையுடன் பம்பாய் திரும்பும் வரை அவளைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொண்டதெல்லாம் அக்காதான்.

அவள் பம்பாய் திரும்பினதும் கடிதங்களின் பரிமாறல் தொடர்ந்தது.

மூர்த்தியின் போக்கில் இந்த மாறுதல் எப்போது ஆரம்பித்தது என்று அவளுக்கே தெரியவில்லை.

கடிதம்



அலுவலகம் விட்டதும் வீடு வருவதில் தாமதம். ''ஏன்?'' என்று கேட்டால் பட்டென்று எரிச்சல் மயமாகத் தெறிக்கும் வார்த்தைகள்...

இவற்றில் எதற்குமே அவள் அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை முதலில்... அவளுடைய உலகம் அழகு மயமாக இருந்தது. விசுவரூபம் எடுத்துவிட்ட ஏக்கம் நீங்கிக் கையில் அழகான குழந்தை... எத்தனை அழகு அவள் மகன்! என்ன புத்திசாலித்தனம்! என்ன துறுதுறுப்பு! எத்தனை பாக்கியசாலி அவள்!

ராஜாவுக்கு மூன்று வயதானபோதுதான் முதன் முதலில் மூர்த்தியைப் பற்றிய அந்தச் செய்தி அவள் செவிகளில் விழுந்தது.

ஒரு நாள் பக்கத்து வீட்டுப் பெண் கேட்டாள். ''என்ன உஷா, உனக்கு நாளுக்கு நாள் அழகு கூட வயசு குறைவதாகப் பிரமையா?''

இதென்ன கேள்வி என்று உஷா யோசிக்கையில் அவள் தொடர்ந்தாள்.

''நீ இப்போது மகிழ்ச்சியான, ஆனால் கவர்ச்சியில்லாத பெண்... உன் கணவனோ இளமைத் தோற்றம் மாறாத ஆண்மகன். மறக்காதே!''

''எதற்கு இந்த இமர் உபதேசம்?''

''நேற்று நான் மிஸ்டர் மூர்த்தியை ஒரு ஹோட்டலில் பார்த்தேன் — ஆபீஸ் நேரத்தில். அவருடன் ஒரு க்ளாமரஸ் யங் வுமன்... அவருடைய ஸ்டெனோ என்பது அவர்களுடைய சம்பாஷணையிலிருந்து தெரிந்தது.''

உஷாவுக்குச் சட்டென்று உலகத்தின்மீதே கோபம் வந்தது.

''இது பெரிய பாவமா? பசி வேளையில் ஒரு மனிதர் ஹோட்டலுக்குப் போகக் கூடாதா? அவருடைய ஸ்டெனோவும் கூட வந்தால் உடனே இல்லாததையெல்லாம் கற்பனை பண்ணத்தான் வேண்டுமா?''

''உன் வாதத்தை நான் பரிபூர்ணமாக ஏற்கிறேன்.... நீ சொல்வதைத்தான் நானும் நினைத்திருப்பேன் — அவர்கள் ஒருவரோடொருவர் பழகும், பேசும் விதத்தைக் கவனித்திருக்கா விட்டால்... எதற்கும் எச்ச

ருக்மிணி பார்த்தசாரதி

சிக்கையோடு இரு உஷா... இந்த மாதிரி இல்லாமல் மௌனமாகவும் கஷ்டப்படுவது கடைசியில் மனைவிதான். இதுதான் நம் சமூகத்தின் இன்றைய நிலைமை!''

அன்று மூர்த்தி இரவு எட்டு மணிக்குத் தான் வீடு வந்தான். ''ஏன் இத்தனை லேட்?'' என்றாள் உஷா. ''ஷட் அப்! நீ யார் என்னைக் கேள்வி கேட்க? உன் வேலையைப் பார்!'' என்று வெடித்தான். ராஜா, ''அப்பா!'' என்று அவன் கால்களைக் கட்டிக் கொண்ட போது, ''போடா சனியனே... உன் அம்மா மாதிரி தொண தொணக்காதே!'' என்றான். ஏமாற்றத்தினால் அழ ஆரம்பித்த ராஜாவை வாரி அணைத்தவாறு உஷா சமையலறைக்குச் சென்றாள்.

மறுநாள் காலை எழுந்தபோது ராஜாவுக்கு நல்ல ஜுரம்.

''இன்னிக்கு லீவு போடுங்கள். குழந்தையை டாக்டர் வீட்டுக்குக் கூட்டிப் போகணும்!'' என்றாள் உஷா.

''இன்னிக்கு முக்கியமான வேலை இருக்கு. அரை நாள் வேலை பார்த்துட்டு இரண்டு மணிக்குள் வந்துடறேன்... ரெடியா இரு!''

அவன் இன்று அக்கறையோடு உடுத்திக் கொள்வதை உஷா பார்த்தாள். இளம்பு முன் ஜாக்கிரதையாக ஒரு பரிசுப் பொட்டலத்தைத் தன் பீரோவிலிருந்து எடுத்து ப்ரீஃப் கேஸுக்குள் வைப்பதையும் பார்த்தாள். அவள் பார்ப்பதைக் கவனித்த அவன், ''ஒரு கேர்ள்ஃப்ரெண்டுக்குப் பிறந்த நாள்!'' என்று அவளை நேருக்கு நேர் பார்க்காமலேயே சொன்னான்.

அவன் சென்று விட்டான்.

ஒரு கேர்ள்ஃப்ரெண்டுக்குப் பிறந்த நாள்..... அவன் தன் பரிசைத் தன் கையினால் கொடுத்தே ஆக வேண்டும்.

இதுதான் இன்றைய முக்கிய வேலை... இதற்காகத்தான் அலுவலகம் போகிறான்.

''நாய்கள் ஜாக்கிரதை'' என்று பல வீடுகளில் போர்டுகள் தொங்க விட்டிருப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் மதுரை மஹால் அருகில் உள்ள ஓர் இடத்தில் ''பேய்கள் ஜாக்கிரதை'' என்று ஒரு போர்டு தொங்க விட்டுள்ளனர்.

—மீனாட்சி



ஜுரத்தில் சுருண்டு படுத்திருக்கும் மூன்று வயதுக் குழந்தை – பத்து வருட தாம்பத்தியத்துக்குப் பிறகு பிறந்த தவப் புதல்வன்–முக்கியமல்ல. அருமையான அந்த கேர்ள்ஃப்ரெண்டின் பிறந்த நாள் தான் முக்கியம்..

அவள் மனத்தில் குப்பென்று துயரமும் பலவீனமும் நிறைந்தன. தான் இப்படி ஆதரவற்றுப் போனதாய் அவள் இதற்கு முன் எப்போதுமே உணர்ந்ததில்லை.

குழந்தைக்கருகே கவலையோடு உட்கார்ந்திருந்தாள் உஷா. தொட்டுத் தொட்டுப் பார்த்தாள். ஜுரம் அனலாய்க் கொதித்தது.

மணி மூன்றரை, நாலு....

மூர்த்தி வரவில்லை.

உஷா அநாதைக் குழந்தையைப் போல் அழுதாள். ''நான் என்ன செய்வேன்? என்ன செய்வேன்?'' மூளையே மந்தப்பட்டுப் போனது போல் அவள் அழுதாள். உடலும் மனமும் செயலற்றுப் போக, பலவீனமாக அழமட்டும்தான் முடிந்தது.

''நான் என்ன செய்வேன்? அவர் வரவில்லையே! தெய்வமே, நான் என்ன செய்வேன்?''

சட்டென்று ''ஸ்...ஸ்...'' என்று ஒரு சிறு சத்தம்.

கதவின் அடியிலே வழுக்கிக்கொண்டு உள்ளே வந்திருந்தது–

கடிதம்!

ஓடிச் சென்று அதைக் கையில் எடுத்தாள்.

ஆம். அக்காவின் கடிதம்.

இரு கைகளுக்கு இடையே கடிதத்தைப் பிடித்தாள். பொக்கிஷம் போல் அதைக் கைகளுக்குள் மூடிக் கொண்டாள்.

அக்காவின் கடிதம்.

''நான் இருக்கிறேன் அசடே! பீதியில் பலமற்றுப் போனாயே!''

கைகளை அகற்றிக் கடிதத்தை வாஞ்சையோடு பார்த்தாள் உஷா. மிருதுவாகத் தடவிக் கொடுத்தாள்.

''என் அன்பை நினைத்துக் கொள் உஷா! தைரியத்தை இழக்காதே!''

கடிகாரத்தைப் பார்த்தாள் உஷா. நாலரை.

கடிதத்தைப் பிரிக்கக் கூட இல்லை. அதை அப்படியே எடுத்துக் கொண்டு பூஜை அறைக்குள் சென்றாள். மலரை வைப்பது போல் கடிதத்தை வைத்தாள்.

உடலில், மூளையில், சட்டென்று பலம், தெளிவு!

அவசரமாக முகத்தைக் கழுவிக் கொண்டாள். பணத்தை எடுத்துக் கைப் பையில் வைத்துக் கொண்டாள்.

சுருண்டு படுத்திருந்த குழந்தையைத் தோள்மேல் சாத்திக் கொண்டு, வீட்டை விட்டு வெளியே வந்து கதவைப் பூட்டினாள். டாக்ஸி ஸ்டாண்டை நோக்கி நடந்தாள்.

நேரே வைத்தியரின் கிளினிக்குக்குப் போக வேண்டும்... உடனே கவனிக்க வேண்டியது ராஜாவைத்தான். இந்த ஜுரத்துக்கு முதலில் மருந்தைத் தேட வேண்டும்.

தன் வாழ்க்கைப் பிரச்னைக்கும் அவள் மருந்தைத் தேடிவிடுவாள், தைரியமாக, நிச்சயமாக!

யூ.எல்.ஐ.பியில் முதலீடு செய்ய மூன்று முக்கிய காரணங்கள்.



யூ.எல்.ஐ.பி (யூனிட் லிங்க்ட் இன்சூரன்ஸ் பிளான்) உங்கள் குடும்பத்துக்கு பாதுகாப்பு கொடுப்பதுடன் வேறு சில நன்மைகளையும் கொடுக்கிறது.

<u>வரிச்சலுகை</u> : ஆண்டு தோறும் யூ.எல்.ஐ.பி யில் முதலீடு செய்யும் உங்கள் பணத்திற்கு பிரத்யேக வரிச்சலுகை கிடைக்கிறது.

<u>ஆயுள் பாதுகாப்பு</u> : நீங்கள் சேர்ந்திடும் குறியீட்டுத் தொகைக்கு மருத்துவ பரிசோதனை இல்லாமலே ஆயுள் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

<u>விபத்து பாதுகாப்பு</u> : ரூ 15,000 வரை விபத்து பாதுகாப்பும் அளிக்கப்படுகிறது.

இது மட்டுமா ? முதலீட்டுக்கு அதிக வருமானமும் உண்டு.

காலம்	வருடாந்திர தவணை தொகை	குறியீட்டுத் தொகை	திட்ட முடிவில் கிடைக்கும் தொகை
10 வருடங்கள்	ரூ 1,200	ரூ 12,000	ரூ 18,500
15 வருடங்கள்	ரூ 800	ரூ 12,000	ரூ 23,000

ரூ 12,000 மதிப்புள்ள யூ.எல்.ஐ. பி திட்டத்தில் சேர்ந்து 3 ஆண்டுகள் கழித்து மற்றுமொரு திட்டத்திலும் சேரலாம். வரி களைத் தவிர்த்திட திட்டமிடுங்கள் இப்பொழுதே. இதர விபரங்களுக்கு எங்கள் ஏஜெண்டுகள், தலைமைப் பிரதிநிதிகள் மற்றும் பாங்க் ஆஃப் பரோடாவின் கிளைகளை அணுகுங்கள்.


யூனிட் ட்ரஸ்ட் ஆப் இந்தியா

தலைமை அலுவலகம் : பம்பாய்
(ஒரு பொதுத்துறை நிதி நிறுவனம்)
பிராந்திய செயலகம் :
ரெஜின்ஸ் மான்ஷன், 46 செகண்ட் லைன் பீச்,
சென்னை-600 001. போன் : 27433

எங்கள் முக்கிய பிரதிநிதிகள் : ● ஏ. தனபால், 10-ஜே, ஹிலரிரோடு, கோவை-641 018 போன் : 34776 ● எம். ராமமூர்த்தி, 30 எல்.ஐ.சி காலனி, மதுரை : 625 002 போன் : 30160 ● கே. முத்துசாமி, 52-ஏ, வ.உ.சி நகர், தஞ்சாவூர் : 613 007 போன் : 1224 ● என்.கே. இன்கர்சால், 155 கவர்னரம்பிகை தெரு, அன்னதானபட்டி, சேலம் : 636 002 போன் : 64302 ● எம்.எம். காஜா, பக்காளி பில்டிங் அனெக்ஸ், 41-B, திருவனந்தபுரம் ஹைரோடு, பாளையங்கோட்டை : 627 002 போன் : 2395 (வீடு)

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாக இருக்கட்டும்.

Sista's-UTI. 74.82.TM. C



கல்யாண சமையல் சாதம்.. காய்கறிகளும் பிரமாதம்.. இந்தக் கௌரவப் பிரசாதம்.. இதுவே எனக்குப் போதும்!
''டாய்!.... கஸ்மாலம்!... நேரம் காலம் தெரியாம கண்டரெகார்டுபோட்டுக்கிட்டு..''
ஆர்டரின் பேரில் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும். எந்தக் கட்சியும் அணுகலாம்!
ரேட் விவரம்
5 நாளுக்கு மேல் ரூ 3000
3 நாள் ரூ 2000
1 நாள் ரூ 1001
அரை நாள் ரூ 750
8 மணி ரூ 600
4 மணி ரூ 500
முகவரி:- தொப்பை குப்புசாமி
ஐயோ, பாவம் உண்ணாவிரதம்!
உண்ணாவிரதம் வெற்றிகரமான 7-ம் நாள்
உண்ணாவிரதம் வெற்றிகரமான 35ம் நாள்
உண்ணாவிரதம் வெற்றிகரமான 100 வது நாள்
''சங்க காலம் முதல் புரட்சித் தலைவர் ஆட்சியின் தங்க காலம் வரை உண்ணாவிரதம் பற்றி ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் வாங்கப் போறேன்!''
அமைச்சர்
''இன்னாடாது தொல்லே! உண்ணா விர இலாகா மந்திரி கிட்டே போப்பா!''



''உண்ணா விரதத்துக்குச் சகுனம் சரியில்லே.. குண்டு கல்யாணம், பக்கோடா காதர் உசிலே மணியெல்லாம் எதித்தாப்புல போறாங்க!''



''உண்ணா விரதம் முடிச்சுட்டுத் தலைவர் தள்ளாடுறார்!... பாவம்!... பசி மயக்கம்!...''

''சும்மாருப்பா!.... அவரு எலுமிச்சம் சாறுக்குப் பதிலா 'சரக்கு' அடிச்சிருக்கார்!''






கள்வனின் காதலி

அத்தியாயம் 37

கமலபதி

“கண் எல்லாவற்றையும் பார்க்கிறது; காது பேசுவோர் வார்த்தைகளையெல்லாம் கேட்கிறது; வாய், காரியம் இருக்கிறதோ இல்லையோ பலரிடத்திலும் பேசுகிறது. ஆனால் கண்ணானது ஒருவரைப் பார்க்கும்போது மற்ற யாரைப் பார்க்கும்போதும் அடையாத இன்பத்தை அடைகிறது. அவர் பேசுவது சாமானிய விஷயமானாலும், அவருடைய குரலில் விசேஷமான இனிமை இராவிட்டாலும், அவருடையவார்த்தையைக் காது தேவாமிருதத்தைப் பருகுவது போலப் பருகுகிறது. அவரிடத்தில் பேசும்போது வாய் குளறுகிறது.

அமரர் கல்கி



நாக்கு கொஞ்சுகிறது. இதெல்லாம் அன்பின் அடையாளம். ஆனால் இவ்வன்பு எப்படிப் பிறக்கிறது என்றாலோ அது தேவரகசியம்—மனிதரால் சொல்ல முடியாது'' என்று லைலா மஜ்னூன் கதையாசிரியர் வ.வே.சு. ஐயர் சொல்கிறார். காதலுக்கு மட்டுமின்றிச் சிநேகிதத்துக்கும் இது ஒருவாறு பொருந்துவதைக் காண்கிறோம். சிலபேரை வாழ்நாள் முழுவதும் பார்த்துப் பழகிக் கொண்டிருந்தாலும் அவர்களுடன் நமக்கு அந்தரங்க சிநேகம் ஏற்படுவதில்லை. ஆனால் வேறு சிலரை முதல் தடவை பார்த்தவுடனேயே நமக்குப் பிடித்துப் போய் விடுகிறது. பிறகு அவர்களிடமுள்ள குறைகளையெல்லாம் நாம் அலட்சியம் செய்யத் தயாராகி விடுகிறோம். அவற்றுக்குச் சமாதானம் கண்டு பிடிக்கவும் முயல்கிறோம். ஒருவர் என்னதான் குரூபியாகட்டும், அவரை நமக்குப் பிடித்துப் போனால், ''முகம் எப்படி இருந்தால் என்ன? குணத்தையல்லவா பார்க்க வேண்டும்? என்ன சாந்தம்? என்ன அடக்கம்!'' என்று எண்ணி மகிழ்கிறோம். படிப்பில்லாத நிரட்சரகுக்ஷியாயிருக்கட்டும் அவரிடம் பிரியம் உண்டாகி விட்டால், ''படிப்பாவது, மண்ணாங்கட்டியாவது? படித்தவர்கள் பரம முட்டாள்களாயிருக்கிறார்கள். இவரிடம்தான் என்ன புத்திசாலித்தனம்? என்ன சாதுரியமாய்ப் பேசுகிறார்?'' என்றெல்லாம் எண்ணிச் சந்தோஷப்படுகிறோம்.

இப்படி உண்டாகும் சிநேகத்தின் இரகசியம்தான் என்ன? ஏன் சிலர் மட்டும் வெகு சீக்கிரத்தில் பிராண சிநேகிதர்களாகி விடுகிறார்கள்? அவர்

களைப் பார்ப்பதிலும் பேசுவதிலும் ஏன் இவ்வளவு ஆவல் உண்டாகிறது? நமது அந்தரங்க மனோரதங்களையும் நம்பிக்கைகளையும் அவர்களிடம் சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறது? ''பூர்வ ஜன்மத்துச் சொந்தம்'' ''விட்ட குறை தொட்ட குறை'' என்றுதான் அதற்குக் காரணம் சொல்ல வேண்டியிருக்கிறது.

* * *



முத்தையனுக்கும் கமலபதிக்கும் ஏற்பட்ட சிநேகத்தை வேறு விதமாய்ச் சொல்வதற்கில்லை. கமலபதி, மதுரை ஒரிஜினல் மீனாட்சி நாடகக் கம்பெனியின் பிரசித்த ஸ்த்ரீ பார்ட் நடிகன். முத்தையன் மோட்டார் விபத்திலிருந்து தப்பிச் சென்ற இரவு ஏறிய ரயில் வண்டியில்தான் முதன் முதலாக அவனைச் சந்தித்தான். பார்த்தவுடனேயே ஒருவருக்கொருவர் பிடித்துப் போய்விட்டது. கமலபதியின் வற்புறுத்தலின் பேரிலேயே முத்தையனை நாடகக் கம்பெனியில் சேர்த்துக் கொண்டார்கள்.

சில தினங்களுக்குள் அவர்களுடைய நட்பு முதிர்ந்து இணைபிரியாத தோழர்களாயினர். முத்தையன் ஒரு நாள் தன்னுடைய கதையையெல்லாம் உள்ளது உள்ளபடி கமலபதியிடம் சொன்னான். கப்பல் ஏறிப் போய்விடுவது என்ற தன்னுடைய தீர்மானத்தையும் அதற்குமுன்னால் அபிராமியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையையும் தெரிவித்தான். கமலபதி அவனுக்கு உதவி செய்வதாக வாக்கு அளித்தான். அத்துடன் அந்தநாடகக் கம்பெனியே கூடிய சீக்கிரம் சிங்கப்பூர் போகப் போவதாகவும், அப்போது சேர்ந்தாற்போல் முத்தையன் போய்விடலாம் என்றும் கூறினான்.

பின்னர் கமலபதி சென்னையிலுள்ள பெண்களின் கல்வி ஸ்தாபனங்கள் ஒவ்வொன்றிற்கும் போகத் தொடங்கினான். தனக்கு விதவையான ஒரு தங்கை இருப்பதாகவும், அவளை ஏதாவது ஒரு

பெண் கல்வி ஸ்தாபனத்தில் சேர்க்க வேண்டும் என்றும், அதற்காக விவரங்களைத் தெரிந்து கொள்ள வந்ததாகவும் அவன் ஒவ்வொரிடத்திலும் கூறினன். அத்துடன் அம்மாதிரிப் பள்ளிக்கூடங்களில் நடக்கும் நாடகங்கள், கதம்பக் கச்சேரிகள் முதலியவற்றுக்குத் தவருமல் போய் வந்தான். எல்லாம் அபிராமியைக் கண்டு பிடிக்கும் நோக்கத்துடன்தான் என்று சொல்ல வேண்டியதில்லே. கடைசியாக, சரஸ்வதி வித்யாலயத்தின் தலேவி, சகோதரி சாரதாமணி அம்மையுடன் அவன் பேசிக் கொண்டிருந்தபோது தற்செயலாக அபிராமி அங்கு வரவே, முக ஜாடையிலிருந்து அவன் முத்தையன் தங்கையாய்த்தான் இருக்க வேண்டும் என்று அவன் ஊகம் செய்தான். சாரதாமணி அவளே ''அபிராமி'' என்று கூப்பிட்டதும் அவனுடைய சந்தேகம் முழுவதும் நீங்கி விட்டது. மிகவும் குதூகலத்துடன் அன்று திரும்பிச் சென்று, ''பலராம்,* உன்னுடைய தங்கையைக் கண்டு பிடித்து விட்டேன்'' என்று உற்சாகமாய்க் கூறினன். அதைத் தொடர்ந்து மெதுவான குரலில் ''என்னுடைய காதலியையும் கண்டு பிடித்தேன்'' என்று சொன்னன்.

முத்தையனுக்கு இருந்த பரபரப்பில் கமலபதி பின்னல் சொன்னதை அவன் கவனிக்கவில்லே.

* * *

அபிராமியை முத்தையன் எப்படிப் பார்ப்பது என்பதைப் பற்றி அவர்கள் யோசிக்கத் தொடங்கினர்கள். நேரே போய்ப் பார்த்தால் கட்டாயம் அபிராமி முத்தையனேக் கண்டதும் ''அண்ணு!'' என்று அலறிவிடுவாள். அபாயம் நேர்ந்துவிடும். கமலபதி அவளே அழைத்து வரலாமென்ருல் அது எப்படி முடியும்? அன்னியனுகிய அவனுடன் அபிராமியை அனுப்ப வித்யாலயத்தின் தலேவி சம்மதிப்பாளா? அபிராமிதான் வருவாளா?

ஏதேதோ யோசனேகளெல்லாம் செய்தார்கள். யுக்தியெல்லாம் பண்ணினர்கள். ஒன்றும் சரியாய் வரவில்லே.

முத்தையனுக்கு அபிராமி படிக்கும் பள்ளிக்கூடத்தைச் சுற்றிப் பார்த்துவிட்

---

* முத்தையன் தன்னுடைய பெயரை மாற்றி 'பலராம்' என்று கூறியிருந்தான். நாடக விளம்பரங்களில் அந்தப் பெயர்தான் அச்சிடப்பட்டிருந்தது. கமலபதிக்கு அவனுடைய சொந்தப் பெயர் தெரிந்த பிறகும், சந்தேகம் ஏற்படாதபடி 'பலராம்' என்றே அழைத்து வந்தான்.




அருள்வாக்கு

கடவுள் மகா சக்தி படைத்தவர் மட்டுமல்ல; பரம காருண்யமும் பொருந்தியவர். எனவேதான் அவர் அனைத்துக்கும் அப்பாற்பட்ட அருவமாயினும் பக்தர்கள் தங்கள் இந்திரியங்களால் ரசித்து, கண்ணாரக் கண்டு வாயாரப் பேசி, கையார ஸ்பரிசித்து மகிழும் வண்ணம் பல உருவங்களும் தரிக்கிறார். கடவுள் இல்லே என்று வாதம் செய்பவர்களிடம் தம்மை நிரூபித்துக் கொள்வதற்காக அவர் உருவம் எடுத்துக் கொண்டு வரமாட்டார். 'கடவுள் உண்டு அவரை அனுபவிக்க வேண்டும்' என்று தாபத்துடன் வேண்டுபவர்களிடம் கருணே கொண்டு அவர்களுக்கே உருவத்துடன் காட்சி தருவார். அருவமாயினும் உருவம் கொள்வார். மின்சாரம் ஒயரில் வருகிறபோது அருவமாயிருந்தாலும் காற்றடக்கமான ஒரு கண்ணாடிச் சிமிழும் (bulb) அதனுள் ஒரு சிறு கம்பியும் (filament) சேர்த்து ஸ்விட்சைப் போட்டால் அருவ மின்சாரமே ஜோதி ரூபமாகிறதல்லவா? பக்தர்கள் தங்கள் இதயச் சிமிழில் பக்தி என்ற கம்பியைப் பூட்டிக் கொண்டு சிரத்தை என்கிற ஸ்விட்சைத் தட்டி விட்டுக் கொண்டால் அருவமான கடவுள் திவ்ய மங்கள ஜோதியாகத் தரிசனம் தருவார். ஸூரிய வெப்பத்தில் கடல் நீர் ஆவியாகப் போகும்போது அருவமாகி விடுகிறது. அதுவே மேகமாகக் குளிர்ந்தால் நம் கண்ணுக்குத் தெரிகிற மழையாகிறது. இன்னமும் குளிர்ந்தால் கெட்டியான பனிக் கட்டியே ஆகிறது. நம் இதயம் எத்தனேக் கெத்தனே குளிர்ந்து ஈஸ்வரனே ஸ்மரிக்கிறதோ அத்தனேக்கத்தனே ஸ்தூலமாக அருவ தத்துவம் உருவம் கொள்கிறது.

—ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகள்

தொண்டை கெட்டுவிட்டதா?

ஆறு வழிகளில் உடனடியாக நிவாரணம் பெற



ஒரு வொகாஸில்




வொ கா ஸி ல்

வொகாஸிலை சாப்பிடுங்கள், கரகரப்பு- இருமலிலிருந்து விடுதலை பெறுங்கள்.

தயாரிப்பவர்கள்: பார்லே ப்ராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெடின் பார்மஸிடிகல் டிவிஷன். PARLE

ULKA-VOC-12 TAM

ராலி:.பேன் விசிறிகளின் உள்ளமைந்த மேம்பாடு. இது காலச் சோதனைகளை வென்றது.



ராலி:.பேன் டிலைட் பெருமையை நாடறியும்.

தரச் சிறப்பு என்ற கண்ணோட்டத்தில் பார்க்கிற போது, ராலி:.பேன் விசிறிகளுக்கு இணையே இல்லை. ஏனெனில் காலச்சோதனைகளில் வென்று நின்றிட, ஒவ்வொரு ராலி:.பேன் விசிறியும் கடுமையான தரச் சோதனைக்கு உள்ளாகிறது. விசேஷ ஸிங்கிள்-பீஸ் பிளேடுகள் என்பதால், சீராக ஓடுவதோடு இரைச்சலும் இருக்காது. மிக நுணுக்கமான கியர்-பாக்ஸ் இருப்பதால், உதறல் இன்றி, சமனிலை இயக்கம் கிடைக்கிறது. மின்சார முறை வண்ணப்பூச்சு காரணமாக மெருகு நீடித்து நிற்கிறது: ஆகவே உங்களுக்குக் கிடைப்பது— இத்தனைச் சிறப்புகளும் உள்ளடங்கிய அருமையான விசிறி. தேர்ந்தெடுக்க வசதியாக பலவகை ராலி:.பேன் விசிறிகள், டெபொனேர், டீலக்ஸ், நியூ டிலைட், டெமாக்ரேட் மற்றும் பெடஸ்டல், வால், கேபின் விசிறிகள், ஒவ்வொன்றிலும் ஓங்கி நிற்கும் ராலி:.பேன் மேம்பாடு.



ராலி:.பேன்

தரமோங்கிய தயாரிப்புகளுக்கு

ராலீஸ்

மல்ட்டி-டெக்னலஜி க்ரூப்

ULKA-RF-1-82 TAM

டாவது வரவேண்டும் என்று ஆவல் இருந்தது. கமலபதி அதெல்லாம் கூடாது என்று தடுத்து வந்தான். முத்தையனுடைய ஆவல் மேலும் மேலும் வளர்ந்தது. ஒரு நாள் அவன் கமலபதிக்குக் கூடச் சொல்லாமல் வெளியே போனான்.

* * *

முத்தையன் அன்று திரும்பி வந்ததும் அவசரமாகக் கமலபதியை அழைத்துத் தனி இடத்துக்குச் சென்று ''கமலபதி! நான் அபிராமியைப் பார்த்து விட்டேன்'' என்றான். அவனுடைய கண்களில் ஜலம் ததும்பிற்று.

''ஐயோ! என்ன காரியம் செய்தாய்? இப்படிப் பண்ணலாமா?'' என்று கமலபதி கவலையுடன் கேட்டான்.

''கமலபதி! நான் இன்றைக்கு அவளைப் பார்த்ததே நல்லதாய்ப் போயிற்று. இனிமேல் எனக்கு அத்தகைய சந்தர்ப்பம் கிடைக்குமோ என்னமோ?'' என்றான் முத்தையன்.

பிறகு, அவன் அன்று சாயங்காலம் நடந்ததை யெல்லாம் விவரமாய்க் கூறினான். அபிராமியின் பள்ளிக்கூடத்தைத் தூரத்திலிருந்து பார்த்துவிட்டாவது வரலாம் என்று கமலபதியிடம் சொல்லிக் கொள்ளாமல் போனதாகவும், பள்ளிக்கூடத்து மதிற்சுவரைச் சுற்றி வருகையில்,

''வேலனையே அழைப்பாய் விந்தைக் குயிலே''

என்ற பாட்டை அபிராமியின் குரலில் கேட்டுப் பிரமித்து நின்றதாகவும், மதில் சுவரின் மேலாக எட்டிப் பார்த்த போது, மருதாணிப் புதர்களுக்கு அப்புறத்தில் மர மல்லிகை மரத்தடியில் அபிராமியும் இன்னொரு பெண்ணும் இருந்ததாகவும், அப்பால் போகக் கால் எழாமல் தான் அங்கேயே நின்றதாகவும் கூறினான்.

''கமலபதி! என் மனம் இன்றுதான் ஆறுதல் பெற்றது. அபிராமியை நான் பார்த்துவிட்டேன். அவள் என்னை நினைத்துக்கொண்டிருக்கிறாள் என்றும் அறிந்தேன். என்னை அவள் திருடன் என்று வெறுக்கவில்லை. என்னிடத்தில் அவளுடைய அன்பும் மாறவில்லை. இனிமேல் எனக்கு வேறு என்ன வேண்டும்...?''

''கல்யாணியைத் தவிர!'' என்றான் கமலபதி.

முத்தையன் பெருமூச்சு விட்டான். ''கமலபதி! நீ எனக்கு ஒரு வாக்குறுதி கொடுக்க வேண்டும்'' என்று அவன் கைகளைப் பிடித்துக்கொண்டான்.



திபேத்தியர்கள் கயிலை மலையில் அங்கப் பிரதட்சிணம் செய்வது பார்ப்பதற்கு வியப்பாக இருக்கும். ஓரிடத்தில் நின்று சாஷ்டாங்கமாகக் கும்பிடுவது போல் விழுந்து கும்பிடுகிறார்கள். அவ்வாறு கும்பிடும்போது கையை நீட்டி ஒரு கோடு கிழித்து மறுபடியும் எழுந்து அந்தக் கோட்டுக்கு வந்து மீண்டும் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கிறார்கள். இவ்வாறாக நாற்பத்தோரு கிலோ மீட்டர் தூரத்தையும் அங்கப் பிரதட்சிணம் மூலம் கடக்கிறார்கள். உடல் பாதிக்கப்படாமல் இருக்க உடலின் முன் பக்கம் பதனிடப்பட்ட தோல் ஒன்றைக் கழுத்திலிருந்து தொங்கும்படி அணிந்துள்ளார்கள். இடுப்பில் ஒரு கம்பள ஆடையை உடுத்தியுள்ளார்கள்.

-மெய்ஜி

நன்றி: தர்ம சக்கரம்

''ஒன்றாய்ப் போவானேன்? எத்தனை வேண்டுமானாலும் தருகிறேன்.''

''தயவு செய்து இப்போது விளையாட்டுப் பேச்சு வேண்டாம். கமலபதி! புராணங்களில் சொல்வார்களே, இடது கண் துடிக்கிறது. இடது தோள் துடிக்கிறது என்றெல்லாம். அப்படியொன்றும் எனக்குத் துடிக்கவில்லையானாலும் ஏதோ விபரீதம் வரப் போகிறதென்று மட்டும் என் மனம் சொல்கிறது. இதைக் கேள். அபிராமியும், அவள் தோழியும் பேசிக் கொண்டிருந்தார்கள் அல்லவா? நானும் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தேனல்லவா? அப்போது இன்னொரு பெண் வந்து, 'அபிராமி! உன்னைக் கூப்பிடுகிறார்கள். யாரோ திருப்பரங்கோவிலிலிருந்து உன்னைப் பார்க்க மனுஷாள் வந்திருக்கிறார்களாம்' என்றாள். உடனே அபிராமி எழுந்து போனாள். அதைக் கேட்டது முதல் என் மனத்தில் கலக்கம் ஏற்பட்டிருக்கிறது. திருப்பரங்கோவில் மனுஷர்கள் இப்போது எதற்காக இங்கே வரவேணும்?''

கமலபதி சிரித்தான். ''எத்தனையோ உற்பாதங்கள், அபசகுனங்களைப் பற்றி நான் கேட்டிருக்கிறேன் இது எல்லாவற்றையும் தூக்கி அடிப்பதாயிருக்கிறது'' என்றான்.

முத்தையன், ''அது எப்படியாவது இருக்கட்டும். என்னுடைய பயம் பொய்யாய்ப் போனால் ரொம்ப நல்லது. ஒருவேளை நிஜமானால், என்னைப் போலீஸார் பிடித்து விட்டால், அல்லது நான் இறந்து போனால், அபிராமியை நீதான் காப்பாற்ற வேணும். கமலபதி! அவளுக்கு வேறு திக்கே கிடையாது. அப்படிக் காப்பாற்றுவதாக எனக்கு வாக்குறுதி கொடுப்பாயா?'' என்று கேட்டான்.

அப்போது, கமலபதி, ''கடவுள் சாட்சியாய் அபிராமியை நான் காப்பாற்றுகிறேன், பலராம்! பாதிக் கல்யாணம் ஆகிவிட்டது. அவளைக்காப்பாற்ற எனக்குப் பூர்ண சம்மதம். என்னைக் காப்பாற்ற அவள் சம்மதிக்க வேண்டியதுதான் பாக்கி!'' என்றான்.

விசித்திர உயில்!

மதுரை மேல ஆவணி மூல வீதியில் உள்ள ''சுகாலயா'' மருத்துவ மனை டாக்டர் எம். ஆர். ரத்தினவேலு ஒரு விசித்திரமான உயில் சாசனம் எழுதியிருக்கிறார்.

தமது இறப்புக்குப் பின்னர் உடலை எரிக்கவோ, புதைக்கவோ கூடாது; தாம் இறந்த பின்னரும் தமது உடல் மனிதகுலத்துக்குப் பயன்படவேண்டும். இறந்த இரண்டு மணி நேரத்தில் கண்களை நீக்கி மதுரை ராஜாஜி மருத்துவ மனைக்குத் தரவேண்டும்; உடலை ஏதாவது ஒரு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிக்கு 'டிஸெக்ஷன்' (அறுத்து ஆராய்ச்சி செய்வது) செய்யக் கொடுக்க வேண்டும் என்று உயில் எழுதியுள்ளார்!

தவிரவும் உடலைப் பதனப்படுத்துவதற்கான செலவையும் தமிழக ஹோமியோபதி கவுன்சிலிடம் ஏற்கனவே கட்டியிருக்கிறார் இவர்!

—ரமேஷ்



அத்தியாயம் 38

''ஐயோ! என் அண்ணன்!''

அன்றிரவு வழக்கம்போல், ''சங்கீத சதாரம்'' நாடகம் நடந்துகொண்டிருந்தது. கமலபதி சதாரம் வேஷத்தில் மேடையில் வந்து நடித்துக்கொண்டிருந்தபோது, தற்செயலாக அவனுடைய பார்வை அபிராமியின் மீது விழுந்தது. ஒரு நிமிஷம் அவன் மெய் மறந்துபோனான். அச்சமயம் மேடையில் சொல்ல வேண்டியதைக் கூட மறந்துபோய் நின்றான். கோமுட்டிச் செட்டியாரின் மகன் வேஷம் போட்டவன் கெட்டிக்காரனாதலால், அவன் கமலபதியின் கால் விரலைத் தன் கால் விரலால் அமுக்கி, ''என்ன நான் கேட்கிறேன். சும்மா இருக்கிறாயே?'' என்று கூறி மறுபடியும் கேள்வியைப் போட்டபோதுதான் கமலபதிக்கு நாடகக் கட்டம் ஞாபகம் வந்தது. அந்தக் காட்சி முடிந்து திரை விட்டதும், கமலபதி முத்தையனிடம் அவசரமாகச் சென்று, ''முத்தையா! ஒரு அதிசயம்!'' என்றான். முத்தையன் என்னவென்று கேட்கவும் அபிராமி நாடகம் பார்க்க வந்திருக்கிறாள் என்பதைத் தெரிவித்து, ''நல்ல வேளை நான் முதலில் அவளைப் பார்த்தேன். எனக்கே ஒரு நிமிஷம் திணறிப் போய் விட்டது. நீ மேடையில் இருக்கும்போது திடீரென்று அவளைப் பார்த்திருந்தால் என்ன செய்திருப்பாயோ என்னமோ?'' என்றான்.

முத்தையன் அளவில்லாத ஆவலுடனும் பரபரப்புடனும் மேடையின் பக்கத் தட்டிக்குச் சமீபம் வந்து இடுக்கு வழியாகக் கமலபதி காட்டிய திக்கை நோக்கினான். அடுத்த நிமிஷம் அவன் கமலபதியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். அவன் உடம்பு நடுங்கிற்று. கமலபதியை அவன் தனி இடத்துக்கு அழைத்துப் போய் ''கமலபதி! நான் சாயங்காலம் சொன்னது நிஜமாய்ப் போய்விடும் போலிருக்கிறது. அபிராமியின் பக்கத்தில் இருப்பது யார் தெரியுமா? திருப்பரங்கோயில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர். ஏதோ சந்தேகம் தோன்றித்தான் அவர் அபிராமியை இந்த நாடகத்துக்கு அழைத்து வந்திருக்க வேண்டும்'' என்றான்.

ஸர்வோத்தம சாஸ்திரி முத்தையனைப் பார்த்ததில்லையே தவிர, முத்தையன் திருப்பரங்கோவிலில் இருந்தபோது பல தடவை சாஸ்திரியைப் பார்த்திருக்கிறான். ஒரு ஊரில் ஸப்

இன்ஸ்பெக்டர் உத்தியோகம் பார்ப்பவரை அந்த ஊரில் உள்ளவர்களுக்குத் தெரியாமல் இருக்க முடியுமா?

நண்பர்கள் இருவரும் கவலையுடனே ஆலோசனை செய்தார்கள். முத்தையன் நாடகம் முழுவதும் நடித்துவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்தார்கள். அவன் அபிராமியின் பக்கம் திரும்பிப் பார்க்கக் கூடாது. பார்த்தாலும் தெரிந்தவனென்பதாகக் காட்டிக்கொள்ளக் கூடாது. வேறு வழி ஒன்றுமில்லை. இப்போது மேடைக்கு வரமாட்டேனென்றால் எல்லாம் ஒரே குழப்பமாக முடிவதோடு சந்தேகமும் ஊர்ஜிதமாகுமல்லவா?

ஏதாவது அபாயத்துக்கு அறிகுறி தென்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவர்கள் யோசித்து முடிவு செய்தார்கள். கமலபதி சென்னைக்கு வந்ததும் ஒரு 'ஸெகண்ட் ஹாண்ட்' மோட்டார் கார் வாங்கியிருந்தான். நடிகர்கள் வருவதற்கென்று கொட்டகைக்குப் பின்னால் ஒரு தனி வழி இருந்தது. அவனுடைய காரை அங்கேதான் நிறுத்தி வைப்பது வழக்கம். அவசியம் ஏற்பட்டால் முத்தையன் அந்தக் காரில் ஏறி ஓட்டிக்கொண்டு போய்விட வேண்டியது. அப்புறம் பகவான் விட்ட வழி விடுகிறார்.


''கமலபதி! உன் வாக்குறுதியை மறந்துவிடாதே!'' என்று கடைசியாகக் கேட்டுக் கொண்டான் முத்தையன்.

* * *

நாடகம் நடந்து கொண்டு வந்தது. சதாரமும் திருடனும் சந்திக்கிறார்கள். திருடன் பாடுகிறான்:

''கண்ணே உனக்குப் பயம் ஏனோ? - நீ
கவலை கொள்ளவும் விடுவேனோ - அடி
பெண்ணே பிரமாதம் பண்ணிடாதே - கள்ளப்
பிறப்பென்று அவமதிக்காதே!
கண்ணன் என்பானொரு கள்ளன் - முன்னம்
கன்னியர் மனங்களைக் கவர்ந்தான்-அவன்
கன்னமிடா இதயமுமில்லை - காதல்
கொள்ளையிடாத உள்ளமில்லை.
வெண்ணெய் திருடி அந்தக் கள்வன் - எங்கள்
வம்சத்துக்கே வழி முதல்வன் - அந்தக்
கண்ணன் குலத்தில் பிறந்தேனே-ஏற்ற
கள்ளப் புருஷனும் வாய்த்தேனே!''

கடைசி அடியைப் பாடும்போது திருடன் தன் மூகமூடியை விலக்குகிறான். சதாரம் மூர்ச்சித்து விழுகிறாள்.



நடிகர் நாகேஷ் வீட்டிலிருந்து படப்பிடிப்பிற்குச் சென்றால் பணம் எதுவும் எடுத்துச்செல்லமாட்டார். அவருடைய உதவியாளர்தான் கொடுத்து உதவுகிறார். 'பணத்தைப் பொறுத்தவரை நான் நாகேஷ் இல்லை. 'நோகேஷ்' என்றார். மதுரையில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்துகொண்டபோது.

\- மீனாட்சி

அதே சமயத்தில் சபையில் குடிகொண்டிருந்த நிசப்தத்தைப் பிளந்துகொண்டு, ''ஐயோ! என் அண்ணன்!'' என்று ஒரு குரல் எழுந்தது. அடுத்த கணத்தில் அபிராமி நிஜமாகவே மூர்ச்சையடைந்து விழுந்தாள். மீனாட்சியம்மாள் அவளைத் தாங்கிக் கொண்டாள்.

ஸப் இன்ஸ்பெக்டர் ஒரு துள்ளுத் துள்ளி எழுந்து பின்புறம் நோக்கிச் சமிக்ஞை செய்தார். உடனே அங்கிருந்த நால்வரும் எழுந்து விரைந்து சென்றார்கள்.


இதற்குள் சபையில் பாதிப் பேருக்கு மேல் எழுந்து நிற்கவும், ''என்ன?என்ன? என்ன?'' என்று ஒருவரை யொருவர் கேட்கவும் காரணம் தெரியாமல் சில பேர் விழுந்தடித்து வெளியே ஓடவும் இம்மாதிரி அல்லோல கல்லோலமாகி விட்டது. மேடையிலும் திரையை விட்டு விட்டார்கள்!

உடுப்பணியாத போலீஸார் நாலு பேரும் வெளியே சென்று அங்கே தயாராயிருந்த உடுப்பணிந்த போலீஸ்காரர்களை அழைத்துக் கொண்டு மேடைக்கு ஓடினார்கள். அங்கே மூலை முடுக்குகளில் எல்லாம் கூடத் தேடியும் திருடன் அகப்படவில்லை!

கமலபதி கவலை தேங்கிய முகத்துடன் அவனுடன் எதையோ எதிர்நோக்குபவன்போல் இருந்தான். சில நிமிஷங்களுக்குப் பிறகு, சுமார் கால் மைல் தூரத்துக்கப்பாலிருந்து அவனுடைய மோட்டார் ஹாரனின் சப்தம் வரவும் அவனுடைய முகம் பிரகாசமடைந்தது! (தொடரும்)

நிஜத்தைத் தொலைத்த நிழல்...

பட்டுக்கோட்டை ராஜா



இன்றோடு இரண்டு மாதங்கள் முடிந்து விட்டன! இரவு, படுக்கையில்ராஜா பழைய நினைவுகளை அசை போட்டான்.


வெற்றுளாய் பி. எஸ்.ஸி. பட்டத்தை வைத்துக் கொண்டு ஓராண்டு தண்டச்சோறு சாப்பிட்டு முடித்தபோதுதான் ராஜாவுக்கு போஸ்டல் டிபார்ட்மெண்டிலிருந்து 'இன்டர்வியூ' வந்தது. மந்திரியிடமிருந்து லெட்டரோ, எம்.எல்.ஏ. ரெக்கமெண்டேஷனோ இல்லாமல் வேலை கொடுத்த போஸ்டல் டிபார்ட்மெண்டை மனதார வாழ்த்தினான்!

எழுபத்தைந்து நாள் மைசூரில் ட்ரெயினிங் முடித்தபோது, இவனைத் 'தஞ்சாவூர் கிழக்கு' சப்-ஆபீஸில் போட்டிருந்தார்கள்.

கிராமத்திலிருந்து அம்மாவிடம் ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு மூட்டை முடிச்சுக்களோடு தஞ்சாவூரில் இந்த லாட்ஜில் குடியேறி ஒரு மத்திய அரசாங்க ஊழியனாக பார்த்து இன்றோடு இரண்டு மாதங்கள் முடிந்துவிட்டன.

வாடகைக்கு எடுக்கப்பட்ட இவன் அலுவலகம் அமைந்திருந்த அந்தச் சின்ன வீட்டுக்கு நேர் எதிரில் கிற்று வேயப்பட்டிருக்கும் குடிசை. வாசலில் மறைப்புக்காகத் தொங்க விடப்பட்டிருக்கும் பழைய சாக்குப் படுதா. அதன் உச்சியில் அழகான ஓட்டை. அந்த ஓட்டை வழியே தெரிந்த முழு நிலவு முகம், முதல் நாளே இவனை வசீகரித்தது!

அவள் பெயர் வசந்தி; அம்மா இல்லை; அப்பா கைவண்டி இழுத்துப் பிழைக்கும் ஒரு குடிகாரன். அண்ணன் சுந்தரம் எட்டாம் வகுப்பையே பட்டப் படிப்பாக நினைத்து, மூன்று வருடங்கள் படித்து படிப்பை அதோடு முடித்துக் கொண்ட அதி புத்தி



சாவி; சீட்டாடுவதும், நியூஸ் பேப்பர் போடுவதும், வீட்டுச் சாமானைத் திருடி விற்பதும், அவன் கைவசமுள்ள தொழில்கள்! இவையனைத்தும் அந்தத் தெருச் சிறுவர்களுக்குச் சாக்லேட் உபயம் செய்து ராஜா சேகரித்த செய்திகள்.

காதல் தோல்வியைத் தாங்கும் அளவுக்குத் தெம்பில்லாத கோழை மனம் படைத்த இவன், காதலை அஞ்சல் மூலம் தெரிவித்த போது, அவளின் அங்கீகரிப்புக் கடிதம் அடுத்த நாளே வந்து இவனை ஏகமாய் மகிழ்வித்தது.

இவனது இதயம் முழுக்க ஆக்கிரமித்துக் கொண்டிருந்த அம்மா கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து, வசந்தியே முழு இடத்தையும் பிடித்துக் கொண்டாள்.

வாய் வார்த்தை எதுவும் இன்றிப் பார்வையாலும் எழுத்துக்களாலுமே அந்தக் காதல் ஒரு காவியமாய் வளர்ந்தது. வசந்தியின் ஒவ்வொரு கடிதத்தையும் ராஜா 'பத்திரமாய்' பாதுகாக்க ஆரம்பித்தான்.

இன்று வசந்தியின் கடிதம் ஒரு நல்ல செய்தி சொன்னது. அண்ணன் சுந்தரத்திடம் அவள் காதல் விஷயத்தைச் சொல்லி விட்டதாகவும், நாளை அவன் இவனைப் பார்க்க வரப் போவதாகவும் எழுதியிருந்தாள். சுந்தரத்தின் முகம் ஒரு கணம் இவன் மனத்தில் தோன்றி அச்சுறுத்தியது!

• • •

மறுநாள் பத்தியானம் ராஜா 'டெய்லி அக்கவுண்டை' முடித்துக் கொண்டிருந்த

போது கசங்கிய கைலியுடன் சுந்தரம் வந்து நின்று, ''ராஜா, உங்கிட்ட நான் கொஞ்சம் தனியாப் பேசணும்!'' என்றான்.

அவனையும் தன்னையும் மாறி மாறி ஒரு மாதிரியாகப் பார்த்த சார் போஸ்ட் மாஸ்டரிடம் பர்மிஷன் வாங்கிக் கொண்டு ராஜா அவனோடு நடந்தான். இருவரும் நடந்து தெரு முனையிலிருந்த அம்மன் கோவில் முகப்பில் அமர்ந்தனர். ''ராஜா, நீ என் தங்கச்சியைக் காதலிக்கிறயாமே?''

''இல்லீங்க... ஆமாங்க... அவளும் என்னைக் காதலிக்கிறு!'' என்ற ராஜா மீண்டு விழித்தான்.

''ஆமா, தங்கச்சி சொல்லிச்சு... நீங்க காதலிக்கிறதை நா தப்புன்னு சொல்ல மாட்டேன்... எங்க அப்பா கிட்டேயும் நானே எடுத்துச் சொல்லிச் சம்மதம் வாங்கிப்புடறேன்... இப்ப எனக்கு அர்ஜண்டா பத்து ரூபா பணம் வேணும்... கடனுத்தான்... இருக்குமா?''

அதுவரை பயந்து கொண்டிருந்த ராஜாவுக்குத் துணிச்சல் கொஞ்சம் வந்தது. தான் செலவுக்கென்று வைத்திருந்த பணத்தில் பத்து ரூபாய் எடுத்துக் கொடுத்தான்.

அதை வாங்கிக் கொண்ட சுந்தரம் வேறு எதுவும் சொல்லாமல் ''நா வரேன்'' என்று அடுத்த புகைவண்டியைப் பிடிப்பவனைப் போல் வேகமாக நடந்து மறைந்தான்.

● ● ●

தொடர்ந்த நாட்களில் சுந்தரத்தின் தொல்லை அதிகமாகிப் போனது — 'வசந்திக்கு ஜாக்கெட் தைக்கணும்... வசந்திக்கு வளையல் வாங்கணும்' என்று ஏதேதோ சொல்லி அவன் ராஜாவிடம் பணம் கேட்க ஆரம்பித்தான். அவனது வார்த்தைகளை ராஜா நம்பாவிட்டாலும், 'வசந்திக்காக' என்ற தால் உதவிகளை மறுக்காமல் செய்தான்.

வசந்தியின் பிறந்த நாளுக்குப் போட வேண்டும் என்று சுந்தரம் கேட்டபோது தன் கையில் கிடந்த கால் பவுன் மோதிரத்தைக் கழற்றித் தரக் கூட ராஜா தயங்கவில்லை!

வசந்தியைச் சந்தித்துப் பேசத் துடித்த ராஜா, ''சுந்தரம், நான் வசந்தியைப் பார்த்துப் பேசணுமே... உங்க வீட்டுக்கு வரட்டுமா?'' என்றான்.

''ஓ... நா உங்கிட்டச் சொல்ல மறந்துட்டேனே... அப்பா கிட்டேயும் உங்க காதலைப் பத்திச் சொல்லிட்டேன்... நீ சாயந்திரம் ஏழு மணி போல வீட்டுக்கு வா... எல்லாத்தையும் பேசி முடிச்சிக்கலாம்!''

இன்று வசந்தியின் தந்தையாரிடம் பேசி முடித்துவிட்டு அம்மாவுக்குக் கடிதம் எழுதலாம் என்று ராஜா நினைத்தான். இவன் முடிவுக்கு அவள் மறுக்க மாட்டாள் என்றும் நினைத்தான். ஒரே பிள்ளை அல்லவா?

● ● ●

மாலை ஏழு மணியாகும்போது ராஜா அந்தக் குடிசைக்குள் நுழைவதைக் குழாயடியிலிருந்த பெண்கள் விநோதமாகப் பார்த்துக் கிசுகிசுத்தனர்.

மனம் முழுக்கப் பீதியோடு நுழைந்த ராஜா, சாணம் மெழுகப்பட்டிருந்ததின்ணையின் விளிம்பில் அமர்ந்து உள்ளே நோக்கினான்.

ஆரவம் கேட்டு எட்டிப் பார்த்த வசந்தி, ராஜாவைக் கண்டதும் சிலிர்த்து உள்ளே ஓடினாள்.

கொஞ்ச நேரத்தில் ''யாருடா அது'' என்றபடியே வசந்தியின் தந்தை வெளிப்பட்டுத் தள்ளாடினார். இடுப்பில் அழுக்கேறிய துண்டு மட்டும் ஒட்டிக் கொண்டிருந்தது. வார்த்தைகளில் சாராய நெடி!

அவரின் தோற்றத்தைக் கண்டதுமே ராஜாவுக்குக் குலை நடுங்கியது. ''ஐயா, என் பேரு ராஜா... எதிர்த்தாப்ல இருக்கிற போஸ்டாபீஸிலே வேலை செய்யறேன்!''

''அப்படியா... இங்க எதுக்கு வந்தே... உனக்கு என்ன வேணும்?''

''என்னங்கய்யா... சுந்தரம் உங்க கிட்ட சொன்னுராம்லலே... நான்... நா உங்க பொண்ணு வசந்தியைக் கா...த...லி...க்கி...றே...ன்!''


''என்னடா சொன்னே?'' — அதுவரை சாவகாசமாகப் போதையில் பேசிக்கொண்டிருந்தவர் நெருப்பை மிதித்ததைப் போல துள்ளி எழுந்து ராஜாவின் சட்டைக் காலரை பிடித்துத் தூக்கி நிறுத்தினார்.

அதுவரை நடந்த சம்பாஷணைகளை உள்ளிருந்தபடியே கேட்டுக் கொண்டிருந்த வசந்தி, பதறிப்போய் வெளியே வந்தாள். அவள் தந்தையின் பிடியில் சிக்கியிருந்த ராஜா கெஞ்சும் பாவனையில் அவளைப் பார்த்தான்.

''ஏய், என்னடா சொன்னே... நீ வசந்தியைக் காதலிக்கிறியா?'' — அவருக்குப் போதையோடு கோபமும் உச்சந் தலைக்கேற ராஜாவைக் கண்மண் தெரியாமல் அடித்து நொறுக்கினார்.

மின்சாரம் அடிக்கடி நின்றுபோவதால் அமைச்சர் காளிமுத்து இப்பொழுது எந்தப் பொதுக்கூட்டத்திற்குப் போனாலும் கூடவே ஒரு பெட்ரோமாக்ஸ் விளக்கையும் எடுத்துச் செல்கிறார்!

—மீனாட்சி



டூ-இன்-ஒன்



போர்ஹென்ஸ்
டபிள்–ஆக்ஷன்
டூத்ப்ரஷ் உங்கள்
பற்களை சுத்தம்
செய்யும்போதே
ஈறுகளையும்
தேய்த்துக்
கொடுக்கிறது.



போர்ஹென்ஸ்

டூ-இன்-ஒன்
டூத்ப்ரஷ்

அடல்ட்
மற்றும் ஜூனியர்

இதோ! ஒரு புதிய இருமல் நிவாரணி
ஒரு பெரிய வித்தியாசத்துடன்...


காஃப்ரெம்-5

மூலிகைகளாலான இருமல் நிவாரணி

சக்தி வாய்ந்தது மட்டுமல்ல
தீய பின் விளைவுகள் இல்லாததும் கூட.


இருமல் ஏற்படுவது இயற்கையே. ஆனால் அளவுக்கு அதிகமாக இருமுவது நல்லதல்ல. இருமலைக் கட்டுப்படுத்த, நிச்சயமாக நிவாரணம் அளிக்கும் ஓர் இருமல் மருந்து தேவை. ஆனால் அதே சமயம் அதனால் தூக்கம், வாய்-தொண்டை உலர்வது, வாந்தி முதலிய தீய பின் விளைவுகள் எதுவும் ஏற்படவும் கூடாது.

காஃப்ரெம்-5 மூலிகைகளாலான இருமல் நிவாரணி.



காஃப்ரெம்-5 இயற்கை தரும் மூலிகைகள் அடங்கியது. எனவே தூய்மையானது; மென்மையானது. தீய பின் விளைவுகள் எதும் இல்லாதது. அதே சமயம் அதிக சக்தி வாய்ந்தது. நிச்சய நிவாரணம் அளிப்பது. ஐந்து மூலிகைகள் இதில் உள்ளன: ஆடாதோடை, கிருஷ்ண துளசி, மர மஞ்சள், மஞ்சள் மற்றும் அதிமதுரம். இருமலைக் கட்டுப்படுத்தி நிவாரணம் அளிப்பதில் இவற்றின் திறன் நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

காஃப்ரெம்-5 செயல்திறன்— இருமலை நன்கு கட்டுப் படுத்துகிறது.



காஃப்ரெம்-5 விரைவாகவும் இதமாகவும் செயல்பட்டு, தொண்டையில் புண்ணையும் எரிச்சலையும் தணிக்கிறது; சுவாசப் பாதையை விரிவாக்கி, அடைப்புகளை நீக்கி எளிதாக சுவாசிக்க உதவுகிறது.

காஃப்ரெம்-5 வித்தியாசமானது.

காஃப்ரெம்-5 மற்றதிலும் வேறுபட்டது ஏனென்றால் இது முழுமையாக மூலிகைகளாலேயே ஆனது. இதில் ஆல்கஹாலோ, தூக்கம்-மயக்கம் உண்டாக்கும் பொருள்களோ இல்லை. எனவே இது மிகவும் பாதுகாப்பானது. தீய பின் விளைவுகள் எதுவும் இதனால் ஏற்படாது.

காஃப்ரெம்-5 அனைவருக்கும் ஏற்றது.

காஃப்ரெம்-5 முழுமையாக மூலிகைகளால் தயாரிக்கப் பட்டிருப்பதால் இது குடும்பத்தில் அனைவருக்கும் ஏற்றது. மிகவும் பாதுகாப்பானது. சிறு குழந்தைகளுக்கும் கூடக் கொடுக்கலாம். இதன் இனிமையான சுவையை அவர்கள் மிகவும் விரும்புவார்கள்.



காஃப்ரெம்-5 சிறந்த பொருள்களுக்குப் பெயர் பெற்ற டிடிகே குரூப் வழங்குவது.

தேர்ந்தெடுத்த மூலிகைகளாலான இணையற்ற தயாரிப்பு.



காஃப்ரெம்-5

சக்தி வாய்ந்தது. பாதுகாப்பானது. இயற்கையானது.

தற்போது தமிழ்நாட்டில் மட்டுமே கிடைக்கும்

ஒரு TTK தயாரிப்பு

HTM-TTK-1060

''அப்பா, அவரை அடிக்காதிங்கப்பா.... அப்பா!'' என்று வசந்தி தடுத்துத்தான் அடிப்பதை நிறுத்தினார்.

மனத்தில் கட்டி வைத்திருந்த 'காதல்' என்னும் கற்பனைக் கோட்டை சின்னாபின்னமாய்ச் சிதைந்துபோக, கலைந்த தலையுடனும், கிழிந்த சட்டையுடனும் மூக்கிலும் முனகி ராஜா எழுந்து நின்றான். ரத்தம் மூக்குத் துளைகளிலும், உதட்டு முடிவிலும் கோடு கிழித்துப் பிசுபிசுத்தது. நெருப்புக் கோழியாய் மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கியபடி நின்றிருந்த வசந்தியின் தந்தையிடம் நெருங்கி வந்தான். ''ஐயா, நான் மட்டும் உங்க மகளைக் காதலிக்கலே....: அவளும் என்னைக் காதலிச்சா.. இதோ அதற்கு அத்தாட்சி!'' என்று வசந்தி எழுதிய கடிதங்களை ஜோல்னாப் பையிலிருந்து எடுத்து விசிறிவிட்டு வெளியேறினான். தெருவில் தெரிந்த முகங்கள் இவனை அனுதாபப் பழுவாய்ப் பார்த்தன. அந்த முகங்களில் தெரிந்த கேலியும் கிண்டலும் ராஜாவை அதிகமாய் வதைத்தன!

ராஜா விட்டெறிந்த கடிதங்களில் ஒன்றைப் படித்த பெரியவர், ''ஏண்டி, நீயுமா அவனைக் காதலிச்சே?'' என்று கையிலகப்பட்ட பிரம்பை எடுத்து வசந்தியை நையப் புடைத்தார்.

''அப்பா, நான் அவருக்குக் கடுதாசியே எழுதலப்பா...அப்பா என்னை நம்புங்கப்பா!'' என்ற வசந்தியின் குரல் அவர் காதில் விழவில்லை. அவளை ஆசை தீர அடித்துவிட்டு இவர் மயக்கமானார்.

சிதைந்த மலராய் எழுந்திருந்த வசந்தி கீழே கிடந்த கடிதங்களை எடுத்து அடுக்கித் தேம்பியபடியே படிக்க ஆரம்பித்தாள். அதுவரை எல்லோரையும் குழப்பிக் கொண்டிருந்த ஒன்று அவளுக்குப் புரிய ஆரம்பித்தது....

அவசரமாய் எழுந்து சென்று சுந்தரத்தின் டிரங்க் பெட்டியைப் பூட்டை உடைத்துத் திறந்தாள். அங்கு அவள் எதிர்பார்த்தபடியே சேகரட்ட கடிதங்கள். எல்லாம் 'வசந்தி' என்ற முகவரியிட்டு ராஜா எழுதியவை!

● ● ●

பொழுது விடிந்தவும் விடியாததுமாய், ''அப்பா, சீக்கிரம் எழுந்திருங்கப்பா.... அப்பா!'' என்று வசந்தி தன் தந்தையை உசுப்பினாள். போதை தெளிந்தால் அவர் ஒரு பெட்டிப் பாம்பு என்பது வசந்திக்குத் தெரியும்.

''என்னம்மா... ஏன் இப்படி அவசர அவசரமா எழுப்பறே?''

''நா எல்லாத்தையும் கண்டு பிடிச்சிட்டேம்ப்பா... அவருக்கு நான் லெட்டர் எழுதினதா நீங்களும் என்னைப்போட்டு அடிச்சீங்கள்ள... எல்லாம் அண்ணனோட வேலைதான். நா எழுதின மாதிரியே லெட்டர் எழுதி அண்ணன்தான் அவரை ஏமாத்தியிருக்கு... இங்க பாருங்களேன்!'' என்று ஒவ்வொரு கடிதமாய் எடுத்துப் பிரித்துக் காட்டினாள்.

''ஆமாம்மா... சுந்தரம் பய இருக்கானா?''

''இல்லேப்பா... நேத்திலேர்ந்து வீட்டுக்கு வரலே.... எங்கேயாவது சீட்டாடப் போயிருக்கும்!''

பெரியவருக்கு எல்லாம் புரிந்தது. சுருங்கிக் கிடந்த தாடையைச் சொரிந்து விட்டுக்கொண்டார். நேற்றிரவு ராஜாவிடம் நடந்து கொண்ட விதத்திற்காக வருந்தினார். அப்போதுதான் அந்த எண்ணம்கூடப் பளிச்சிட்டது — 'அந்தப் பையனுக்கே வசந்தியைக் கட்டிக் கொடுத்து விட்டாலென்ன... என் சம்பாத்தியத்துக்கு அந்த மாதிரி மாப்பிள்ளை கிடைப்பானா?' என்று நினைத்தவர்...

''எம்மா வசந்தி, நீ அந்தப் பையனைக் கல்யாணம் கட்டிக்கிறியா?'' என்று நேரிடையாகக் கேட்டு விடவும் வசந்தி வெட்கத்தில் சிவந்து போனாள்.

காலைக் கடன்களை முடித்துப் புது மனிதராய் ராஜாவின் வரவை எதிர்நோக்கிப் பெரியவர் காத்திருக்க ஆரம்பித்தார். பத்து மணியாகியும் ராஜா வரவில்லை. நேரே போஸ்ட் ஆபீஸ் சென்றார்.

''சார், ராஜா தம்பி வரலேங்களா?''

''இல்லையே... திடீர்னு ஒரு வாரம் லீவு போட்டிருக்கான்!''

''அப்படியா?.... அவரு வீடு எங்க சார் இருக்கும்?''

''அவன் இங்க லாட்ஜுலதான் தங்கியிருக்கான். ஆனா இப்பச் சொந்த ஊருக்குப் போயிருப்பான்!''

''அவரு ஊரு எதுன்னு தெரியுங்களா?''

''அட என்னய்யா இது... காலங்கார்த்தால பெரிய எழவாப் போச்சு... அவன் ஊரு பஞ்சநதிக்கோட்டை... இங்கேர்ந்து நாப்பதாம் நம்பர் டவுன் பஸ்.... போதுமா?'' என்று போஸ்ட் மாஸ்டர் எரிந்து விழுந்தார்.


பெரியவர் வீடு திரும்பி வசந்தியிடம் விஷயங்களைச் சொல்லிவிட்டு, நேரே விஷயத்தைப் பேசி முடித்துவிட பஞ்சநதிக்கோட்டைக்கு பஸ் ஏறினார்.

ஒரு நிருபர் முன்னாள் ஜனாதிபதி நீலம் சஞ்சீவரெட்டியிடம் ''நீங்கள் ஏன் மீண்டும் ஜனாதிபதியாக விரும்பவில்லை?'' என்று கேட்டதற்கு சஞ்சீவரெட்டி சொன்னாராம்:

''அந்தப் பதவியில்தான் பிரமோஷன் பெற சான்ஸே இல்லையே. அதனால்தான்!''

—எஸ்.ஏ. அதிரை யூசுப்




என்னப்பா உன் சம்சாரம் சீட்டுக்குவரிதை வச்சு அனுப்பியிருக் காங்களா?
அது ... குறிப்புச் சீட்டு... வீட்டுக்குத் திரும்பறப்போது கொசுவர்த்திச் சுருள் வாங்கிட்டுப் போகணுமாம்.
அந்தச் சின்ன பெட்டியிலிருந்து என்ன எடுக்கிறாய்?
அது டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள். கொசுத் தொல் லையிலிருந்து என் விடுமுறையை கெடுத்துக்க மாட்டேன்.
ஆமா எங்க வீட்டுலே கொசுக்களை விரட்டியடிக்கிறதுக்கு உங்க மனைவியோட சேவை கொஞ்சம் தேவை.
என் மாமியார் என் வீட்டுலே- யிருந்து கிளம்பி போகவே மாட்டேங்கிறாங்க. அவுங்க வீட்டுல ஒரே கொசுத் தொல்லையாம்.
ஒரு பேக் டார்டாய்ஸை வாங்கிக் கொடுத்து மாமியாரை பேக் பண்ணி அனுப்பு.
டார்டாய்ஸ் கொசு
வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
..போர்ட், பம்பாய்-400 023. ..போன்: 273831
everest/83/BCL/65-tm



கல்கி - பாரதி நூற்றாண்டுப் போட்டி -8

சரியான விடை எழுதியவர் வரிசை தொடர்ச்சி:


301. அ. சித்ராயினி, பழைய சூரமங்கலம், சேலம்-5; 302. பூ. மு. இலவகுமார், சென்னை-11; 303. எஸ். தெய்வலக்ஷ்மண், வடிவீஸ்வரம்; 304. எஸ். அனுராதா, மயிலாடுதுறை; 305. எஸ். ஆண்டாள், தென்பாதி, சீர்காழி; 306. கே. ஜெயம்மாள், ஸ்ரீரங்கம்; 307. பி. பிரம்மானந்தம், செய்யாறு; 308. கே. சந்திரராணி, திருப்பூர்-3; 309 க. சிவகாமிநாதன், சென்னை-10 310. எஸ். எஸ். நாகராஜன், சென்னை-88; 311. சி. சித்ரா, சென்னை-14; 312. க. நடராசன், மன்னார்குடி; 313. எஸ். வேதநாயகி, திருவொற்றியூர்; 314. திருமதி ராஜி, ஆவடி, சென்னை-71; 315. ஜே. காந்திமதி, மதுரை-6; 316. எஸ். விஜயகுமார், திண்டிவனம்; 317. ஆரணி சுரேஷ், ஆரணி; 318. எல். புஷ்பம், அக்கரை கொடிவேரி; 319. திருமதி ராணி டிசன், சென்னை-2; 320. கே. மாலதி, ஈரோடு; 321. க. மீனாட்சி, தூத்துக்குடி; 322. வி.ஏ. பாலமுருகன், ஆரணி; 323. ஆ. குந்தவை, செட்டிக்காளிபாளையம்; 324. ஆர். வாசுதேவன், உடுமலை; 325. எஸ். கோமதி, சென்னை-24; 326. கு. நிர்மலா தேவி, நெகமம்; 327. மகாலட்சுமி, செட்டிக்காளி பாளையம்; 328. க. மகாலட்சுமி, காமராசர் பல்கலைக் கழகம், மதுரை; 329. என். பாக்யலட்சுமி, இடைப்பாடி; 330. புலவர் ந. இராசையா, இராசபாளையம்; 331. ஆர். விஜயலட்சுமி, சேலம்-1; 332. திருமதி மாலா கந்தசாமி, விருதுநகர்; 333. கே. பாபு, சென்னை-33; 334. மு. மதனகோபாலன், சென்னை-27; 335. எஸ். பத்மினி, சென்னை-19; 336. வாசுகி; மதுரை-9; 337. க. முருகன், செங்கம்; 338. மு. அய்யனார், ஆத்துவாய்க்கால்பேட்; 339. ஆர். சுந்தரம் மதுரை; 340. ஸ்ரீமதி சரோஜா கிருஷ்ண மாச்சாரியார், ராமநாதபுரம்; 341. இரா. பாண்டிமாதேவி, அண்ணாமலைநகர்; 342. கே. உஷா, (முழு விலாசம் தேவை); 343. ஆர். சாந்தி, திருவான்மியூர்; 344. கே. சொர்ணகிரி, திருச்சி-8; 345. ஆர். வடிவாம்பாள், ஈரோடு; 346. ஜி. சுந்தரராமன், சென்னை-28; 347. கே. சிங்காரம், சென்னை 24; 348. கே. கோமதி, மதுரை-1; 349. எஸ். ஜவஹர், தஞ்சை; 350. எச். பிரேமாவதி, பொள்ளாச்சி; 351. சசிபாலா, பெங்களூர்; 352. பி. பாலசுப்பிரமணியம், வீராச்சிமங்கலம்; 353. அருட்கண், காரைக்குடி-1; 354. தீ. முத்தம்மாள், கல்லிடைக் குறிச்சி; 355. எஸ். ரமணி, சென்னை-44; 356. உஷா முத்துகிருஷ்ணன், திருச்சி; 357. சி. பிச்சம்மாள், ஸ்ரீவைகுண்டம்; 358. கே. சேகர், பகாம்பூர், திண்டுக்கல்; 359. வார்னர் பிரைட்சன், திருச்சி-2; 360. கே. வெங்கடேச பாபு, சென்னை-81; 361. ஆயிஷா பாரூக், சென்னை-24; 362. எஸ். பாலசுந்தர், காஞ்சிபுரம்; 363. எஸ். செல்வராஜ், பரமசிவபுரம், லால்குடி; 364. பி. எஸ். சுப்பிரமணியன், மதுரை; 365. என். உமாதேவி, திருப்பூர்-2; 366. ஆர். வாசுதேவன், சென்னை-33; 367. டி. முருகேசன், மதுரை; 368. வி. சிவசுப்பிரமணியம், தஞ்சாவூர்; 369. ருக்மிணி கேசவன், ஜம்ஷெட்பூர்; 370. பாலாஜி சுந்தரராஜன், திருப்பூர்; 371. சத்யவதி, சங்கர்லால், மதுரை-16; 372. கனகா ஜகந்நாதன், சென்னை-2; 373. என். லட்சுமி நடராஜன், செங்கோட்டை; 374. கே. திருமலை, மதுரை; 375. ராயலு, ஸ்ரீவில்லிபுத்தூர்; 376. பி. சிவாஜி, வடசேரி; 377. நி. தத்வமசி, காட்டுக்காஜூர்; 378. பி. சுப்பிரமணியம், பூண்டி; 379. ஜி. ராதா, சென்னை-4; 380. ஆர். தங்கம்மாள், ஈரோடு; 381. ஜி. டி. நிர்மலா, மதுரை; 382. நா. காசிநாதன், ஆரணி; 383. வி. சேகர், ஆரணி; 384. மீனாட்சி, கல்பாத்தி, பாலக்காடு; 385. எஸ். ஜெயலட்சுமி, கோவில்பட்டி; 386. பா. இளங்கோ, நாமக்கல்; 387. இரா. நரசம்மாள், சென்னை-4; 388. கே. எஸ். அம்மையப்பன், திருநெல்வேலி; 389. தமிழரசி ராமசுப்பிரமணியம், அம்பாளி ரயில்வே ஸ்டேஷன், ராஜீவாடி; 390. ஆர். சீதா, பெங்களூர்; 391. சங்கரநாராயணன், சித்தாபுதூர்; 392. பி. ஆர். மயிலப்பன், ஈரோடு-2 393. பா. கணேஷ், திருவாரூர்; 394. ராஜம் கிருஷ்ணமூர்த்தி, ஆம்பூர்; 395. ஆர். விஜயன், பவானி; 396. பொன்ராமநாதன், பாளையங்கோட்டை; 397. ஆ. கவிதா, திருநெல்வேலி; 398. எஸ். ரவிச்சந்திரன், பொள்ளாச்சி; 399. கே. சண்முக சுந்தரம், கோவை; 400. அருச்சாமி, பாப்பாம்பட்டி.

(இன்னும் வரும்)

'வீடியோ'வரை காத்திரு! 7

கதை: ஜே.எஸ்.ராகவன் சித்திரம்: செல்லம்





டேய், சிமைக்கொரங்கு! இன்னு வேலேடா இது? இவனை ஏதாவது செஞ்சியா? சொல்லுடா கழுதை....
இன்னும் இல்லேப்பா... ஹி...ஹி.... இனிமேல்தான்...
அப்பன் கிட்டே பேசற பேச்சா இது?
அங்கிள்! அங்கிள்! என்னைக் கடத்திண்டு வந்துட்டான் அங்கிள்! பிரெண்ட்ஸ் எல்லாம் தேடுவாங்க... கொண்டு விட்டுடுங்க ப்ளீஸ் அங்கிள்....
டில்லிபாபுவின் கிரிமினல் மூளை சர்க்யூட்டில் பளிச்சென்று ஒரு குட்டி பல்பு எரிகிறது.
ம்?... இதோ பாரு ஜூலி. உன்னை யாரும் தொடாம நான் பாத்துக்கிறேன். ஆனா கொஞ்ச நாளைக்கு நீ இங்கேயே இருக்கணும்.
ஏன்... எதுக்கு அங்கிள்?
அப்புறம் சொல்றேன். உங்கப்பாவுக்கு 'சாட்டிலைட்' கால் போட்டுப் பேசப் போறேன்.... உன்னை விட்டுடறது அவர் சொல்ற பதில்லே இருக்கு.
டில்லிபாபுவையும், தள்ளிக்கொண்டு தொப்பி, மீசை கறுப்புக் கண்ணாடி அணிந்த ஆள் நுழைகிறான்.
டேய்! டேய்! யார்ரா நீ? எப்படி இங்கே வந்தே?
நானா? நான்தான் ஜேம்ஸ்பாண்டோட மச்சி! டேம்ஸ் பாண்ட்! பெண்களைக் கடத்துபவர்களைப் பிடித்துக் கொள்ளும் 007½ நாட்டுச் சனி!
இந்தத் தொப்பியை எங்கேயோ பாத்த மாதிரி இருக்கே எங்கே?.. ஹும்?... பேசிண்டு வந்ததே அந்த செம் இல்லே இது?
தொடரும்

இங்கே என்ன வேடிக்கை?

- சூபா

படித் துறையைத் தொட்டுக் கொண்டு நீர் சலனமில்லாமல் ஓடிக் கொண்டிருந்தது. கரையோர அரச மரத்தின் சின்னக் கிளையொன்று ஓடம்போல் மிதந்துவந்தது. மாட்டைத் தேய்த்து விட்டு நீரின் போக்கோடு மிதக்க விட்ட வைக்கோல் பந்து முங்கி முங்கி மிதந்து வந்தது.

திரிவேணி மேல் படியில் நின்று கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். எல்லாம் வித்தியாசமாய் இருந்தது. இரண்டு நாளுக்கு முன்பிருந்த சென்னையில், காலையில் எழுந்தவுடன் இந்த மாதிரி அக்காக் குருவி சத்தம் கிடையாது. செக்கு 'ரொய்ங்' என்று சுற்றுகிற சத்தம் இருக்காது. மேய்ச்சல் மாடுகள் ஒன்றை யொன்று இடித்துக் கொண்டு கழுத்து மணிகள் ஜலதரங்கமாய் இசைத்துக் கொண்டு போகிற காட்சி கிடையாது. மனசில் சின்னப் பயம் இருந்தது. மெல்லத் தண்ணீரில் கால் நுழைத்தாள். சிலீரென்ற சில்லிப்பு உடல் முழுமைக்கும் ஊடுருவி விட்டது.

''பாங்குக்கார சம்சாரமில்ல... வா..வா''

குரல் கேட்டு அக்கம் பக்கத்தில் பேசிக் கொண்டிருந்த இரண்டு மூன்று தலைகள் நிமிர்ந்தன.

''திரிவேணியா... வா... இன்னிக்குத்தான் ஆத்துக்கு வந்திருக்காப்ல...''

திரிவேணி கொஞ்சம் வெட்கம் பூசின சிரிப்பை உதிர்த்தாள். எதிர்க் கரையிலிருந்து இக்கரை வரை கை சளைக்காமல் நீந்தி வந்த சில பையன்கள் கோவணத் துணியோடு நின்று அவளை வெறித்து விட்டு மறுபடியும் விலாங்கு மாதிரி மல்லாக்கச் சரிந்து புரண்டனர்.

''சேலை எல்லாம் கழட்டிரு... அதை எப்படித் தோய்க்கப் போறியாம்?''

மறுபடியும் குரல் வந்தது. யார் என்றே சரியாய்ப் புரியவில்லை. எல்லாரையும் பார்த்த மாதிரியும் இருந்தது. யாரையும் பார்க்காத மாதிரியும் இருந்தது.

''வேண்டாங்க... இப்படியே முங்கிக்கறேன்....''

''வெக்கம் என்ன, பெரிய வெக்கம்... நாங்கள்லாம் குளிக்கலே...?''



உடம்பில் ஈரச் சேலை ஏற்ற இறக்கத்தோடு படிந்திருக்கிற அந்தப் பெண் இவள் விகளைப் பிடித்து இருந்தாள்.

ஒரு வழியாய்க் குளித்து விட்டுப் புறப்பட்டாள். உடல் முழுக்கப் பாரமாய் ஈரச்

சேலை ஒவ்வொரு தப்படிக்கும் தடுக்கி விட்டது. சின்னச் சின்ன அடிகளாய் எடுத்து வைத்தாள். எடுத்துப் போயிருந்த உலர்ந்த புடவையும் கைதவறித் தண்ணீரில் விழுந்திருந்ததில் தோளில் பிழிந்து போட்ட கனம் வேறு. ஆடு சதையிலிருந்து தண்ணீர் நேர் கோடாய்க் கீழே இறங்கிக் காலில் குறுகுறுப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.



உடல் முழுக்கக் கூசியது. போகிற வருகிற அத்தனை பேரும் நின்று பார்த்துவிட்டுப் போனார்கள். இன்றைக்கு மட்டுமென்றில்லை. நேற்று சிவராமனோடு வந்து இறங்கியபோது கூட இந்த மாதிரிதான் ஆளுக்கு ஆள் வெறித்து வெறித்துப் பார்த்தார்கள். முன் பின் கல்யாணமான ஜோடியைப் பார்த்திராதவர்கள் போலக் கண்ணை அகட்டிக் கொண்டார்கள்.

வீட்டில் நுழைந்தவுடன் முதல் வேலையாகக் கதவைச் சாத்தினாள். அதுகூட 'ரொய்ங்' என்று சத்தம் போட்டுத் தெரு முழுமைக்கும் அறிவித்தது.

முகம் நிறையச் சோப்பு நுரையுடன் கண்ணாடி மாட்டுவதற்கு வெளிச்சமாய் இடம் தேடிக் கொண்டிருந்த சிவராமன் இவளைப் பார்த்து அசந்து போனான்.

''இப்படியேவா வந்தே?''

''ஆமா...''

''எங்கண்ணே பட்டுடும் போல இருக்கே.''

''ஊர்க் கண்ணு பூரா எம்மேலேதான்.''

''என்ன டார்லிங்... எதுக்குக் கோபம்?''

''முதல்ல இந்தக் கிராமத்தை உதறிட்டுக் கௌம்பிடலாம் சிவா... ஐ டோண்ட் லைக் திஸ் ப்ளேஸ்...''

''ஏய்...'' என்றான் ஒரு சின்ன ஆச்சரியத்துடன்.

''ஆமாம், வெளியே போகவே பயமாயிருக்கு... ஊர்ல அத்தனை பேருக்கும் நம்ம பேர்லதான் கண்ணு... மெட்ராஸிலே எவ்வளவு ஜாலியா இருந்துப்பாங்க... ரெண்டு பேர் சேர்ந்து போனா இந்த மாதிரி கண்கொத்திப் பாம்பு மாதிரியா பாப்பாங்க? கொஞ்சம் கூட ப்ரைவஸியே இல்லே... எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கலே...''

''கிராமத்துக்கு டிரான்ஸ்ஃபர் வருதுன்னவுடனே நீதானே டார்லிங் அப்படிக்குதிச்சே! வில்லேஜ்ல வாழணும்னு சொன்னியே....''

''வில்லேஜ் பிடிச்சிருக்கு... ஆனா மனுஷங்கதான்... எந்நேரமும் காஸிப்பிங்தான். அவளைப் பத்தி இவ, இவளைப் பத்தி அவ; என்னை எவ்வளவு கேள்வி தெரியுமா.. நாக்கைப் பிடுங்கிக்கலாம் போல இருந்தது...''

திரிவேணி இடுப்புக் குடத்தைக் கீழே இறக்கிவிட்டு முற்றத்தில் இறங்கித் துணியை ஒவ்வொன்றாய் எடுத்துப் பிழிந்து உதறி உலர்த்திக் கொண்டே பேசினாள்.

''என்ன டிரான்ஸ்ஃபர் அப்ளிகேஷன் கொடுத்திட்டீங்களா?''

''வந்து மூணு நாள்தான் ஆகுது வேணி!''

''இல்லீங்க... நாம மெட்ராஸ் போய்த்தான் ஆகணும்... அங்கே இருக்கிற வசதியெல்லாம் இங்கே வராது. என்ன போறோமா இல்லையா?''

அவன் மார்பில் சாய்ந்து பனியனை மீறித் தெரிகிற மார்பு ரோமத்தைச் சுட்டு விரலால் சுருட்டிக் கொண்டு கொஞ்சல் சிணுங்கலாய்த் திரிவேணி கேட்டபோது சிவராமனுக்கு இரக்கமாயிருந்தது.

''ஓ.கே. நாளைக்கே குடுத்திடறேன்... கொஞ்சம் ப்ராப்ளம்தான்... இருந்தாலும் யூனியன் ஆளுங்களைப் பிடித்து எப்படியாவது முடிக்கறதுக்கு ட்ரை பண்றேன். ஆனா ஒரு கண்டிஷன்....''

''என்ன?''

அவன் 'கண்டிஷனை'ச் சொன்னபோது ''ச்சீய்'' என்று வெட்கிக் கொண்டே சம்மதித்தாள்.

''டிரான்ஸ்ஃபருக்கு எழுதிக் கொடுத்திட்டேன் வேணி... ட்ரங்கால் போட்டுக் குமார் கிட்டக்கூடப் பேசினேன்... கொஞ்சம் கஷ்டம்தான்... மெடிகல் கிரவுண்ட்ஸ்ல ட்ரை பண்ணலாம்னாரு...''

''அப்பா... இப்பத்தான் என் மனசுக்கு நிம்மதியா இருக்கு...''

''டிஃபன் சாப்பிட்டு ஒரு ரவுண்ட் போய் வரலாமா வேணி?''

''கோயில் வரைக்கும் போயிட்டு வரலாமா?''

''ம்...'' என்றான் சிவராமன் அவள் இடுப்பில் கையை வைத்து வளைத்துக்கொண்டே.

படி இறங்கியபோது சுற்றிவர மெல்ல இருள் முகாம் விரித்துக் கொண்டிருந்தது. மேற்கில் கொஞ்சமாய்ச் சிவப்பு மிச்சம் இருந்தது. அடுத்த வீட்டுத் திண்ணையில் ஆச்சாரி கும்மட்டி அடுப்பை கைதாங்குழலால் உஸ் ஸென்று ஒரே சீராய் ஊதிக்கொண்டிருந்தார். இவர்கள் இறங்குவதைப் பார்த்துவிட்டு ஊதுவதை நிறுத்தினார்.

''வெளியே கிளம்பிட்டாப்ல இருக்கு.''

''ஆமாங்க.''

''கொட்டாய்க்கா.. பட்டணத்துக்காரங்க ...பொழுது போறது சிரமம்தான்.''

''இல்லீங்க... கோயில்வரைக்கும்.''

''போய்ட்டு வாங்க போய்ட்டு வாங்க.''

''முத ஆள் ஆரம்பிச்சாச்சா இனிமே குஞ்சு குளுவான்லேர்ந்து அத்தனையும் கேக்கும் பாருங்க...''

சடுகுடு ஆடிக் கொண்டிருந்த பையன்கள் ஆட்டத்தை நிறுத்திவிட்டுக் கடந்து போகிற வரை இவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

'பாங்குக்காரரும் அவங்க வீட்டுப் பொம்பளையும்டா...' என்று முணு முணுப் பாய்ப் பேசிக் கொண்டார்கள்.

வண்டி ஒன்று சகசகவென்று மண்ணை அரைத்துக் கொண்டே இவர்களைக் கடந்து போயிற்று. வண்டி நிறைய நெல் மூட்டைகள். அந்த மூட்டைகளில் உட்கார்ந்து மூக்கை அப்படியும் இப்படியுமாய்த் தேய்த்துக் குத்திக்கொண்டு சின்னக் குருவிகள்.

திரிவேணி மௌனமாய் ரசித்தாள். வலது பக்கத்து ஏற்றக் கிணறு கண்ணில் பட்டது.

''அது என்னங்க?''

''ஏத்தம் இறைக்கிற கிணறு...''

''பக்கத்தில போய்ப் பாப்போமா?''

''ம்ம்...''

சிவராமன் அழுத்தமாய்ச் சொல்லிவிட்டு வரப்பில் நடந்தான். திரிவேணி வயலில் இறங்கிவிடாமல் வரப்பிலேயே நடக்கச் சற்று சங்கடப்பட்டுப் பின் தொடர்ந்தாள்.

''இதில எப்படி தண்ணி வயலுக்குப் பாயுமாம்?''

''இந்த ஏத்த மரத்தில இந்தக் கோடியேர்ந்து அந்தக் கோடி வரைக்கும் நடந்தா... இரேன்... காட்டறேன்...''

''வேண்டாங்க. சொன்னாப் போதும்...''

''இரு வேணி...'' என்று சொல்லிவிட்டு அவன் ஏற்ற மரத்தில் ஏறினான். நடு காலைப் பிடித்துப் பூமிக் கோடியிலிருந்து கிணற்றுக் கோடிக்கு நடந்து போய் வருகையில் 'சர்ர்ர்க்' கென்று கால் வழுக்கிற்று. பத்தடிக்குக் கீழே இருந்த தண்ணீரில் அவன் விழுந்தது துல்லியமாய்க் கிராமம் முழுக்கக் கேட்டது. திரிவேணி வாய் குழறி அலறினாள்.

அடுத்த விநாடி கிணற்றுக்குப் பக்கம் ஒரு ஆள் முளைத்தது. தொபீலென்று தண்ணீரில் பாய்ந்தது. சடசடவென்று இந்த வரப்பிலும் அந்த வரப்பிலும் ஆணும் பெண்ணும் சிறுவர்களுமாய் ஓடி வந்தார்கள்.

''அடடே. பாங்குக்கார அய்யாவா விழுந்துட்டாரு...''

இரண்டு ஆள் ஏற்ற மரத்தில் ஏறிக் கிணற்று நடுவரை வந்து நிற்க, ஏற்றக் காலில் சிவராமன் உட்கார்ந்து ஏற்ற மரம் தாழ்கையில் மேலே வந்தான். ஒரு ஆள் கைத்தாங்கலாய்ப் பிடித்து வெளியில் இறக்கி விட்டான்.

''எலே நாயர் கடைல போய் ஒரு ப்ரு காப்பி சூடாப் போட்டு எடுத்து வாடா.''

''சொக்கம்மா போய்த் தவுட்டை சூட்டில காட்டி எடுத்து வந்திடு... இங்கயே ஒத்தடம் கொடுத்துடுவோம். எலே நீ அந்தக் கயத்துக் கட்டிலைக் கொண்டாலே... ஐயா... நீங்க மேல்சட்டையைக் கழட்டிக் கொடுங்க... பட்டணத்து உடம்பு பாருங்க நனைஞ்சாத் தாங்காது.''

திரிவேணி பிரமித்திருந்தாள். கயிற்றுக் கட்டில் வந்தது. தவிட்டு ஒத்தடம் வந்தது.

''எனக்கு ஒண்ணுமில்லைங்க....'' என்று சிவராமன் வழிசலுடன் முனகினான்.

''நீங்க சும்மா இருங்க தம்பி... உங்களுக்கு ஒண்ணும் தெரியாது...'' என்று சொல்லிவிட்டுத் திரிவேணியை விலக்கி விட்டு அந்தப் பெண் ஒத்தடம் கொடுக்க ஆரம்பித்தாள்.

''வீட்டுக்குப் போனவுடனே சுத்திப் போடும்மா.. கண்ணு பட்டிருக்கும்...''

சுற்றியிருக்கிற முகங்களைப் பார்த்தாள் திரிவேணி. கொஞ்சம் கூடக் கள்ளமில்லாமல் தெளிவாய், நிஜமான கவலையாய் இருந்தன.

சென்னையிலும் கூட்டம் கூடும். வேடிக்கை பார்க்கும். விலகிச் செல்லும். அவ்வளவுதான். விழுந்தவனைத் தொட்டால் வம்பு ஒட்டிக்கொள்ளும் என்கிற பயம்தான் பிரதானமாய் இருக்கும். உதவி செய்ய என்று இத்தனை பேர் குழும மாட்டார்கள்.

வீட்டுக்குப் போனதும் சிவராமனிடம் என்ன சொல்ல வேண்டும் என்று மனசு நிச்சயித்துக் கொண்டது.

''உங்க டிரான்ஸ்ஃபர் அப்ளிகேஷனை வாங்கிக் கிழிச்சுப் போட்டிருங்க சிவா... வேடிக்கை பார்க்கிற மனுஷங்களைத்தான் எனக்குப் பிடிச்சிருக்கு..!''

குழந்தை பிறந்த 6 மணி நேரத்திற்கு பின்பு அது, முதல் தடுப்பு ஆகாரம் பெறுகிறது. அதை ஊட்டுவது நீங்கள்தான்.

இயற்கையின் ஒரு வரப்பிரசாதம் தாய்ப்பால்.

தாய்ப்பாலில் இயல்பாகவே நோய் எதிர்ப்புப் பொருள் அடங்கியுள்ளது. புதிதாகப் பிறந்த குழந்தைக்கு, வயிற்றில் வாயுக்கோளாறு மற்றும் இதர நோய்களுக்கு எதிரே பாதுகாப்பு அளிப்பதில் முக்கிய பங்காற்றுகிறது தாய்ப்பால்.

இயல்பான ஊட்டச்சத்து

இயற்கையும் அறிந்துள்ளது: குழந்தைக்கான தாய்ப்பாலை உன்னத உணவாக்குபவை அதில் இயல்பாக சரிவிகிதமாகக் கலந்துள்ள உடல் வளர்ச்சிச் சத்துக்கள் (புரதம்), சக்தி தரும் சத்துக்கள் (கார்போ ஹைட்ரேட்டுகள், கொழுப்பு) ஆரோக்கியமான பாதுகாப்புச் சத்துக்கள் (வைட்டமின்கள்) ஆகும் (உதாரணமாக தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள், வைட்டமின் 'சி' குறைவினால் ஏற்படும் ஸ்கர்வி நோயால் பொதுவாக பாதிக்கப்பட மாட்டார்கள்) முலைப்பால் உண்ட குழந்தை பாதுகாப்பையும் தன்னம்பிக்கையையும் பெறுகிறது.

காரணம், பசியைத் தணித்திட குழந்தை முலைப்பாலை உறிஞ்சும் போது, நீங்கள் குழந்தையை அரவணைத்துப் பாசத்தையும் சேர்த்தல்லவா பாலூட்டுகிறீர்கள்.

உலகளாவிப் பிரபலமடைகிறது

அதன் ஊட்டச்சத்து மற்றும் இதர நலன்கள் விரிவாகவும் அதிகமாகவும் உணரப்படுவதால் மேலை நாடுகளிலும் கூட முலைப்பால் கொடுத்தல் மிகவும் அதிகமாக பிரபலமாகி வருகிறது.

உங்கள் உடல் நல பாதிப்பு அல்லது பால் பற்றுக்குறை ஆகியவற்றால் நீங்கள் குழந்தைக்கு பால் கொடுக்க முடியாமல் போனால் என்ன செய்வது?

உங்கள் குழந்தைக்கு நீங்கள் சிறந்த 'தாய்ப்பால் மாற்று' தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஸ்ப்ரே ட்ரை செய்யப்பட்ட அமுல் ஸ்ப்ரே

அமுல் ஸ்ப்ரே-நன்கு சமச்சீராக கலக்கப்பட்ட சத்துக்களுடன் கூடியது—பிரதம தரமுள்ள புரதம், ஜீரணிக்க எளிதான கொழுப்பு மற்றும் கார்போஹைட்ரேட்டுகள், சரியாகக் கலந்துள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள்.

ஏற்கனவே கொதிக்க வைத்த வெதுவெதுப்பான நீரில் அதைக் கலப்பது எளிது, முன்னாலேயே அதை பசை போல் தயாரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

பூலன்தேவி சுதந்திர விழா தேவையா?



பூலான்தேவி



உஷா சுப்பிரமணியன்



குல்தீப் மோகன்

○ ஸ்ரீ அசோகன், நாமகிரிப்பேட்டை

? பட்டுக்கோட்டை பிரபாகர் எழுதிய "கோரிக்கை" கதை படித்தீர்களா? உங்கள் கருத்து?

! முதல்தர சிறுகதை எழுத்தாளர் என்று மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறார்.

○ எஸ். அன்புமணி, ஈரோடு

? நீங்கள் அதிகமாக எதிர்த்த கொண்ட தத்துவம் எது?

! ஒரு புதிய சிந்தனையை ரேக் ஸ்ப்ரில் என்பவர் வெளியிட்டிருக்கிறார்: தேசபக்தி என்று பேசக் கேட்க நன்றாயுள்ளது. ஆனால் இதில் உள்ள ஆபத்தை யாரும் சிந்திப்பதில்லை. தேசபக்தி உலக நலனுக்கு எதிராக வேலை செய்தால் அதைப் போற்ற முடியுமா? மனித குலத்தை நேசிப்பவன் தேச பக்தியால் மட்டும் திருப்தி அடைய முடியுமா? மக்கள் தேச பக்தி என்ற கோஷத்தால் கவரப்படாமலிருந்தால் எத்தனையோ தேவையற்ற யுத்தங்களைத் தவிர்த்திருக்கலாம். லட்சக் கணக்கான உயிர்கள் பலி யாகாமல் தடுத்திருக்கலாம்.

○ சுஜாதா பிரியன், ஒன்னிபாளையம்

? இந்தியாவின் பொருளாதார வீழ்ச்சிக்கு யார் காரணம்?

! உலகிலேயே மிக அதிகமான வரி விதிப்புக்கு இந்தியத் தொழில் துறையை உள்ளாக்கியிருக்கும் இ. காங்கிரஸ் அரசின் பொருளாதாரக் கொள்கைதான். பொது லிமிடெட் கம்பெனிகளுக்கு வரி,ஸர்சார்ஜ் சேர்த்து 70 சதம்; தனியார் லிமிடெட் கம்பெனிகளுக்கு 80 சதம் எனில், (1) புதிய தொழில் முதலீடுகள் அல்லது விரிவாக்கம் எப்படி சாத்தியமாகும்? (2) வரி ஏய்ப்புத்தான் அதிகரிக்கும்; கறுப்புப் பணம் பெருகும். எனவே இந்தக் கொள்கை இரட்டிப்பு வேகத்தில் பொருளாதார வீழ்ச்சிக்கு வழி வகுக்கிறது.

○ இ. பூபாலசிங், சென்னை-35

? 'சார்லஸ் புரோனியோ என்ன, அரசியலில் குதிக்கப் போவதாக அக்கறுத்திருரா?' என்று அதிசயிமிருக்கிறீரே, 'பத்மஸ்ரீ வாழ்விலே...' கட்டுரையில் இடம்பெற்றுள்ளவர்கள் எல்லாம் அம்மையாரை மிரட்டியவர்களா?

! அம்மையார் பெயரை இதில் இழுப்பவர் நீர்தான். அதுபோக, நடிப்புக் கலையில் மாமேதைக்கு – பக்க பலமாய் உடனிருப்பவருக்கு – பத்மஸ்ரீதான்; எதிர்க்கப் போவதாக எதிர்பார்க்கப் படுகிறவருக்கு பத்ம பூஷண். அப்புறம் நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

○ எஸ். மோகன், மே. மாம்பலம்

? லாட்டரி சீட்டு முடிவை எதிர்பார்ப்பவன், பரீக்ஷை முடிவை எதிர்பார்ப்பவன், தேர்தல் முடிவை எதிர்பார்ப்பவன் - யாருடைய எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கும்?

! தேர்தல் முடிவும் பரீட்சை முடிவும் சாதகமாயிருப்பினும் புதுப்பிரச்னைகளைத் தோற்றுவிக்கக் கூடியவை. லாட்டரி முடிவு அப்படி யல்ல. எனவே இதில்தான் எதிர்பார்ப்பு அதிகமாயிருக்கும். அதனாலேயே அதிகமாக மக்களுக்குத் தீமை செய்வது.

○ எம். சம்பத், வேலாயுதம் பாளையம்

? அரசியல், பத்திரிகை, திரைப்படம் - மூன்றில் மக்களை ஏமாற்றுவதில் முதலிடம் வகிப்பது எது?

! பத்திரிகைக்காகவும் திரைப் படத்துக்காகவும் காசு கொடுக்கு முன்னரே பதிலுக்கு நமக்கு என்ன பலன் கிடைக்கும் என்று ஓரளவேனும் புரிந்து கொண்டு விடலாம். அப்புறம் காசு கொடுத்து வாங்குவதும் வாங்காததும் நம் இஷ்டம். ஆனால் அரசுக்கு வரியைக் கண்ணை மூடிக் கொண்டு கட்டாயமாகத் தந்துவிடுகிறோம். பதிலுக்குக் கிடைப்பது என்னவோ விலைவாசி உயர்வும், துயரமும் ஏமாற்றமும் தான்.

○ கே. ராஜகோபாலன், மதுரை

? குமாரவைத் திறந்தா தண்ணி வரலே, ஸ்விட்சைப் போட்டா லைட் எரியலே, காசோட கடைக்கும்

போறு அரிசி கெடைக்கலே. ரெண்டு கை பத்தலே ஒங்க ரெண்டு கையும் தரீங்களா அடிச்சுக்க?

! நீங்க வேற. ஏற்கனவே இதே காரணங்களுக்காகவும் இப்ப கெரசின் விலையும் ஏறிட்டதுக்காகவும் தலையில் போட்டுக்கிட்டதிலே கைங்க ரெண்டும் விண் விண்ணுனு தெறிக்குது.......

O ஆ. சந்திரசேகரன், லால்குடி ★

? கொள்ளைக்காரி பூலன்தேவி சரணடைந்ததற்குக் கோலாகல விழா தேவையா?

! பூலன்தேவிகள் உருவாக வழி வகுக்கும் வறுமையை எண்ணித் தலைவர்கள் வெட்கப் படவேண்டும், விழா எடுக்கிறார்கள். ஏழைமையில் உழன்ற பூலன் தேவி பலர் கரங்களில் பலவித ஹிம்சைகளை அனுபவித்தாள். விக்ரம் மல்லா என்ற கொள்ளைக்காரனின் ஆசை நாயகியான பிறகுதான் தனக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கப் படுவதை உணர்ந்தாள். ஆக, அவன் இறந்த பிறகு அவளே அக்கொள்ளைக் கூட்டத்தின் தலைவியானதிலும் தன்னை இழிவு படுத்திய கிராமத்தில் புகுந்து கொலை, கொள்ளைகளை நடத்திப் பழி வாங்கியதிலும் வியப்பென்ன? ஒரு சோகக் கதையின் நாயகியான பூலன் தேவி கண்டனத்துக்கு மட்டுமின்றி அனுதாபத்துக்கும் உரியவள். அவள் சரணடைந்ததில் பெருமைப்பட யாருக்குமே அருகதையில்லை.

O ஆர். கே. லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்

? உஷா சுப்பிரமணியன் இந்திய எழுத்தாளர் பிரதிநிதியாக அமெரிக்கா சென்று வந்தது குறித்து.....?

! அமெரிக்கர்களின் செக்ஸ் வாழ்க்கை பற்றி நிறையத் தெரிந்து கொண்டு திரும்பியிருக்கிறார் என்பதை ஒரு கட்டுரை உணர்த்துகிறது. அதைத் தவிர வேறு ஏதாவது உபயோகமாகப் புரிந்து கொண்டிருந்தால் சரி.

O மு. பாஸ்கர், புதுவை

? சிவாஜியை மிஞ்சுவாரா பிரபு?

! ஆலமரத்தின் அடியில் — நிழலில் வேறு பயிர் செழிக்குமா?

O இ. வயிரபதி, கோநகர்

? திருச்செந்தூரில் யார் வெற்றிபெற வேண்டும்?

! யார் வெற்றி பெறுவார்கள் என்று கேட்காமல் யார் வெற்றி பெற வேண்டும் என்று கேட்டதற்கு நன்றி. பால் கமிஷன் அறிக்கையை மக்கள் மன்றத்தில் வைத்த தி.மு.க வெல்ல வேண்டும். அதை அலட்சியப் படுத்திய அ.தி.மு.க. தோற்க வேண்டும்.

O சி. ராமகோபால், திருவாரூர்

? வெள்ளி விழா கொண்டாட இருக்கும் திரு ஜெயராஜ் அவர்களைப் பற்றி ஒரு வரி கூறுங்கள்?

! பத்திரிகை ஆசிரியர்களின் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான மேதை.

O எம். நாகேந்திரகுமார், ஊரூர்

? நீங்கள் கடைசியாகப் படித்து முடித்த புத்தகம், எது?

! ஜஸ்டிஸ் எஸ். மோகன் எழுதிய Wild Blooms என்ற ஆங்கிலக் கவிதைப் புத்தகத்தில் படித்ததை விடப் பார்த்தது அதிகம். வழவழ காகிதம், வண்ணப் புகைப் படங்கள். மேலட்டையும் சேர்த்து 32 பக்கங்கள். விலை ரூ. 35. பெரும் ஆறுதல் விற்பனைத் தொகை நல்ல காரியத்துக்குப் (மண்டே சாரிடி கிளப்) பயன்படுகிறது என்பதே. விலாசம்: பூரம் பிரசுரம், 6, ஜம்புலிங்க நாயக்கர் தெரு. சென்னை-34.



✖ ஜெயராஜ்



✖ சிவாஜி



✖ பிரபு

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
ஆ. சந்திரசேகரன்,
43, புது அக்ரஹாரம்,
லால்குடி-621 601.

நீங்கள் கேட்டவை

தராசு



தலைநிமிர வைத்த குனியமுத்தூர்



சுமார் அறுபது வயதுள்ள நோயாளி ரங்கசாமி, எடையார்பாளையத்திலிருந்து வந்திருக்கிறார். பால் வியாபாரம் செய்து நொடித்துப் போய், நாலு வாடகை சைக்கிள்கள் வைத்துப் பிழைப்பு நடத்துகிறார்.

இரண்டு மைல் தொலைவிலிருக்கும் கண்டைக்காய்முத்தூரிலிருந்து வந்திருக்கும் பெரியவர், சாதாரணமாகக் கோவை 'பெரிய' ஆஸ்பத்திரியில்தான் வைத்தியம் பார்த்துக்கொள்வார்.

இரண்டு கல் தொலைவிலிருக்கும் மாச்சம்பாளையத்திலிருந்து வந்திருக்கும் பத்தாவது படிக்கும் மாணவன், காதில் சீழ் வடிகிற தொல்லையோடு, தொண்டையிலிருந்து குரல் கம்மிப் போய்ப் பேச்சே எழாமல் அவதிப்படுகிறான்.

ஆறு மைல் தூரத்திலிருக்கும் கந்தையக்கவுண்டன்சாவடியிலிருந்து வருகிறார் கங்காதரன். கழுத்திலும் மார்பிலும் நீர் கட்டிக்கொண்டு சொறிச்சல் வந்து படுத்துகிறது அவரை. இருமினால் கபம் கொட்டுகிறது.

குனியமுத்தூரை ஒட்டிய கிராமத்திலிருந்து கஸ்தூரி, இருமலும் சளியும் பிடித்துள்ள தன் குழந்தை மருட்சியுடன் வந்திருக்கிறாள்...

இவர்கள் எங்கே வந்தார்கள்?

கோவையை அடுத்த குனியமுத்தூரில், மதுக்கரை சாலையில், கருணாபுரத்தில்.

என்றைக்கு?

பிப்ரவரி ஆறு, ஞாயிற்றுக் கிழமை.

எதற்கு வரவேண்டும்?

ஜி. வேங்கடசாமி நாயுடு – கஸ்தூரிசாமி டிரஸ்ட், விசுவ ஹிந்து பரிஷத், காசி காமகோடி மெடிகல் சென்டர், கோவை மிட்-டவுன் ரோடரி கிளப் ஆகிய நான்கு ஸ்தாபனங்கள் இணைந்து நடத்திய இலவசச் சிகிச்சை முகாமில், பல்வேறு துறையைச் சேர்ந்த நூறு டாக்டர்கள் அக்கறையுடன் கவனிக்கும்பொழுது இந்த நோயாளிகள் வராமல் இருப்பார்களா?

அதிகாலையிலிருந்தே சுப்ரபாத இசையும், நாதஸ்வர கொட்டுமேள ஓசையும் அந்த இடத்தின் புனிதத்தைக் கூட்ட, கருணாபுரம் வேங்கடலட்சுமி மெடிகல் சென்டர் காம்பவுண்டுக்கு வெளியே, பல ஏழை எளிய மக்கள் ஒழுங்கான வரிசையில் பொறுமையோடு காத்திருந்தனர். வாழையும் தோரணமும் வண்ணப் பந்தலுமாகக் கல்யாண மண்டபக் களை கட்டியிருந்தது!

பத்து மணி அளவுக்கு இந்த முகாமுக்கு முடுக்கு விசையான டாக்டர் ரமணி நோயாளிகளை இனியும் காத்திருக்க வைக்க வேண்டாம் என்று தமது வைத்திய நண்பர்களைத் தத்தம் பிரிவுகளில் சிகிச்சையைத் துவக்கச் சொன்

றார். (ஒரு வேண்டுகோள்: இது முதல் முகாம் அல்ல. ஒன்பதாவது முகாம். நீண்ட பேச்சாளர் பட்டியலும், பேச்சாளர்களின் மிகநீண்டசொற்பொழிவுகளும் தவிர்த்திருக்க முடியாதோ? இரண்டு மணி நேரம் நோயாளிகளைக் காக்க வைப்பானேன்?)

ஒழுங்கான வரிசை மெதுவாக நகர்கிறது.

முகாமில் இல்லாத பிரிவே இல்லையெனலாம். புற்று நோய், மாதர் மருத்துவம், குழந்தைகள் சிகிச்சை, எலும்பு முறிவு, நரம்பியல் பிரிவு, மன நோயாளிகள் பகுதி, பொது மருத்துவம் (இங்கேதான் கூட்டம் அதிகம்) பல் வைத்தியம், காது–மூக்கு–தொண்டை, நீரிழிவு கண் வைத்தியம், பொதுவான உடல் பரிசோதனைக் கூடம் என்று எத்தனை வகை நோய்களும் சிகிச்சை முறைகளும் உண்டோ, அத்தனை பிரிவுகள்! அத்தனையிலும் குழுக்களாகச் செயல்படும் டாக்டர்கள், ஸ்பெஷலிஸ்டுகள்!

நுழைந்தவுடன் பதிவு செய்து கொண்ட நோயாளிகளுக்கு அடையாள அட்டையும், எந்தப் பிரிவுக்கு அவர்கள் போக வேண்டும் என்பதும் குறித்துக் கொடுக்கப் படுகிறது.

சிகிச்சைக்குப் பதிவு செய்து கொண்ட நோயாளிகள் பட்டியலில் தமிழர்கள், தவிர, ஏராளமான கிறிஸ்துவர்களும், முஸ்லீம்களும் இருந்தனர். நோய்க்கு மதம் ஏது, ஜாதி ஏது என்ற பரந்த மனப்பான்மையோடு செயல்பட்ட விகல ஹிந்து பரிஷத்துக்கும், காஞ்சி காமகோடி மெடிகல் சென்டருக்கும் சபாஷ் போடலாம்.

இந்த ஒரு நாள் முகாமில் என்ன சாதித்து விட முடியும்? அப்புறம் தொடர் சிகிச்சைக்கு –(follow up) என்ன வழி?

இருக்கிறது. தொடர்ந்து வர வேண்டியவர்கள் அதே காம்பவுண்டுக்குள் அமைந்திருக்கும் வெங்கடலட்சுமி மெடிகல் சென்டரில் சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். இந்த சென்டரை விரைவிலேயே பெரிய மருத்துவமனையாக மாற்றத் திட்டங்கள் இருக்கின்றன.

சுமார் இருநூறுக்கு மேற்பட்ட மலை ஜாதியினருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த முகாமில், வாளையார் பகுதியிலிருந்து இவர்கள் இங்கே வரவேண்டும் என்றால் அதற்கு பஸ் சார்ஜ் கொடுக்கக் கூட இயலாதவர்கள். கோவை ஆர்ய வைத்திய பார்மஸி அதிபர் தமது உதவியாளரைக் கூப்பிட்டார். "வெளியே பஸ் நிறுத்தியிருக்கிறது. டிரைவரை எடுக்கச் சொல். எல்லோரையும் நாற்பது–ஐம்பது பேராகக் கூட்டிக்கொண்டு வந்து, சிகிச்சை முடிந்ததும் அவர்களைக் கொண்டு விடு!" என்று உத்தரவிட்டார்.

இந்த முகாமில் ஆர்த்ரைடிஸ், சரும நோய்கள், அமிபயாஸிஸ் ஆகிய நோய்களுக்கு ஆயுர்வேத சிகிச்சை தேவைப்பட்டவர்களுக்கு இந்த ஸ்தாபனம் உதவியது.

நாள் முழுக்க நடக்கிற இந்த மருத்துவ முகாமில், சிகிச்சை மட்டுமல்ல, ஏராளமான மருந்துகளும் இலவசமாகவே வழங்கப்பட்டன. இதற்காக சுமார் பதினைந்து பிரபல மருந்துக் கம்பெனிகள் தம் தயாரிப்புக்களை நன்கொடையாக அளித்திருந்தன. விகல ஹிந்து பரிஷத், மூவாயிரம் பேருக்கும் இலவச உணவு வழங்கியது. கூடவே ஊட்டச்சத்து நிறைந்த புரோடினக்ஸ் பானம் ஒரு கப்!

குழந்தைகளுக்காகக் குறைந்த செலவில் ராகி–கம்பு ஆகியவற்றிலிருந்து சத்துணவு தயாரிப்பதில் வித்யாவிகாசினி பள்ளி அக்கறையோடு தாய்மார்களுக்கெல்லாம் ஆலோசனை அளித்தது.

முகாமில் முக்கியமாகக் கண்ணில் பட்ட அம்சம்: பங்கெடுத்துக் கொண்ட பல டாக்டர்களின் சராசரி வயது 35–40தான்.


–சாருகேசி

ஒரு தேர்தல் சதி!

டில்லி நகரத் தேர்தல்கள் நடப்பதற்கு முதல் நாள் பிரசாரங்க ளெல்லாம் ஓய்ந்து விட்டன. அன்று இரவு பதினொரு மணி... டில்லி பிரதேச (இ) காங்கிரஸ் கமிட்டி அலுவலகம். திடீரென்று ஒரு இளம் வாலிபர் ஒரு டெம்போவில் அங்கு வந்து இறங்கினார். அவர் அங்கிருந்த ஆட்களிடம் "இந்த டெம்போவில் சுவரொட்டிகள் இருக்கின்றன. இவைகளை இரவோடு இரவாக ஒட்ட வேண்டும். குறிப்பாக (இ) காங்கிரஸ் வேட்பாளர்களின் வீடுகளுக்கு வெளியே ஒட்டிவிட வேண்டும்" என்றார். உடனே அவர்கள் போஸ்டர்களை ஒட்டக் கிளம்பி விட்டார்கள். 5000 சுவரொட்டிகளை ஒட்டினார்கள். இரவோடு இரவாக, எல்லா (இ) காங்கிரஸ் வேட்பாளர்கள் வீட்டுக் காம்பவுண்ட்சுவர்களிலும் ஒட்டிவிட்டார்கள்.

மறு நாள் காலை.... பிரதேச (இ.) காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்துக்கு ஏகப்பட்ட டெலிபோன் கால்கள்! பேசியவர்கள் எல்லோரும் (இ. காங்கிரஸ் வேட்பாளர்கள்தான்! "எங்கள் வீட்டுக்கு வெளியே பாரதீய ஜனதா கட்சியின் போஸ்டர்களை ஒட்டியிருக்கிறார்கள்!" என்று குறைப்பட்டார்கள்! அப்புறம்தான் புரிந்தது டெம்போவில் போஸ்டர்களுடன் வந்து இறங்கியவர் மாற்றுக் கட்சி வாலிபர் என்று!

(டெக்கான் ஹெரால்டிலிருந்து)
அனிதா ராமச்சந்திரன்



இரட்டை விமர்சனம்!



சுபமுகூர்த்தம்

[இரண்டு படங்களுக்குமே மையப் பிரச்னை 'கல்யாணம்'தான். என்றாலும் இரண்டும் கொள்கையால் வேறுபட்ட படங்கள். 'பிரம்மச்சாரிகள்' படத்தில் பூர்ணம் விசுவநாதன் சுலக்ஷணாவுக்கும் தன் மகனுக்கும் கல்யாணமே நடக்கக் கூடாது என ஒத்தைக் காலில் நிற்கிறார். 'சுபமுகூர்த்தம்' பிரசன்னா அதற்கு நேர் விரோதம். சுலக்ஷணாவுக்கு ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது கல்யாணத்தை நடத்தியே காட்டுவேன் எனக் கங்கணம் கட்டிக்கொள்கிறார். அவருக்குத் தோல்வி, இவருக்கு வெற்றி.]

● பூர்ணத்தின் கெடுபிடித்தனத்துக்குக் கதையில் நியாயம் இல்லை.

● பிரசன்னாவின் குரலில் நியாயம் தெரிகிறது — சாமிக்கண்ணு தொலைத்த பணப்பை தன்னிடம் கிடைக்க, அதை அன்னிடம் சேர்ப்பதற்குள் தன் குடும்பத்தில் எழுந்த மானப் பிரச்னைக்கு அந்தப் பணத்தைச் செலவழித்து விடுகிறார். அதற்குள் சாமிக்கண்ணு பணம் தொலைந்துபோன அதிர்ச்சியால் தற்கொலை செய்துகொண்டு விடுகிறார். அவருடைய மகளை மணக்க மறுக்கும் முறைப்பையனைச் சுற்றி வளைத்துப் பரிசம் போட வைத்துக் கடைசியில் கல்யாணத்தையும் முடித்துவைப்பதற்குள் அவர் படுகிற பாட்டைப் படமாகச் சித்திரித்திருக்கிறார்கள்.

● 'பிரம்மச்சாரிகள்' எஸ். வி. சேகருக்கு இல்லாத கலகலப்பு 'சுபமுகூர்த்தத்'தில் கூடி விடுகிறது. அதில் அப்பாவுக்குத் தெரியாமல் வனிதாவைக் காதலிப்பதில் உள்ள சுவையை விட இதில் கல்யாணத்துக்கும் அதற்குப் பிறகு சாந்தி முகூர்த்தத்துக்கும் அவர் பறக்கிற பறப்பில் சுவை கூடி நிற்கிறது. 'சேகரத்தன'ங்கள் ஏராளம்! ஏராளம்!

● பூர்ணம் நடிப்பில் குறையில்லை. என்றாலும் ஆரம்பம் முதல் அவர் போடும் 'எதிர்கோடு'படம் பார்ப்பவர்களுக்கு எரிச்சலூட்டுகிறது.

● பிரசன்னா திருமணத்தை நடத்தி முடிப்பதற்குள் இரண்டு 'பந்தல்'போட்டிருக்கிறார். ஒன்று 'வாய்ப் பந்தல்' மற்றொன்று 'நடிப்புப் பந்தல்'. இரண்டுமே இதம்.

● 'பிரம்மச்சாரி' சுரேஷுக்குத்தனது அமுமூஞ்சித்தனமான நடிப்புக்குத் தகுந்த மாதிரி ஒரு காரெக்டர். அப்பாவை எதிர்க்கும் ஒரே ஒரு இடத்தில் தேவலாம்.

● 'சுபமுகூர்த்த' வயிற்றெரிச்சல் வரதராஜனைப் பார்த்தால் வயிறெல்லாம் பற்றிக் கொண்டு எரிகிறது. நம்ம விசுவோட அண்ணாவா? எம். ஆர். ராஜாமணியா? அத்தனை சீக்கிரம் இத்தனை ஜோரா நடிக்க ஆரம்பிச்சுட்டாரா? நம்பவே முடியலியே'' என வயிறு எரியவைக்கிறார்.

● இரண்டு சுலக்ஷணாவில் எந்த சுலக்ஷணா தேவலாம்? கபில்தேவ் கவரில் இருக்கிற பெ கா. கா. காதலைத் திக்கித் திக்கிப் படிக்கிறாரே அந்த 'சு'.

● சுவர்ணமூர்த்தி கட்டைப் பிரம்மச்சாரிகளுடன் மூட்டி மோதி டைரக்ட் செய்திருப்பதாலோ என்னவோ 'சாரி' சொல்ல வைக்கிறார்.

● ரகு அப்படியில்லை. திருமணக் காட்சியைக்கூட சற்று வித்தியாசமாகப் படமாக்கியுள்ளார்.

● கே. கண்ணன் (கவர்ச்சி வில்லன் அல்ல) எழுதிய உரையாடல்கள் திருமண மந்திரம் போல் கணீரென (பிரசன்னா குரல் மூலம்) ஒலிக்கும்போது அட்சதை போட்டு அனைவரையும் வாழ்த்தத் தோன்றுகிறது.

● பிரம்மச்சாரிகளுக்கு அத் தகுதி இல்லை.

-நிரைஞானி

பிரம்மச்சாரிகள்



சிகரெட் பிடிப்பவர்களுக்கு மூன்று கடிதங்கள்





1

அன்புள்ள ஆசிரியருக்கு,
இத்துடன் இருபது ஆண்டுகளுக்கு முன் ராஜாஜி, என் மனைவிக்கும் என் மாமனாருக்கும் எழுதிய கடிதங்களின் நகலை இணைத்துள்ளேன். தங்கள் வாசகர்களில் சிகரெட் பழக்கத்துக்கு அடிமையானவர்களுக்கு உபயோகமாயிருக்கலாம்.
தேனி வைத்தியநாதன்.

2

அன்புள்ள குழந்தாய்,
உன் கடிதம். உன் அப்பாவை ஒரு கெட்ட பழக்கத்திலிருந்து காப்பாற்றிவிட வேண்டும் என்று என் உதவியை நாடியிருக்கிறாய்.
ஆனால் அவர் குழந்தைகளாகிய நீங்களும், டாக்டரும், தோல்வி அடைந்த காரியத்தில் நான் வெற்றி பெறப் போகிறேனா?
இருப்பினும் நீ விரும்பியபடியே உன் அப்பாவுக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.

உண்மையுள்ள
சி. ராஜகோபாலாச்சாரி

பெறுனர்:
குமாரி கே. வி. ராஜம், மதுரை.

3

அன்புள்ள நாதன்,
உங்களுக்கு எழுதுவதற்காக என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். அதிகமாக சிகரெட் பிடிக்கும் பழக்கத்திலிருந்து உங்களை விடுவிக்க நான் உதவ வேண்டும் என்று உங்கள் குமாரத்திகள் என்னைக் கோரியுள்ளார்கள். சுவாசக் குழலின் உட்புறம் உள்ள மியூகஸ் மெம்பிரேன் என்ற மெல்லிய ஜவ்வு உறுப்புகளுக்குப் புகைப் பிடித்தலால் ஏற்படும் தீங்கு ஒருபுறமிருக்க, புகைபிடித்தால் புற்று நோய் வரும் என்று உலக டாக்டர்கள் ஒருமித்த தீர்மானமான கருத்து தெரிவித்திருப்பது மறுபுறமிருக்க, இவற்றுக்காக இல்லாவிடினும் உங்கள் அருமைக் குமாரிகளை மகிழ்விப்பதற்காகவேனும் தாங்கள் புகை பிடிப்பதை விட்டுவிடலாம்.
புகை பிடிப்பதை ஒரேயடியாக விட்டுவிடுவது உங்களுக்குக் கஷ்டமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். எனவே ஒரு நாளைக்கு மூன்று சிகரெட்டுகளுக்கு மேல் பிடிப்பதில்லை என்று கட்டுப்படுத்திக்கொள்ளுங்கள். அவற்றை எப்போது பிடிக்கலாம் என்பதை நீங்களே தீர்மானிக்கலாம். மற்ற சிகரெட்டுகளைப் பாக்கெட்டோடு பூட்டி வைத்துவிடுங்கள்.
உங்களால் முடியுமானால் ஒரேயடியாக விட்டொழித்துவிடுவது நல்லதுதான். இதில் உள்ள சிரமம் மனோதத்துவ ரீதியானதுதான். மனத்தைத் திடப்படுத்திக் கொண்டால் ஒரே வெட்டில் இப்பழக்கத்தை அடியோடு வெட்டி எறிந்து விடலாம்.
தீர்க்க முடியாத தாகத்தை உருவாக்கும் மதுவைப் போன்றது அல்ல இது.
ஆண்டவன் உங்களுக்கு ஆசி நல்கட்டும்.

தங்கள் உண்மையுள்ள
சி. ராஜகோபாலச்சாரி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press Race Course Road
Guindy, Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: P.S. Mani
Editor: K. Rajendran

ஜலதோஷம் உங்கள் நாளையே கெடுக்க அனுமதிக்காதீர்கள்



ஜலதோஷத்தைப் போக்கலாம்

நல்ல ஒரு நாளையே கெடுக்கும் மூக்கு ஒழுகுதல் அல்லது மூக்கடைப்பு, தலைகனம், தொண்டைக்கட்டு மற்றும் மார்சளி போன்ற வற்றுடன் உள்ள ஜலதோஷத்திலிருந்து நிவாரணம் பெற ஒரு வழி இருக்கிறது.

ஜலதோஷ மருந்து கொண்டு தாக்கிடுங்கள்

மற்ற உபாதைகளைப் போன்றே இதற்கும் சிகிச்சையளித்தால் போதாது. பாதிக்கப்பட்ட பாகங்களிலெல்லாம் ஒரே சமயத்தில் செயல் புரியவல்ல விசேட ஜலதோஷ மருந்தையே உபயோகியுங்கள்.

கோல்டரின் ஜலதோஷத்திற்கு மட்டுமே

உங்கள் சுறுசுறுப்பைக் கெடுக்கும் அறிகுறிகள் அனைத்தையும் போக்குகிறது —கோல்டரின். இதிலுள்ள விசேட மருந்துப் பொருட்கள் ஜலதோஷத்தினால் பாதிக்கப்பட்ட எல்லா பாகங்களிலும் ஒருங்கிணைந்து செயல்புரிகின்றன.

ஜலதோஷத்தினால் பாதிக்கப் படும்போது ஜலதோஷ மருந்தையே சாப்பிடுங்கள்.



கோல்டரின்

விசேட ஜலதோஷ மருந்து

CASBC-105-21[illegible] TAM

REGISTERED No. M. 4362
Registered as a Newspaper in Sri Lanka

கிளியர்•டோன்

உபயோகிப்பவர்கள் முகமலரக் கூறுவதைக் கேளுங்கள்:



"முன்னேவிட சிகப்பாகி விட்டேன் என்கிறள் என் மாமன்மகள்...அவளே பாராட்டுவதென்றால் அது பெரிசுதான்."
—டெய்ஸி நாம்தார்
நாடக நடிகை



"கடந்த 4 வாரமாக கிளியர்• டோன் உபயோகித்து வருகிறேன், மாசு மறு எல்லாம் கிட்டத்தட்ட மறைந்தே போச்சு"
—ஷெர்லுல் படேல்
மாணவி



"வெய்யிலில் அலையும்படியான வேலே எனது. கிளியர்•டோன் தொடங்கினது முதலோ, உடம்பு கறுக்கவே காணோம்"
—பாலெட் சல்தாஹு
மார்க்கெட் நிலர்சர்



"கிளியர்•டோன் என் சருமத்தை மழமழப்பாக ஆக்கியிருக்கிறது— பாருங்க, முழங்கைப் பகுதிகளைக் கூட"
—ராஜம் ராஜாமணி
இல்லத் தலைவி

பரிபூரண சிகப்பழகு சாதன க்ரீம்

இதுபோல் ஆயிரமாயிரம் பேர் மேனியில் பேசுது கிளியர்•டோன். அவர்கள் பார்க்காத க்ரீமா, லோஷனு, மூலிகை மருந்தா... இல்லே, எதுவுமே பலிக்கவில்லே. பிறகுதான் கண்டுகொண்டனர் ஒரு சம்பூரண சிகப்பழகு சாதன க்ரீம்: கிளியர்•டோன்.

பன்னாட்டுலக மருந்தாராய்ச்சிப் பயனும்—விஞ்ஞான ஆக்கமுறை சிகப்பழகு க்ரீம்—இதனை உங்களிடம் கொணருவோர் நிகோலஸ் லெபாரடரீஸ் இந்தியா லிமிடெட். இந்தியாவில் கிடைக்கிற வேறெந்த க்ரீமிலும் இல்லாத தனிச் சிறப்புப்பொருள் அடங்கியது.

கிளியர்டோன் இயற்கை வழியில் இயங்கி, மேனிமீது மலரவைக்குது கருகிசு சிகப்பழகை, மாசு மறு நீக்குது. கோடையிலும் குளிரிலும், ஈரத்திலும் வாட்சியிலும் வாடாத வாழைத்தண்டு மென்மையினை வழங்குகிறது கிளியர்•டோனில் உள்ள விசேஷ ஈரச்சத்து.

மாறுவீர் இன்றே—மாசில்லாது நிலைபெறும் சிகப்பழகுக்கு—இனி என்றும் கிளியர்•டோன். காரணம், வெயில் பட்டு உடம்பு கறுக்கா வண்ணம் சூரிய அல்ட்ரா-வயலெட் கதிர்களைத் தடுக்கவும் செய்கிறது கிளியர்•டோன்.

பாரெங்கும்பலகோடி அழகுமாந்தர் பயன்கண்ட வழி உமக்கே- உபயோகிப்பீர்வேளாவேளை கிளியர்•டோன்



உயரிய ஃபார்முலா
ஓங்கிய சக்தி

daCunha NICL/20/82–TM

சிகப்பழகு ரகசியம்— இயற்கையாய் உமக்கே

கிளியர்•டோன்
பாரிஸ் . லண்டன் . நியூயார்க்